

கோகுலம்

GOKULAM
ஜூலை '92 ரூ. 3.00



OKAY, NOW CALL THAT HARE!!



The kind of footwear you need to crush challenges and obstacles. Shoes that have superior cushioning impact so that the shock is absorbed in the shoe rather than through your legs and body.
Action 'Fast Lane' Footwear—Shoes that work with your determination and strong will.



AIR



SWEET-16

action®




1992 ஜூலை மாத இதழ்
மலர் : 10 இதழ் : 6

கோகுலம்





அருமைச் சிறுவர் சிறுமியரே,



புதிய வகுப்பு, புதிய ஆசிரியர்கள், புதிய நண்பர்கள், புதிய பாடங்கள் என்று எல்லாமே புதிதாக அமைந்திருக்கும் சூழ்நிலையில் நீங்கள் புது உற்சாகத்துடன் இருப்பீர்கள். பழைய ஆசிரியர்கள், பழைய நண்பர்களை மறக்கவே கூடாது. கண்ணபிரானுக்குப் பெருமை கம்சனை வென்று, கீதை அருளியதால் மட்டுமல்ல; ஏழை குசேலனைக் கடைசிவரை மறக்காது இருந்த நட்புணர்வுக்கும்தான்.

பெற்றோர்களின் ஊர் மாற்றம் காரணமாகவோ இல்லை வேறு காரணமாகவோ உங்களில் சிலர் ஊர் விட்டு ஊர் வந்து புதிய பள்ளிகளில் சேர்ந்திருப்பீர்கள். உங்களுடைய அனுபவங்கள் எல்லாமே புதிதாக இருக்கும் இல்லையா? அவற்றை ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி கோகுலத்திற்கு அனுப்புங்களேன். சுவையானவற்றை வெளியிடுகிறோம்.



விடுமுறை என்றாலே பயப்படும் அளவுக்கு விடுமுறைப் போட்டிகளில் ஆயிரக்கணக்கில் பங்கு கொண்டு அயரவைத்து விட்டார்கள். உங்கள் மகிழ்ச்சிதானே எங்கள் மகிழ்ச்சி. ஏராளமான சிறுவர்கள் விடுமுறையை வீண் போக்காது கோகுலத்திற்கு கதை, கட்டுரை, பாடல் என்று வரிந்து கட்டி எழுதியிருக்கிறார்கள். இவை பரிசீலனையில் உள்ளன. தகுதியானவை கண்டிப்பாக கோகுலத்தில் வெளியாகும்.

'நற்பணி செய்தோம்' பகுதிக்கு இன்னமும் எழுதியனுப்பலாமா என்று ஏராளமானவர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். தாராளமாக அனுப்பலாம். முழு முகவரியை எழுதுங்கள். அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதுங்கள்.

போன இதழில் பிருந்தாவனக் கவியரங்கமும், கேளுங்கள் பகுதியும் இடமின்மையால் வெளிவரவில்லை. இதைக் குறித்து எத்தனை பேர் வருத்தம் தெரிவித்து எழுதியிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும் போது உங்கள் ஆர்வம் புரிகிறது. இனி இப்படி நடக்காது. மகிழ்ச்சி தானே?

புதிய தொடர்கதைக்கு ஏகப்பட்ட பலமான வரவேற்பு. பரதன் செய்யவுள்ள அடுத்த சாதனைகளை அறிய நீங்கள் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதை உங்கள் கடிதங்கள் காட்டுகின்றன. பரதன் உங்கள் மனதில் இடம்பிடிக்கப் போகிறான் என்பது மட்டும் உண்மை.


மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.



இந்த இதழில்

1. அருமைச் சிறுவர் சிறுமியரே 1
2. இந்த இதழில் 2
3. பலே ராமசாமி 4
4. தன்னம்பிக்கை 6
5. கேட்கட்டுமா டாக்டர்? 8
6. பெயரிடும் விழா 10
7. துரத்தி வந்த கரடி 12
8. வனவிலங்கு கணக்கெடுப்பு 16
9. விமான விசித்திரங்கள் - சித்திர அறிவியல் 17
10. கேளுங்கள் சொல்லப்படும் 21
11. ஊசிக்கு ஒளிந்த ராஜா 25
12. பிருந்தாவனக் கவியரங்கம் 30
13. சிரிப்... 33
14. எத்தனை கொக்குகள்? 34
15. மரம் தந்த வரம் 35
16. மாவீரன் மேகநாதன் சித்திரக்கதை 41
17. வெற்றி கொள்! சித்திரக்கதை 57
18. எந்த மூக்கு எதற்கு? 58
19. என்ன செய்கிறார்கள்? போட்டி 59
20. ஜப்பானில் விக்னேஷ் 60

முள்ளம் பன்றி எப்படித் தாக்கும்? - பக்கம் 76







மாவீரன் மேகநாதன் - பக்கம் 41



புத்தகங்களுக்கு
டா டா!
- பக்கம் 91



பெயரிடும் விழா
- பக்கம் 10



விமான விசித்திரங்கள்
- பக்கம் 17

21. நூறு ரூபாய் இரகசியம்
- தொடர்கதை 63
22. பிருந்தாவனம் 69
23. உங்கள் நூலகம் 72
24. பதினைந்து - சித்திரக்கதை 73
25. முள்ளம் பன்றி எப்படித்
தாக்கும்? 76
26. சார் தபால் 80
27. பிருந்தாவனக் கதையரங்கம் 82
28. குதிரை புராணம் 88
29. புத்தகங்களுக்கு டாடா! 91
30. ஒலிம்பிக்ஸ் 92
- ஒரு முன்னோட்டம்! 92
31. எவை என்ன செய்யும்? கோடை
விடுமுறைப் போட்டி முடிவு 96

பதினைந்து - பக்கம் 73





குதிரை புராணம் - பக்கம் 88

பலே ராமசாமி!

ராமசாமி தந்திரத்தில் நரியையும் மிஞ்சக்கூடியவர். எமகாதகர். ஒரு பணக்காரர் வீட்டில் வேலை பார்த்து வந்தார். அந்தப் பணக்காரர் பெயர் ஆனந்தன்.

ஆனந்தனுக்கு மாம்பழம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை எழுந்தது. ராம சாமியை அனுப்பி இரண்டு மாம்பழம் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். ராமசாமியும் வாங்கிக் கொண்டு வந் தார். ''உள்ளே போய் இரண்டு பழங் களையும் நன்றாக அலம்பி வை. நான் போய், கத்தியைக் கூராக்கிக் கொண்டு வரேன்'' என்று பின்பக்கம் போனார். துணி துவைக்கும் கல்லில் வைத்துத் தேய்த்து கத்தியைக் கூராக்க ஆரம்பித் தார்.

அந்த இரண்டு மாம்பழங்களையும் அலம்புவதற்காகக் கையில் எடுத்ததும் ராமசாமிக்கு நாக்கில் நீர் ஊறியது. மாம்பழத்தின் மூக்கைத் துளைக்கும் மணம், ஆசையை அதிகப்படுத்தியது. வந்தது வரட்டும் என்று இரண்டு பழங்களையும் நன்றாக சுவைத்துச் சாப்பிட்டார்.

"உங்க பையன் டீ. வி. அதிகம் பார்ப்பானா சார்? ஏன்டா வீட்டுக் கணக்கு தப்பாப் போட்டிருக்கேன்னு கேட்டா 'தவறுதான், இனிமே தவறு வராம பார்த்துக்கறேன்னு' 'எதிரொலி' பாணியில சொல்றானே?"

- சீர்காழி வி. ரேவதி





தின்று முடித்த பிறகுதான் ராம சாமிக்குக் கவலை பிடித்துக் கொண் டது. ''என்ன தந்திரம் செய்யலாம். ஆனந்தன் கத்தியைத் தீட்டிக் கொண்டு வந்து விடுவாரே?'' என்று யோசிக்க ஆரம்பித்தார்.

அந்த நேரம் பார்த்து ஆனந்தனின் நண்பர் தங்கப்பன் அவரைத் தேடிக் கொண்டு வந்தார். தங்கப்பன் அந்தக் காலத்து மனிதர். காதுகளில் பெரிதாகக் கடுக்கன் போட்டிருப்பார். ஆனந்த னுக்கு தங்கப்பனின் கடுக்கன்களில் ஒரு கண். ''எனக்குக் கொடு. இரண்டு நாள் போட்டுக் கொண்டு திருப்பித் தந்து விடுகிறேன்'' என்று நச்சரித்துக் கொண் டிருப்பார். தங்கப்பன் மறுத்து வந்தார்.

தங்கப்பனைக் கண்டதும் ராம சாமிக்கு ஒரு யோசனை தோன்றியது.

''சார், உங்க நல்லதுக்காகத்தான் சொல்றேன். எங்க எஜமான் கடுக்கன் களுக்காக உங்கள் காது ரெண்டையும் அறுத்து எடுக்கப் போகிறாராம். நீங்கள் வந்ததும் வெளியே போக முடியாதபடி கதவைப் பூட்டி விடச் சொன்னார். எனக்குத்தான் உங்களைப் பார்த்ததும்

பாவமாக இருக்கிறது சொல்லிட்டேன்'' என்று புருடா விட்டார் ராமசாமி.

''அப்படியா! ஆனந்தன் இப்போ எங்கே?'' என்று பதைபதைப்புடன் கேட்டார் தங்கப்பன்.

''நீங்களே ஜன்னல் வழியாகப் பாருங்கள்,'' என்றார் ராமசாமி.

தங்கப்பன் மெதுவாக எட்டிப் பார்த்த போது, ஆனந்தன், கத்தி செய்தவனை ஆத்திரத்துடன் திட்டியபடி தோய்க்கிற கல்லில் வேகமாகக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தார்!

தங்கப்பன் ராமசாமி சொன்னதை அப்படியே நம்பி விட்டார். ராமசாமிக்கு நன்றி கூறிவிட்டு 'தப்பினோம் பிழைத்தோம்' என்று ஓ டி யே போனார்.

''தங்கப்பன் ஏன் இப்படி ஓடிப் போகிறான்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் ஆனந்தன்.

''மாம்பழத்தைத் திருடிச் சாப்பிட்டால் சொ ந் த மா ன வீடு வாங்குவேன்னு யாரோ சொன்னாங்களாம். அதனால் திருடிக் கொண்டு போகிறார்'' என்று புளுகினார் ராமசாமி.

பாவம் ஆனந்தன் நம்பி விட்டார். ''ரெண்டையும் ஏன் எடுத்துக்கிட்டுப் போகணும்? ஒன்றை எடுத்துக் கொண்டு போனால் போதாதா?'' என்று கேட்டு விட்டு தங்கப்பனைத் துரத்திக் கொண்டு ஓடினார்.

''தங்கப்பா! எ ன க் கு ரெண்டும் வேண்டாம். எ ன க் கு ஒன்றைக் கொடுத்து விடு. நீ ஒன்றை வைத்துக் கொள். இதுக்காகக் கத்தியைக் கூட கூராக்கியிருக்கேன்'' என்று கத்தியபடி துரத்தினர்.

தங்கப்பன் படுவேகமாக ஓடித் தப்பித்துக் கொண்டார். ராமசாமியும் தப்பித்துக் கொண்டார்!

– க. முருகன், செம்மனூர்.


LEARN
ART
BY POST

ENGLISH & TAMIL

தபால் மூலம் ஓவியப்பயிற்சி

நீங்களும் வரையலாம் எப்படி?

வெறும் படங்களைப் பார்த்து வரைந்தால் மட்டும் போதாது. எப்படி ஆரம்பித்து எப்படியெல்லாம் முடிக்கலாமென படிப்படியாக எல்லா வயதினரும் பயிற்சி பெறும் வகையில் அமைக்கப்பட்டதுதான் எமது பாடங்கள்.



மேலும் விபரங்களுக்கு ரூ. 2/- தபால் தலைகளை அனுப்பி உடனே விண்ணப்பியுங்கள்.

A.J. ART COURSE

No. 1, 6th Main Road, Dhandeeswaram,
Velachery, Madras - 42.



தன்னம்பிக்கை!

மக்கள் அனைவரும் திகைத்தனர்.

விஷயம் இது தான். படைத் தளபதி திடீரென்று நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டார். அவருக்குப் பதில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவே அரசர் இப் போட்டியை நடத்த இருந்தார்.

போட்டி இதுதான். ஐம்பது படிகள் கொண்ட ஒரு மாளிகையில், பிரும்மாண்டமான ஒரு கதவு அமைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தாலே மலைப்பாக இருந்தது. அந்தக் கதவைத் திறக்க வேண்டும். போட்டியில் கலந்து கொண்டு திறக்க முடியாதவர்களுக்கு ஆயுள் சிறை!

அந்தக் கதவையும், அதன் அமைப்பையும் பார்க்கும்போதே மலைப்புத் தட்டியது! திறப்பது இருக்கட்டும். அதை அசைக்கக் கூட முடியாது போலல்லவா இருந்தது! அப்புறம் தானே திறப்பது?

போட்டிக்காக வந்தவர்கள் அனைவரும், அந்தக் கதவின் பிரும்மாண்டமான அமைப்பையும், அளவையும் பார்த்த உடனேயே மலைத்துப் பின்வாங்கினர். யாருமே போட்டியிட முன்வரவில்லை. அரசருக்குக் கவலை பிடித்துக் கொண்டது!

கந்தன் சிறிது வித்தியாசமான இளைஞன். 'நம்மால் முடியாததும் உலகில் உண்டா?' என்று சவால் ஏற்கும் தன்னம்பிக்கையும், உறுதியும் உடையவன். அவன் போட்டியிட முன் வந்தான்.

''கந்தா, உன் துணிவைப் பாராட்டுகிறேன். கதவின் அமைப்பையும், அளவையும், கனத்தையும் பார். முயன்று பார்க்கிறேன் என்று அசட்டுத்தனமாகக் கூறிவிட்டுச் சிறைவாசியாகி விடாதே! நன்றாக யோசி'' என்று அவனது தன்னம்பிக்கையைக் குலைக்கப் பார்த்தார் அரசர்.

''என்ன அரசே...! மனிதன் செய்த கதவுதானே இது? முயன்றால் நம்மால் முடியாததும் உலகில் உண்டா? என்னால் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உறுதியாக இருக்கிறது. எனக்கு ஆச்சு அதற்காச்சு. பார்க்கிறேன் ஒரு கை!'' என்று படியேறி முதல் மனிதனாகப் போனான் கந்தன்! அந்த பிரும்மாண்டமான கதவில் கையை வைத்து ஒரு முட்டு முட்டினான். கதவு 'பொலபொல'வென்று சரிந்து விழுந்தது! தக்கையால் செய்த கதவு பின் எப்படி இருக்கும்?

''தக்கையால் செய்து, மேல் பூச்சுப் பூசி பிரமிக்க வைக்கும்படி செய்திருக்கிறார்கள்!'' என்று வியந்தான் கந்தன்!

''உன் தன்னம்பிக்கை வென்றுவிட்டது'' என்று மகிழ்ச்சியுடன் சிரித்தார் மன்னர்.

- இரா. ஸ்ரீராம், ஈரோடு - 9.

DIAMOND COMICS
PRESENT



NEW DIAMOND COMICS (JULY 92)

Pran's—Billoo-Mr. India	8.00
Pran's—Daabu & The Outlaws	6.00
Tauji & Magic Carpet	6.00
Fauladi Singh & The Space City	6.00
Mandrake-7 (Digest)	15.00

DIAMOND COMICS PVT. LTD.
2715, DARYA GANJ, NEW DELHI-110 002

JOIN THE
DIAMOND BOOK CLUB
AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Look, Who all are There in the Club!
Chacha Chaudhary, Lambu-Motu, Zaab, Pinki, Billoo, Tauji, Fauladi Singh, Channi Chachi, Dabu, Mahabali Shaka, Chacha Bhatija, Rajan-Iqbal, James Bond, Phantom, Mandrake... and so many more such 'favourites' of yours.

All of them are brought to you by Diamond Comics, the largest selling comics in India.

The hair-raising and hilarious actions of these famous characters come to you in English, Hindi, Bengali, Gujrati & Marathi.

How Convenient to Meet Them All!
Once you join the club, you don't have to worry about your parents forgetting to bring the latest Diamond Comics home or your news agent/book seller finishing all the copies before you got yours.

That's because as a member of the Diamond Book Club, you would get your set of 6 comics in time at your doorstep, every month. Moreover, as a special privilege, you will be informed in advance about our forthcoming publications from time to time.

Gifts Galore!
For instance, 'The Children Jokes' with first V.P. and some other gifts on your birthday.

Then, there are many other 'surprises' in store for you on different ocuassions.

Postage Free!
To avoid delays, your parcel will be sent to you by V.P. every month. You just have to make your parents agree to pay the postman who brings the packet.

How Easy it is to Become a Member!
Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/-

These ten rupees will bring you the benefit of saving Rs. 3/- on V.P.P. and Rs. 7/- on postage. Plus, a Digest worth Rs. 12/- is yours FREE, if you receive 12 V.P.'s continuously.

Tell your Friends Too about the Club!
If 4 of your friends become members, you will receive a Digest of your choice worth Rs. 12/- FREE of cost. You have to send their names and Rs. 10/- (membership fee) per member.

Yes! I would like to become a member of "DIAMOND BOOK CLUB" and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________________


Note : We shall not enrol you as a member till we receive the membership fee.



PUZZLE PACK
THIRD SET OF FOUR BOOKS

(With the concept of 'knowledge', coated with 'fun' to develop your brain and to sharpen the intelligence.)
Now available
Third Set (No. 9 to 12) of PUZZLE PACK
after success of First and Second Set.
Hurry! pick you favourite Third set from the nearest book shop. Price Rs. 5/- Each

ISTRIBUTORS : **Madras** : • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. **Hyderabad** : • Neelkamal Book Distributors, Sultan Bazar. **angalore** : • Sapna Book Stall, Opp. Tribhuvan Theatre, Gandhi Nagar. • A.K. Agencies, 2094, 8 'A', Main Road, 'E' Block, Rajaji Nagar, 2nd stage



டாக்டர். கு. கணேசன்

* ச. நித்திலா, சென்னை - 33.


என் இரத்தப் பிரிவைப் பரிசோதித்துப் பார்த்ததில் A-POSITIVE என்று தெரியவந்தது. அப்படியானால் என் இரத்தத்தில் Rh factor இருக்கிறதா, இல்லையா?

பயப்படாதே, நித்திலா! உன் இரத்தத்தில் Rh factor இருக்கிறது. உன் இரத்தப் பிரிவு A-POSITIVE என்று சொன்னாயல்லவா? இதில் 'A' என்பது உன் இரத்தப் பிரிவையும், POSITIVE என்பது Rh factor ஐயும் குறிக்கிறது. இப்பொழுது உன் சந்தேகம் தீர்ந்ததா?

* நா. செந்தில் வடிவு, பொன்னமராவதி.

எனக்கு வெகுநாட்களாகவே உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும் அதிகமாக வியர்த்துக் கொண்டேயிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கூறுங்கள், டாக்டர் ப்ளீஸ்!

நம் உடம்பிலிருக்கும் பரிவு நரம்பு மண்டலத்தின் (SYMPATHETIC NERVOUS SYSTEM) மிகையான பணியினால்தான் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும் அதிகமாக வியர்க்கிறது. பயம், பதட்டம், பரபரப்பு, படபடப்பு, அதிகமாக உணர்ச்சிவசப்படுதல் போன்றவை காரணமாக மேற்சொன்ன நரம்பு மண்டலம் மிகையாகப் பணி செய்கிறது. இதைக் கட்டுப்படுத்த சில மருந்துகள் உள்ளன. அவற்றை மருத்துவர் மேற்பார்வையில் சாப்பிட வேண்டும். எனவே, அருகிலிருக்கும் மருத்துவரைக் கலந்தாலோசித்தால் நிவாரணம் கிடைக்கும்.



* வி. ஸ்ரீராம், சென்னை - 17.

தொழுநோய் என்றால் என்ன? இந் நோய் பாதிக்கும் இடம் உணர்ச்சியில் லாமல் இருப்பதேன்? இந் நோயின் மற்ற அறிகுறிகள் என்ன?

'மைக்கோ பாக்டீரியம் லெப்ரே' (MYCOBACTERIUM LEPRAE) எனும் பாக்டீரியா கிருமிகள் மனிதத் தோலையும், நரம்புகளையும் பாதிப்பதால் வரக்கூடிய நோய்க்கு 'தொழுநோய்' (LEPROSY) என்று பெயர். இந் நோய்க் கிருமிகள் தோலைச் சார்ந்த நரம்பு செல்களை அழித்து விடுவதால், தொழுநோய் பாதிக்கும் இடம் உணர்ச்சியின்றிக் காணப்படுகிறது. இதுவே இந் நோயின் முக்கிய அறிகுறி யாகும். உடம்பில் ஏதாவது ஒரு பகுதியில் சருமத்தில் படை தோன்றுவது; அப் படையில் உணர்ச்சியின்றி மரத்துப் போவது, ஆறாத புண்கள் தோன்றுவது, கால் கை விரல்கள் அரிக்கப்பட்டு சூம்பிப் போவது, மூக்கிலும் முகத்திலும் தடிப்பான படைகள் தோன்றுவது போன்றவை தொழு நோயின் மற்ற அறிகுறிகளாகும்.

* போ. கோபாலகிருஷ்ணன், சிந்தாமணி.

பழுப்பு, நீலம், கறுப்பு, மஞ்சள் ஆகிய எந்த நிறத்தில் கண் இருப்பினும் பார்வைத் திறன் ஒன்றுபோலிருக்குமா?

ஆம், தம்பி! பார்வைத் திறன் ஒன்று போலவே இருக்கும். கண்ணின் நிறத்திற்கும் பார்வைத் திறனுக்கும் தொடர்பில்லை! பார்வைத் திறனை அமுலாக்குவது கண்ணுக்குள் இருக்கும் 'லென்ஸ்' தான் என்பதை உன் அறிவியல் பாடத்தில் படிக்கவில்லையா?

* கே. சரவணன், குளத்துப்பட்டி.


ஊசி போடும் போது இரத்தம் வெளி வருகிறது. கொசு கடிக்கும் போது மட்டும் ஏன் இரத்தம் வெளிவருவதில்லை? தடித்து மட்டும் போகிறது?

ஊசி குத்தும் போது, அது இரத்தக் குழாய்களில்படுவதால் இரத்தம் வெளிவருகிறது. அதே சமயம் கொசு கடிக்கும் போது அதன் வாயிலிருந்து ஒரு திரவம் சுரக்கிறது. அதற்கு இரத்தத்தை உறைய வைக்கும் குணமுண்டு. இதனால்தான் கொசு கடிக்கும் போது இரத்தம் வெளிவருவதில்லை. கொசு வாயிலிருந்து சுரக்கும் திரவத்தின் ஒவ்வாமை (ALLERGY) காரணமாகத் தான், கொசு கடித்த இடம் தடித்துக் காணப்படுகிறது. புரிந்ததா, சரவணன்?


* உ. முகமது ரபி, எலவனாசூர்.

தும்மல் எப்படி வருகிறது?

தும்மல் என்பது ஒரு தற்காப்பு அனிச்சைச் செயல். வேண்டாதவர் வீட்டிற்கு வந்தால் விரட்டப்படுகிறாரல்லவா? அம் மாதிரி நம் உடம்புக்கு உபயோகப்படாத ஒரு வெளிப்பொருள் எடுத்துக்காட்டாக பஞ்சு, தூசு, ஒட்டடை, மூக்குப் பொடி போன்றவை மூக்கின் வழியே உட்செல்லும் போது விரட்டியடிக்கப்படுகிறது. அது தான் தும்மல். இது எப்படி உண்டாகிறது? மூக்கினுள் நுழைந்த அயல்பொருள் மூக்கின் சிலேட்டுமப் படலத்தை உறுத்துகிறது. இச் செய்தி மூளைக்குத் தெரிவிக்கப்படுகிறது. உடனே மூளை அந்த அயல் பொருளை அப்புறப்படுத்து என மூக்கிற்கு ஆணையிடுகிறது. அடுத்த வினாடியே நமக்குத் தும்மல் வந்து விடுகிறது. தும்மலின் போது மூக்கு வழியாகவும், வாய் வழியாகவும் திடீரென்று சப்தத்துடன் வெளிமூச்சு வேகமாக வெளியேறுகிறது. அப்போது நமக்கு வேண்டாத அயல் பொருளும் வெளியேற்றப்படுகிறது. இத்தனை செயல்களும் நம் கட்டுப்பாட்டில் இல்லாமல், தன்னிச்சையாக நடக்கின்றன. எல்லாம் நம் நன்மைக்காகத்தான். இல்லையா, முகமது ரபி?



பெயரிடும் விழா!



குழந்தைகளுக்குப் பெயரிடும் விழா ஆப்பிரிக்காவில் சிறப்பாகப் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது.

நைஜீரியாவிலுள்ள யொருபா (Yourba) மக்களினத்தவர் ஆண் குழந்தை பிறந்திருந்தால் ஏழாம் நாளன்றும், பெண் குழந்தையாக இருந்தால் ஒன்பதாம் நாளன்றும், குழந்தைகள் இரட்டையராகப் பிறந்திருந்தால் எட்டாம் நாளன்றும் பெயரிடும் விழாவை நடத்துகின்றனர்.

விழா தினத்திற்கு முன் தினம் உறவினர்கள் குழந்தையின் பெற்றோர் வீட்டில் கூடுகின்றனர். விழா தினத்திற்கு முந்திய தினம் வரை குழந்தை பிறந்த அறையை விட்டுத் தாயும் சேயும் வெளியே செல்வதில்லை.

விழா நாளன்று குழந்தை பிறந்த அறையை விட்டுக் குழந்தையை வெளியே எடுத்து வருவார்கள். உடனே விழா தொடங்கிவிடுகிறது. ஒரு குவளை நீர் வீட்டின் கூரையின் மீது ஊற்றப்பட, கீழே வழிந்து வரும் நீரைக் குழந்தையின் மேல் படும்படி குடும்பத்திலேயே வயதான மூதாட்டி ஒருவர் குழந்தையைப் பிடித்துக் கொள்கிறார். குழந்தைக்குப் பெயர் சூட்டப்பட்டுப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

இன்னும் சில இனத்தவர்களில் இந்த விழாவின் போது புனிதமான பிராணிகளைபலி கொடுக்கின்றனர். உள்ளூர்க்காரர் ஒருவர் பிறந்த குழந்தையின் எதிர்காலத்தைக் கணித்துக் கூறுகிறார். குழந்தை பிறந்த சூழலுக்கேற்ப ஒரு பெயரும் விழா தினத்தின்போது முக்கியப் பெயர் ஒன்றும் குழந்தை வளர்ந்து வேலை செய்து வாழ்க்கை நடத்தும் சூழலுக்கென்று ஒரு புனை பெயரும், ஆக மூன்று முறை பெயர் வைக்கிறார்கள்.

- சைதை ஆர். முரளி.

இப்பொழுது உங்கள் குழந்தைக்கு சாதாரண அரிசி தானியத்தைவிட மேலான உணவை கொடுங்கள்.

அ றி மு க ப் ப டு த் து கி றோ ம்



ஃபாரெக்ஸ்-ரைஸ்
பால் அடங்கியது

சுவையும் ஊட்டச்சத்தும் கொண்டது.

சாதாரண அரிசி தானியத்தைக் கொடுத்து குழந்தையின் திட உணவைத் தொடங்குவதைவிட ஃபாரெக்ஸ் – ரைஸ் அளியுங்கள்.

ஃபாரெக்ஸ் – ரைஸ் பாலின் ஊட்டமும், வைட்டமின்களும், தாதுப்பொருட்களும் கொண்டது. எளிதில் ஜீரணிக்கக் கூடியது.

தேவையான ஊட்டச்சத்தை சுவையான வழியில் உங்கள் குழந்தைக்கு கொடுக்க ஒரே வழி. ஃபாரெக்ஸ் – ரைஸ் நீருடன் கலந்து அளித்தால் போதுமானது.

நான்கு மாதங்கள் முதல்

ஃபாரெக்ஸ்-ரைஸ்
சுவையுடன் வளரும் வழி.

முக்கிய அறிவிப்பு: தாய்ப்பால் உங்கள் குழந்தைக்குச் சிறந்தது. நான்கு மாதங்கள் முதல், உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமின்றி, தானிய உணவையும் கொடுங்கள்.

Gx.646.92.Tm



துரத்தி வந்த கரடி

எங்கு பார்த்தாலும் பனி மூடிய மலைகள் சூரிய ஒளியில் 'வெள்ளை வெளேர்' என்று மின்னிக் கொண்டு இருந்தன. காற்று பயங்கரமாக ஊளையிட்டது. குளிர் எலும்பை நடுக்கியது. பிரவீன் பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பனியைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

தலையில் இருந்து பாதம் வரை உடலை நன்றாக மறைத்திருந்த உடைகள், பனியிலிருந்தும் கடுமையான குளிர் காற்றில் இருந்தும் அவனைப் பாதுகாத்தன.

''சித்தப்பா, கறுப்புக் கண்ணாடி அணியாவிட்டால் என்ன ஆகும்?'' என்றான் வியப்போடு.

''இந்த இடத்தில் எங்காவது ஒரு மரம் அல்லது செடி கொடி இருக்கிறதா?'' என்று பதில் கேள்வி கேட்டார் சித்தப்பா.

''இல்லை. எங்கும் வெண்மையாகப் பனிதான் இருக்கிறது!''

''ஆகவே, சூரிய ஒளி பனித் தரையில் பட்டு, நம் ஊரில் மண் தரையில் பட்டுப் பிரதிபலிப்பதைவிட மூன்று பங்கு அதிகமாகப் பிரகாசிக்கும். அந்த வெளிச்சத்தில் கண்கள் கூசும். கறுப்புக் கண்ணாடி போடா விட்டால் சூரிய வெளிச்சத்தைத் தாங்க முடியாமல் கண்கள் குருடாகி விடும் வாய்ப்புண்டு.''

காற்று ஊளையிட்டு உறுமியது. மிகுந்த ஆற்றலோடு வீசி அவர்களை மலை உச்சியில் இருந்து பிய்த்துத் தள்ளப் பார்த்தது.

''இங்கு மட்டும் எதனால் காற்று பயங்கரமாகப் புயல் வேகத்தில் வீசுகிறது?''

''அண்டார்க்டிகாவிற்கு வடக்கே நீண்ட தொலைவுக்கு நிலப்பரப்பே கிடையாது. கடல்தான். ஆகவே, அங்கு வீசும் காற்றைத் தடுக்க மலைகளோ மரங்களோ இல்லாததால் அதற்குக் கொண்டாட்டம்தான். இதனால்தான் இங்கு வீசும் காற்று பயங்கர வேகத்தோடு புயல் போல வீசுகிறது'' என்றார் சித்தப்பா.

அவர்கள் இருந்த பனிமலை அந்த இடத்தில் சரிவாக உள் நோக்கி வளைந்து, பின்பு ஒரே சீராகக் கடல் மட்டத்தை நோக்கி நீண்டு, வழுக்கிச் செல்ல வசதியாகச் சரிந்து இருந்தது.

''நாம் மிகவும் கஷ்டப்பட்டு இங்கு ஏறி வந்தோம். ஆனால், இங்கிருந்து

வேணு சீனிவாசன்

இறங்குவது வெகு சுலபம். பனியில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தால் போதும். சறுக்கிக் கொண்டே நம் இடத்தை அடைந்து விடலாம்'' என்று சித்தப்பா பனியின் மீது உட்கார்ந்து கொண்டார்.

பிரவீனும் உட்கார்ந்து கொண்டான்.

சுமாராக இருநூறு அடி தூரம் அவர்கள் சறுக்கி வந்திருப்பார்கள். சறுக்கிக் கொண்டிருந்த பிரவீன், சிறிது தலையைத் திருப்பிப் பின்னால் பார்த்தான். அவ்வளவுதான்! மூச்சே நின்று விடும் போல் இருந்தது!

ஏழு அடிக்கும் அதிகமான உயரத்தோடும் பிரம்மாண்டமான உருவத்தோடும் வளர்ந்திருந்த துருவக் கரடி ஒன்று, அவர்களைப் போலவே கால்களை நீட்டி உட்கார்ந்தவாறு ஒய்யாரமாகச் சறுக்கி பிரவீனை நோக்கி வந்து கொண்டு இருந்தது!

சித்தாப்பாவும் கரடியைப் பார்த்து விட்டார். வெகு வேகமாக அவர்களை நோக்கி வந்து கொண்டு இருந்தது அது. ''நாம் இன்னும் கொஞ்சம் வேகமாகச் செல்லலாம்'', என்று சொல்லிவிட்டு முன்னை விட அதிவேகமாக இறங்க ஆரம்பித்தார்கள் இருவரும்.

ஆனால், கரடியோடு போட்டி போட முடியவில்லை. பனிப் பிரதேசத்திலேயே பிறந்து வளர்ந்த கரடியல்லவா அது! தரையில் ஓடி வரும் விமா





பிரான்சில் இட்லியின் பெயர்!

★ பாரீஸ் நகர ரெஸ்டாரண்டுகளில் இட்லி வேண்டுமென்றால் "Dravidian Druckdales" வேண்டும் எனக் கேட்க வேண்டும். பிரான்ஸில் இட்லிக்கு 'டிரவிடியன் டிரக் டேல்ஸ்' என்று பெயர்!

– செஞ்சி. க.இரா. விஜயகுமார்

வத்தைப் போல வெகு வேகமாக பிரவீனை நெருங்கிய அது, அவன் தலையைப் பார்த்துத் தன் இரும்பைப் போன்ற கையை வீசியது.

'ஓ' வென்ற பயங்கரமான அலறலோடு பிரவீன், பனிப்பாறையில் தன் முதுகைப் பரப்பி, திடீரென்று உடலை நீட்டிப் படுத்ததால் கரடியின் அறையில் இருந்து தப்பித்தான். அதே நேரத்தில் தொப்பியும் கண்ணாடியும் அவனிடம் இருந்து காணாமல் போய் விட்டன.

வேகமாகச் சறுக்கிக் கொண்டு இருந்த கரடி, திடீரென்று முன்பக்கமாகக் குனிந்து காற்றில் கையைப் பலத்தோடு வீசியதால் அதன் பேலன்ஸ் போய் விட்டது. நிலை தடுமாறிப் போன அது, குட்டிக்கரணம் போட்டுப் படுத்தவாறே, சறுக்கிக் கொண்டிருந்த பிரவீன் மீது புளி மூட்டை போல விழுந்து, அதே வேகத்தில் அவனையும் கடந்து, கார் டயர் உருண்டு கொண்டே கீழ் நோக்கிச் செல்வதைப் போலப் பயங்கரமான உறுமலோடு உருள ஆரம்பித்தது.

நடந்தவற்றை அருகில் இருந்து பார்த்துக் கொண்டே இருந்த சித்தப்பா பனிக் கோடாலியை ஓங்கி அடித்துப் பனியில் ஊன்றினார். அதனால், மேலும் சறுக்காமல் ஒரே இடத்தில் இருக்க முடிந்தது அவரால். கைக்கு எட்டும் தூரத்தில் கட்டையைப் போலச் சறுக்கிக் கொண்டே வரும் பிரவீனை மற்றொரு கையால் பிடித்து நிறுத்தினார். பிறகு அவனைத் தன் அருகே இழுத்து உலுக்கி, சுய நினைவுக்கு வரச் செய்தார்.

கண்களைத் திறந்தான் பிரவீன். 'பளீர்' என்று வெளிச்சம் தாக்கியது.

"கரடி போய்விட்டது. பயப்படாதே! உனக்கு ஒன்றும் கரடியால் காயம் இல்லையே?" என்றார் சித்தப்பா.

"இல்லை சித்தப்பா! கரடியின் கையால் அடி வாங்காமல் குனிந்து தப்பி விட்டேன்."

"புத்திசாலித்தனமான காரியம் தான் செய்து இருக்கிறாய்! உன் தொப்பியையும், கண்ணாடியையும் கரடியே போட்டுக் கொள்ளட்டும். இந்தா இதை நீ போட்டுக் கொள்", என்று சொல்லிவிட்டுத் தன் பையில் தயாராக வைத்து இருந்த வேறு தொப்பியையும் கண்ணாடியையும் கொடுத்தார் சித்தப்பா.

பனிக் கோடாலியின் உதவியோடு ஒருவர் கையை மற்றொருவர் பலமாகப் பற்றிக் கொண்டு புயலைப் போல வீசும் காற்றை எதிர்த்து மலையைச் சுற்றிக் கொண்டு நடந்தனர். சரிவாக இருந்த பனிமலை பயங்கரமாக வழுக்கியது.

அங்கிருந்து எப்படியோ, தட்டுத் தடுமாறி கடல் மட்டத்தை அடைந்தனர் இருவரும்.

"சித்தப்பா, நாம் வந்த படகு எங்கே? இங்கேதானே நிறுத்தி வைத்தோம் காணோமே?" என்று அலறினான் பிரவீன்.

படகு, அவர்கள் நிறுத்தி வைத்த இடத்தில் இல்லை. "அதோ பார், கடலுக்குள்ளே வெகு தொலைவுக்கு நம் படகைக் காற்று அடித்துச் சென்று இருக்கிறது. படகை நெருங்க வேண்டுமானால் நாம் இந்தப் பனிக் கடலில்

மூன்று அல்லது நான்கு கி.மீட்டருக்கு மேல் நீந்திச் செல்ல வேண்டி இருக்கும்'' என்றார் சித்தப்பா!

''ஐயோ, பனியோடு பனியாக உறைந்து போய் விடுவோமே! என்ன செய்வது?'' என்று அலறினான் பிரவீன்.

திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. பனிப் படலம் புழுதி போலக் கிளம்பியது. எதிரே நிற்பவரைப் பார்க்க முடியாத அளவுக்கு பனி மூடிக் கொண்டது. காற்று சுழன்று சுழன்று வீசியது; உறுமியது; ஊளையிட்டது.

பனிப்புயல் தொடங்கிவிட்டது.

''இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குக் கூட தொடர்ந்து வீசக்கூடியது பனிப்புயல். நாம் வகையாக மாட்டிக் கொண்டோம். படகும் இல்லை. கப்பலோ வெகு தூரத்தில் இருக்கிறது. உதவிக்கு இங்கு யாரும் இல்லை. நாம் வீடு திரும்புவது என்பது நடக்காத காரியம்'' என்று சித்தப்பா சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அணுகுண்டு வெடித்ததைப் போல மிகப் பயங்கரமான வெடிச் சத்தம் காதைப் பிளந்தது.

அந்த இடமே, நடுங்கியது. சித்தப்பா சொன்னார், ''பனிபடர்ந்த பெரிய பாளங்கள் கரைய ஆரம்பித்து விட்டன. ஆங்கிலத்தில் இதனை 'அவலான்ச்' என்பார்கள். அடுத்த சில நிமிடங்களில் நாம் சறுக்கி விளையாடி மகிழ்ந்த அந்தப் பனிமலை சரிந்து பொடியாகி விடும். அதனால் கடலில் நீரின் மட்டம் மிகவும் உயர்ந்து விடும். நாம் பனிக்குள் சமாதி அடைய வேண்டியதுதான்.''

பிரவீன், மேலே பார்த்தான், கண்ணைக் கூசும் சூரிய ஒளியில் பத்துக்கும் அதிகமான வெள்ளை யானைகள் மலை உச்சியில் இருந்து அவர்களை நோக்கி ராட்சத வேகத்தில் வருவதைப் போல மிகப் பெரிய பனிப் பாளங்கள் இறங்கிக் கொண்டு இருந்தன.

அந்த இடத்தில் இருந்து ஓடினால் பனிக்குள் சிக்காமல் தப்பிவிடலாம் என்ற நம்பிக்கையில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட எண்ணித் திரும்பினான் பிரவீன். சரேல் என்று பனித் தரை வெடித்து, உள்ளே இறங்க ஆரம்பித்தது. ''சித்தப்பா, சித்தப்பா!'' என்று கதறிக் கொண்டே தரையில் விழுந்தான் பிரவீன்!

''என்ன? என்ன ஆயிற்று? ஏதாவது கனவு கண்டாயா? கட்டிலில் இருந்து விழுந்து விட்டாயே!'' என்று சொல்லிக் கொண்டே அவன் அருகில் நின்றார் சித்தப்பா. சித்தப்பாவிடம் தன் கனவு முழுவதையும் சொல்லி முடித்தான் பிரவீன்.

''அண்டார்க்டிகாவில் பெரிய விலங்குகளான புலி, கரடி ஆகியவை கிடையாது. அங்கு திமிங்கிலங்கள் மட்டுமே. ஆர்டிக் துருவத்தில் மட்டுமே காணப்படும் வெள்ளைக் கரடிகளையும் உன் கற்பனையால் அண்டார்க்டிகாவில் பார்த்துப் பயந்து இருக்கிறாய்!'' என்றார் சித்தப்பா.


எதிர் எதிர்த் துருவங்களை ஒன்றாக இணைக்கும் அதிசயமான கனவை எண்ணிப் பார்க்க சிரிப்புத்தான் வந்தது பிரவீனுக்கு.

வானர இசை!

* மாலை மயங்கும் நேரம் பள்ளிக் கூடத்தில் இசைக் கருவிகளை வைத்திருந்த அறையிலிருந்து திடீரென இன்னிசை முழங்கியதைக் கேட்டு ஆச்சரியமடைந்த வாட்ச்மேன் அந்த அறையைத் திறந்து பார்த்த போது, உள்ளே சுமார் 200 குரங்குகள் இருந்தன. அதில் ஒரு கூட்டம் ஆளுக்கு ஒரு இசைக் கருவியைக் கையில் பிடித்து மனம் போன போக்கில் இசைத்துத் தள்ளிக் கொண்டிருக்க மற்றொரு குழுவோ, ''விசில்'' அடித்து ரசித்துக் கொண்டிருந்தது. தேஜ்பூரில் கேந்திரிய வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற உண்மைச் சம்பவம் இது.''

- தக்கோலம் ரூஸ்துமா





வனவிலங்கு கணக்கெடுப்பு!

"நம் நாட்டில் பத்து வருடங்களுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பது போல காட்டில் வாழும் வனவிலங்குகளின் எண்ணிக்கையையும் கணக்கிடுகிறார்கள். "மனிதர்களை எண்ணுவது எளிது. ஒவ்வொரு வீடாகப் போய், 'உங்கள் வீட்டில் எத்தனை பேர் வசிக்கிறார்கள்?' எனக் கேட்டு நோட்டில் குறிப்பு எழுதிக் கொள்ளலாம். ஆனால் பயங்கரமான காட்டு விலங்குகளைக் கணக்கிடுவது எப்படி?" என்று நீங்கள் வியக்கலாம்.

வனவிலங்குகளைக் கணக்கிடும் பணி ஒவ்வொரு கோடை காலத்திலும் ஆரம்பமாகிறது. இதில் நன்கு தேர்ச்சி பெற்ற அதிகாரிகளின் குழுக்கள் விலங்குகள் தண்ணீர் குடிக்க வரும் குளம், குட்டை, ஆறு போன்ற நீர் நிலைகளுக்கு அருகிலுள்ள உயரமான மரங்களின் மீது பரண்களை அமைத்துக் கொள்கின்றன. தாங்கள் பயணித்து வந்த ஜீப்பில் இவர்கள் செடி கொடிகளைக் கொண்டு வருகிறார்கள். அவைகளின் உதவியால் நீர் நிலைகளின் ஓரங்களை சமப்படுத்துகிறார்கள். இதனால் நீர்நிலைகளில் ஏற்கெனவே பதிந்துள்ள விலங்குகளின் காலடித் தடங்கள் அழிக்கப்படுகின்றன. இப்படி எந்த ஒரு விலங்கின் கால் தடமும் இல்லாது செய்த பிறகுதான் இவர்களுடைய கணக்கெடுப்புப் பணி ஆரம்பமாகிறது.


பௌர்ணமி இரவைத் தேர்ந்தெடுத்து பகலில் இந்த வேலை முடிந்ததும் இரவு நேரத்தில் பேனா, நோட் புக், டார்ச் லைட், துப்பாக்கி தேவையான உணவு மற்றும் பைனாகுலருடன் மரங்களின் மேல் அமைக்கப்பட்டுள்ள பரண்களில இவர்கள் பதுங்கிக் கொள்கிறார்கள். அங்கிருந்தபடி நீர் நிலைகளைக் கண்காணிக்கத் துவங்குகிறார்கள். பொதுவாக இரவு நேரங்களில்தான் காட்டு விலங்குகள் தண்ணீர் அருந்த நீர் நிலைகளை நாடி அதிகமாக வருவது வழக்கம். அதன்படி எந்தெந்த விலங்குகள் எத்தனை மணிக்கு வந்தன எனும் குறிப்பையும், பின்னர் தோராயமாக அதன் எண்ணிக்கையையும் குறித்துக் கொள்கின்றனர். பௌர்ணமி நிலவொளி இவர்களுக்கு இந்தப் பணியில் மிகவும் உதவுகிறது.

காலையில் மர வீட்டில் இருந்து இறங்கி மறுநாள் முற்பகல் வரை அவர்களுடைய பணி என்ன தெரியுமா? மண்ணில் பதிந்துள்ள விலங்குகளின் காலடித் தடங்களின் மீது "பிளாஸ்டர் ஆப் பேரிஸ்" எனும் கலவையைப் போட்டு பாஸ்டர் காஸ்டிங் முறைப்படி கவடுகளை எண்ணிக் கணக்கெடுப்பதுதான். இந்தத் தடங்களின் எண்ணிக்கை அடிப்படையில்தான் வனவிலங்குகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது! பல ஆண்டுகளாக இம்முறைதான். இம் முறையில் சரியான அளவு எண்ணிக்கை கிடைக்காவிட்டாலும் 95 சதவீதம் வெற்றி கிடைத்து விடுகிறது. இதில் வருத்தத்தக்க செய்தி என்ன தெரியுமா? ஒவ்வொரு வருடமும் வனவிலங்குகளின் எண்ணிக்கை குறைந்து வருவதுதான்.

– சத்தி. ஏ. ஜே. ஜப்பார்

விமான விசித்திரங்கள்

ஆழி



ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள்:




ஆர்வில் ரைட்




வில்பர் ரைட்

விமானத்தின் முதல் அமைப்பு 52 செ.மீ. நீளமுள்ள இந்த விளையாட்டுக் கருவிதான். 'அல்போன்ஸ் பினாடு' என்னும் 21 வயது இளைஞர் கண்டுபிடித்த இதன் பெயர் 'பிளானோ:ஃபோர்.' ரப்பர் வளையத்தால் இயங்கக் கூடிய இதன் அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டு 1876-இல் பெரிய விமானத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்தார் அந்த இளைஞர். அதில் தோல்வி கண்ட தால் மனமுடைந்து தன்னுடைய 30-வது வயதில் தற்கொலை செய்து கொண்டார் அவர்!


1902-இல் ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த 'கிளைடர்' விமானம் இதுதான்.






ஆனால், 1903-இல், 12 குதிரைச் சக்தி கொண்ட எந்திரத்தினால் ரைட் சகோதர்கள் இயக்கிய முதல் விமானம் இதுதான். 59 விநாடிகள் வானில் பறந்தது. அப்போது வில்பர் ரைட் இப்படிச் சொன்னார்; "கடைசியாக மனிதன் வானில் பறக்கும் யுகம் வந்துவிட்டது!"


விமானத்தின் மூலம் சாதனைகளும் நிகழ்த்தப் பட்டன!



பிரான்ஸில், 1909 - இல், முதன் முதல், மணிக்கு 47 மைல்கள் (சுமார் 75 கி.மீ) வேகத்தில், 'கோல்டன் ஃப்ளையர்' என்ற இந்த விமானத்தில், 'க்ளென் கர்ட்டிஸ்' என்பவர் பறந்து, விமானப் போட்டியில் முதலாவதாக வந்து சாதனை புரிந்தார்!


க்ளீவ்லாந்தில், முதன் முதலாக 1932- இல், 730 குதிரைச் சக்தி கொண்ட எந்திரம் பொருத்தப்பட்ட 'ஜீ பீ - ஆர் 1' என்ற இந்த விமானத்தில், 'ஜிம்மி டூலிட்டில்' என்பவர் மணிக்கு 296 மைல் (சுமார் 474 கி.மீ) வேகத்தில் பறந்து சாதனை புரிந்தார்.







1920 - இல், அமெரிக்காவில், முதன் முதல், கடல் மட்டத்திலிருந்து 33,000 அடி உயரத்தில் (10,065 மீட்டர்), உயரத்தில் பறந்த விமானம் இதுதான். செலுத்திய வர்: ருடால்ப் விஸ்கியடி ஸ்க்ரோடர்.

அந்த சாதனையை முறியடித்தது 1930- இல், கிரேட் பிரிட்டனின் 'பிரிஸ்டல் 138 A' என்ற விமானம். அதை 49,945 அடி (15,233 மீ.) உயரம் பறக்கச் செய்தவர்; 'ஸ்குவாட்ரன் லீடர்' என்பவர்.






நியூயார்க்கில், 1933 - இல், 'விலி போஸ்ட்' என்னும் பைலட் 'வின்னி மா' என்னும் இந்த விமானத்தில், தனியாக 7½ நாட்களில் உலகைச் (24,954 கி.மீ.) சுற்றி வந்தார். அவர் 11 தடவைகள் மட்டும் தரை இறங்கினார். அப்போதைய சாதனை இது!




1968-இல், உலகின் 'முதல் மிகப்பெரிய விமானம்' அமெரிக்காவின் லாக்ஹீட்ஸ் C-5 இதுதான். 310 டன்கள் எடை. மணிக்கு 848 கி.மீ. வேகத்தில், தொடர்ச்சியாக 4600 கி.மீ. பறக்கும். 1,65,000 பவுண்டு எடையைச் சுமக்கும்



ஜெர்மனியில் உருவாக்கப் பட்ட, 1919-இல் பயணி களை ஏற்றிச் சென்று உலகின் முதல் 'விமான சர்வீஸ்' தொடங்கிய விமானம் இதுதான்.


1985-இல், உருவாக்கப்பட்ட இந்த 'ருஸ்லான் ஏ.என்.124' என்னும் சோவியத் சரக்கு விமானம் மிகவும் பெரியது. ஒரு கப்பலையே இதன் உள்ளே வைத்துவிடலாம்! சரக்குகள் வைக்கும் பகுதியின் நீளம் 30 மீ. அகலம் 6.5 மீ. உயரம் 4.5 மீ.

150 டன் எடையைச் சுமக்கும். பறக்கும் வேகம் மணிக்கு 850 கி.மீ. 16,500 கி.மீ. தூரம் தொடர்ந்து பறக்கும். பெரும்பாலும் கம்ப்யூட்டரே இதை இயக்குகிறது.



ஆனால், விமானங்களில்தான் எத்தனை விதமான கண்டுபிடிப்புகள்!


இதன் பெயர் 'ஏரோ கார் பிளேன்'. இதன் இறக்கைகளையும் வால் பகுதியையும் கழற்றி வைத்துவிட்டு, இதை ஒரு மோட்டார் கார் போலப் பயன்படுத்தலாம்!







வந்து நிற்கவும், கிளம்பவும் உதவும் சக்கரங்கள் இந்த அமெரிக்க விமானத்திற்கு இல்லை. பதிலாக இதன் அடியில் உள்ள காற்றடைத்த ஒரு பையின் வழியாக நூற்றுக் கணக்கான நுண்ணிய குழாய்கள், காற்றை வெளியே வீசி, இது தரைக்குச் சற்று உயரே நிலைபெறச் செய்கிறது!

இந்த 'ஏர் பிஷ்' என்னும் விமானம் வானத்தில் உயரப் பறக்காது. நீர் மேலேயும் மிதக்காது. ஆனால், ஆறு, ஏரி, கடல் மீது, நீர் மட்டத்தின் மேலாகப் பறந்து செல்லும். இதை அமைத்தவர் 'ரின் ஃபிளாக் ஆகன்' — மேற்கு ஜெர்மனி.







'எம் 2 — எஃப் 2' என்னும் இந்த அமெரிக்க விமானத்திற்கு இறக்கைகள் கிடையாது. மணிக்கு 280 கி.மீ. வேகம் பறக்கும்!




ஏ.எஸ்.டபிள்யூ.22 என்னும் இந்த விமானத்திற்கு, உடலை விட, இறக்கையின் நீளம்தான் அதிகம். இறக்கையின் நீளம் 23.5 மீட்டர்!



1930-இல், முதன் முதலாக, நியூயார்க்கிலிருந்து பாரிஸுக்கு, இடையில் எங்கும் தங்காமல், சார்லஸ் லிண்ட்பர்க் என்பவர் செலுத்திய ஒற்றை எந்திர விமானம் இது!



1986, டிசம்பர் 24-இல், எங்கும் இறங்காமல், ஒரே மூச்சில் 9 நாட்கள் தொடர்ந்து பறந்து, உலகைச் சுற்றிவந்த 'வாயேஜர்' விமானம் இது தான். விமானத்தைச் செலுத்தியவர்கள், டிக் ருட்டன் என்னும் ஆண் விமானியும், ஜீனா யீகர் என்னும் பெண் விமானியும். பறந்த தூரம் 41,600 கி.மீ. விமானத்தின் எடை 2,000 பவுண்டு. கொண்டு சென்ற பெட்ரோல் 9000 பவுண்டு. இதை வடிவமைத்தவர், விமானி டிக் ருட்டனின் சகோதரர் பர்ட் ருட்டன்.



இது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாஸா'வின் அண்மைக் கால கண்டுபிடிப்பு. சூரிய சக்தியால் பறக்கும் 'கிளைடர்' விமானம். எதிர்காலத்தில் இன்னும் எத்தனையோ புதுமையான விமானங்கள் வரக்கூடும்!



கேளுங்கள் சொல்லப்படும்

சேரநம்பி

✱ வெ. வேலு சாமி, சேலம் – 2.

இதுவரை எந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையாவது, ஏற்றிய விலையைக் குறைத்திருக்கிறதா?



கவையான; கடினமான கேள்வி. விலைக்குறைப்பு செய்தது எல்லாம், மாதப் பத்திரிகைகளாக இருந்தவைகளை மாதம் இருமுறையாக அல்லது வாரப் பத்திரிகையாக மாற்றிய போதுதான்! பேசும் படம் என்று ஓர் சினிமா பத்திரிகை வருகிறது அல்லவா? இந்த பேசும்படம் காரியாலயம் (ராம்நாத் பப்ளிகேஷன்ஸ்) குழந்தைகளுக்காக 'பால பாரதி' என்று ஓர் அருமையான பத்திரிகையை மாத இதழாக நடத்தியது. முதல் இதழ் பிப்ரவரி 1953. தொடங்கிய போது இதன் விலை எட்டு அணா. அமோக விற்பனை காரணமாக அதே ஆண்டு ஜூலை முதல் இதன் விலையை ஆறு அணாவாகக் குறைத்தார்கள்.

✱ வி. ராகவேந்திரன், சீர்காழி.

'பிக்கிக்கா' வார இதழில் எழுதும் ரேவதியும், கோகுலம் கௌரவ ஆசிரியரும் ஒருவர்தானா?

இல்லை. கோகுலம் கௌரவ ஆசிரியர் பள்ளி மாணவனாக இருந்தபோதே (1952) எழுதத் தொடங்கி விட்டவர். குழந்தை இலக்கியத்தில் அனுபவம் மிக்கவர்.

✱ சூ. வில்லிதாமஸ், பாளையம்கோட்டை.


ரோட்டரி கிளப் என்ற உலக அமைப்பை யார் உருவாக்கினார்கள்?



சமூக நலப்பணிகளைச் செய்து வரும் ரோட்டரி கிளப்பை ஆரம்பித்தவர் பால். பி. ஹாரிஸ் என்பவர் இது உருவான ஆண்டு 1911.

* வெ. முத்துராஜா, கடலூர் – 4.

இங்கிலாந்து மன்னர் அல்லது அரசியார், அந்த நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் ஓட்டுப் போட முடியுமா?



முடியாது. பிரபுக்களுக்கும் (டியூக் ஸ்) மன்னர்/அரசியாருக்கும் ஓட்டுரிமை கிடையாது!

* வ. வள்ளிநாயகம், முசிறி.

கோன் ஐஸ்கிரீமை யார் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தினார்கள்?




இடாலியா மார்ச்சியானி என்ற பிரஞ்சுக் காரர்தான் கோன் ஐஸ்கிரீமை 1903 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்.

* கு. ரமணா ரெட்டி, கு. சென்னாரெட்டி, உதகமண்டலம் – 2.

இங்கிலாந்தின் அரச குடும்பத்தினரில் விளையாட்டில் ஈடுபாடு கொண்டவர்கள் உண்டா?


எவ்வளவோ பேர் இருந்திருக்கிறார்களே. அரச குடும்பம் என்பதால் அவர்களுக்கு மட்டும் விளையாட்டு ஆர்வம் இருக்கக் கூடாதா? ஆறாம் ஜார்ஜ் மன்னர் யார்க் பிரபுவாக இருந்த போது விம்பிள்டனில் (1923) இரட்டையர் போட்டியில் ஆடியிருக்கிறார். இப்பொழுதுள்ள விம்பிள்டன் கோர்ட்டை 1922-ல் திறந்து வைத்



தவரே ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்தான். போலோ, ஹாக்கி ஆட்டங்களில் திறமை காட்டிய எத்தனையோ பேர் அரச குடும்பத்தில் இருக்கிறார்கள்.

* வெ. வெங்கடமணி, நீடூர்.

இங்கிலாந்தின் அரச குடும்பத்தினரில், பிரின்ஸ் சார்லஸ், குழந்தைகளுக்கான ஒரு புத்தகத்தை எழுதியதாகக் கூறினீர்கள். இந்த அரச குடும்பத்தில் வேறு எழுத்தாளர்கள் உண்டா?




எடின்பரோ பிரபு (டியூக் ஆஃப் எடின்பர்க்) ஆற்றல்மிக்க எழுத்தாளர். THE QUESTION OF BALANCE? MEN, MACHINES AND SACRED COWS ஆகியவை இவரது நூல்கள். ஆனால் இவை குழந்தை களுக்கானவை அல்ல.

* வெ. நாசிமுத்து, திருப்பூர்.

? ஒரே மொழியில் பலமுறை எடுக்கப்பட்ட திரைப்படம் எது?

இதற்குரிய பதில் குழந்தை இலக்கியத்துடன் தொடர்புடையதால் இங்கே பதில் தரப்படுகிறது. சார்லஸ் டிக்கென்சின் இறவாப் புகழ்பெற்ற நாவல் ஆலிவர் டிவிஸ்ட். இது எட்டு முறை ஆங்கிலத்திலேயே திரைப்படமாக்கப் பட்டுள்ளது! எட்டாவது முறையாக இதைப்



படமெடுத்தவர்கள் கொலம்பியா நிறுவனத்தார். இது ஆஸ்கர் பரிசையும் பெற்றது!

* வே. வெங்கடேசன், மாயூரம்.

சுனில்கவாஸ்கர் எவ்வளவு புத்தகங்கள் எழுதியிருக்கிறார்? அவை எங்கே கிடைக்கும்?

IDOLS (2Vol) ONE DAY WONDERS, RUNS IN RUINS, SUNNY DAYS, SANDY STORM ஆகியவை. இவை RUPA & CO, 15, BANKIM CHATTERJEE ST, CALCUTTA - 700 073 என்ற முகவரிக்கு எழுதிக் கேட்கவும். புத்தகங்கள் கிடைத்தால் நீங்கள்



அதிர்ஷ்டசாலியே! இந்தப் புத்தகங்களுக்கு உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களிடையே ஏக வரவேற்பு உள்ளது.

* வெ. தமிழ்மணி, ஒரத்தநாடு.

முதலையின் பற்களுக்கு மருத்துவ குணம் இருக்கிறதா?



முதலையின் மாமிசத்திற்கு மருத்துவ குணம் உள்ளது என்பது அறிவியல் அடிப்படையில் ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் பற்களுக்கு மருத்துவ குணம் உள்ளதாக இதுவரை ஏற்கப்படவில்லை. முதலையின் பற்கள் விநோதமானவை. இவை ஆயுள் முழுவதும் விழுந்து முளைத்துக் கொண்டேயிருக்கும். விழும் பற்களை முதலை விழுங்கி விடும்! அதனால் முதலையின் பல் என்பது முதலையைக் கொன்று எடுக்கப்பட்ட பல்லாகத்தான் இருக்க முடியும்!

* சுப்பு. அழகப்பன், பாலூர்.

மறைந்த சலீம் அலிக்கு உலகப் பரிசு கிடைத்தது என்கிறார்களே, இது என்ன பரிசு?

பால் கெட்டி அவார்டு (PAUL GETTY



AWARD) இது இயற்கை - சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்புக்குச் செய்யும் தொண்டுக்காக உலக அளவில் வழங்கப்படும் பரிசு. இதை வழங்கிப் பெருமைப் படுத்தியவர் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ். இந்தப் பரிசைப் பெற்ற ஒரே இந்தியர் அமரர் சலீம் அலி அவர்களே.



* ஓா. பூமணி, பாளையம்கோட்டை.


ஆஸ்கார் விருதை வேண்டாம் என்று மறுத்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?



பேட்டன் (PATTON) என்று ஓர் ஆங்கிலப் படம். சர்வாதிகாரி இட்லரின் தொடர் புடைய 2வது உலகப் போரை அடிப்படை யாக வைத்து எடுக்கப்பட்டது. இந்தப் படத்திற்கு ஏழு ஆஸ்கார் விருதுகள் கிடைத் தன. ஒன்று சிறப்பான நடிப்புக்காக ஸ்காட் புருட்டன் என்பவருக்கு. இவர் இப் பரிசைப் பெற மறுத்து விட்டார்!

* வ. கன்னையா, சிக்கல்.

மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் வொரல் சினிமாவில் நடித்திருக்கிறாராமே!



சர் ஃபிராங்க் வொரல் ஒரு திரைப் படத்தில் தோன்றியிருக்கிறார். அவ் வளவே! படத்தின் பெயர் ''அரவுண்டு தி வேர்ல்டு''. ஒன்று என்றால் நம்ம ஊரில் பத்து என்று கூட்டிக் கொண்டு விடுவார் களே!

கேள்வி கேட்போர் தங்கள் முழுமுகவரியையும் தர வேண்டும். ஒரு கார்டில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம். கேள்விகளை ''ஆசிரியர் – கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 600 032'' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஊசிக்கு ஒளிந்த ராஜா!



புடலங்காய்ப் பட்டணம் என்று ஓர் சின்ன ஊர். அதற்கு ஓர் ராஜா இருந்தார். மக்கள் அவருக்கு வைத்த பெயர் பயில்வான் ராஜா.

ராஜாவின் உண்மைப் பெயர் என்ன தெரியுமா? ஆயிரம் முடி கொண்ட அதி வீர கேசரி! ஆயிரம் பேர்களை அவர் அரிந்து தள்ளினாராம்! எப்படி அரிந்தார். போரிலா, இல்லை தூங்கும் போது போய் வெட்டிக் கொண்டு வந்தாரா என்பதெல்லாம் நமக்கு வேண்டாம். இந்தப் பெயர், பயில்வான் ராஜாவின் கொள்ளுத் தாத்தாவின் தாத்தா பெயர். அவர் சூராதி சூரர். அவர் எழுந்து நின்றால் ஊரே பணியுமாம்! அவரது முழுப் பெயர் என்ன தெரியுமா? அண்டம் அதிர வைத்த ஆயிரம் தலை கொண்ட அதிவீர கேசரி! அப்படிப்பட்ட கொள்ளுத் தாத்தாவின் பெயரைத்தான் பயில்வான் ராஜாவுக்கு வைத்திருந்தார்கள்.

கொள்ளுத் தாத்தாவைப் போலவே பேரனும் எதற்கும் அஞ்சாத சிங்கமாக, வீராதி வீரனாக விளங்கினார். பார்த்தாலே எழுந்து மரியாதை தரும்படி பயில்வானாக; கம்பீரமாக இருந்தார். காலையில் ஐந்து மணிக்கே எழுந்து விடுவார். தண்டால், பஸ்கி, ஓட்டம் எல்லாம் செய்வார். உடம்பை இரும்பைப் போல் வைத்துக் கொண்டிருந்தார். வேட்டையாடப் போனால் துப்பாக்கியைக் கொண்டு போவார். ஆனால் அவர் ஒரு முறைகூட அதைப் பயன்படுத்தியதே கிடையாது. இரும்பு போன்ற கைகளாலேயே காட்டு விலங்குகளை உயிருடன் பிடித்து விடுவார்!

அரச மாளிகையில் ஒரு பெரிய முற்றம் இருந்தது. அதில் வரிசையாகப் பல தூண்கள். ராஜா வேட்டையாடி வந்த விலங்குகளை அந்தத் தூண்களில் கட்டிப் போட்டிருப்பார்கள். புலி, சிங்கம், கரடி, சிறுத்தை எல்லாம் அதில் இருக்கும்!

அது ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்ட காலம். ஆங்கில கலெக்டர்கள், வேட்டையாட வேண்டுமானால் ராஜாவைத்தான் அழைப்பார்கள். ராஜா வேட்டையில் பிடித்த புலிகள் பல, உலகத்தில் பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

பயில்வான் மகாராஜா சாதாரணமானவர் அல்ல. மூன்று குதிரைகளை மின்னல் வேகத்தில் அருகருகே ஓட வைத்து, மூன்றிலும் மாறி மாறிச் சவாரி செய்வார்! ஒரு காரை ஸ்டார்ட் பண்ண வைத்து, பின்னால் ஒரு கயிறைக் கட்டி, அதைப் பிடித்து இழுத்து, நகராது நிற்க வைப்பார்! இந்தக் காரணங்களாலேயே மக்கள் அவரைப் பயில்வான் ராஜா என்று அழைத்தனர்.

சின்னபாபு

பயில்வான் ராஜா தனக்குக் கீழ் இருந்த சிற்றரசர்களுக்கு மட்டுமல்லாது, அக்கம் பக்கத்தில் இருந்த மற்ற அரசர்களுக்கும் சிம்ம சொப்பனமாக இருந்தார்.

இவ்வளவு வீராதி வீரராக இருந்த பயில்வான் ராஜாவுக்கு உலகத்தில் இரண்டைப் பற்றித்தான் பயம். முதலாவது ஊசி குத்திக் கொள்வது. இரண்டாவது கரப்பு!

கிராமங்களில் அம்மையோ காலராவோ கண்டு விட்டால், உடனே அரசு மருத்துவ ஊழியர்கள் கிராமம் கிராமமாக வந்து கட்டாயப்படுத்தி மக்களுக்குத் தடுப்பு ஊசி போடுவார்கள். ஊருக்கு ராஜா என்பதால் முதலில் ஊசிபோட ஊழியர்கள் அரண்மனைக்குத்தான் வருவார்கள்!

புலியைக் கூட உயிருடன் பிடிக்கும் துணிவும் வீரமும் பெற்றிருந்த பயில்வான் ராஜா, ஊசி போடுபவர் வந்தால் நடுநடுங்கி உடனே தலை மறைவாகி விடுவார்! எத்தனை நாட்களானாலும் சரி, அவர்கள் ஊரைவிட்டுப் போன பிறகுதான் திரும்பி வருவார்! ஊசி என்றால் அத்தனை நடுக்கம்!

அதே போல், சிங்கத்தையே அதன் குகைக்குள் புகுந்து சண்டையிட்டு, சிறைப்படுத்தி உயிருடன் பிடித்து வரும் அளவுக்கு வீரம் மிக்க பயில் வான் ராஜாவுக்கு, ஊசிக்கு அடுத்தபடி கரப்பு என்றாலும் கொலை நடுக்கம்! அறைக்குள் எங்கேயாவது கரப்பான் பூச்சியைக் கண்டு விட்டால் போதும். அலறோ அலறு அலறுவார்! கரப்பு களைக் கண்டு பிடித்து அழிக்க அவர் தனி ஆள் படையே வைத்திருந்தார்!

ஒரு முறை ராஜா படகில் போகும்படி இருந்தது. படகு பாதி நதியைக் கடந்து விட்ட பிறகு, படகின் அடிப் பகுதியில் இருந்து ஒரு கரப்பு வெளியே வந்து பயில்வான் ராஜாவை நலம் விசாரித்தது! அவ்வளவுதான்! ராஜா, பேய்பிசாசைக் கண்டவர் போல் அலறினார்! யார் தடுத்தும், எத்தனை பேர் தடுத்தும் திமிறிக் கொண்டு படகிலிருந்து குதித்து விட்டார்!

''இந்த ஆற்றில் முதலைகள் உண்டு, சீக்கிரம் படகில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்று படகோட்டி கெஞ்சினான்.

''இந்தக் கரப்புக்கு முன்னால் முதலைகள் எந்த மூலை? எத்தனை முதலைகள் வந்தாலும் எதிர்த்து நிற்பேன்'' என்று மறுத்து விட்டு நீந்தினார் பயில்வான் ராஜா! எதிர்க்க வந்த ஒரு முதலையோடு போராடி, அதைக் கொன்று, அதன் உடலை இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தார்.


ஒரு முறை புடலங்காய்ப் பட்டினத்தில் ஒரு பகுதியில் யாருக்கோ காலரா கண்டது. கலெக்டருக்குச் செய்தி போனது. ஒருவர் விடாது எல்லோருக்கும் தடுப்பு ஊசி போடச் சொல்லி கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார் கலெக்டர். மருத்துவப் பணியாளர்கள் வந்து ஊரில் முகாம் இட்டனர்.

ஊர்ப் பெரிய மனிதர் என்பதற்காகவும், ராஜ பரம்பரை என்பதற்காகவும் முதலில் அரச குடும்பத்தினருக்குத் தடுப்பு ஊசி போட, தலைமை உதவியாளர் அரச மாளிகைக்கு வந்தார். இவர்கள் வருவதை எப்படியோ தெரிந்து கொண்டு விட்ட ராஜா, கிணற்றுக்குள் இறங்கி, கிணற்று மாடத்திற்குள் ஒளிந்து கொண்டார்! அதிகாரி கண்டு பிடித்து விடவே, அவருக்குப் போக்குக் காட்டிவிட்டு ஓட்டம் பிடித்தார். அதிகாரியும் மற்றவர்களும் துரத்தி வந்தனர்.


''என்னடா! தனக்குத்தானே சிரிச்சிக்கிட்டுப் போறே?''

''யாரும் பார்க்காத போது, ஸ்டாம்ப் ஒட்டாத கடிதத்தை தபால் பெட்டியில் போட்டுட்டேன்!''

- தக்கோலம். அ. முஸ்தபா







"புலியார் தன்னோட உடலையே திரும்பித் திரும்பி பார்த்துக்கிட்டு நிண்டாடறாரே?"

"கணக்கில புலின்னு தம்பட்டம் அடிச்சிட்டிருந்தார். கிளாஸ் வாத்தியார் உன் உடம்பிலே எத்தனை கோடு இருக்குன்னு எண்ணிச் சொல்ல சொல்லிட்டாராம். அதான்!"

புயல் வேகத்தில் ஓடிய ராஜா ஒரு மாந்தோப்பிற்குள் நுழைந்து கொண்டார். துரத்தி வந்தவர்களும் விடவில்லை. தோப்புக்குள் நுழைந்து தேட ஆரம்பித்தனர். ஊசி போட்டுக் கொள்ள நடுங்கிய ராஜா, அவர்கள் கையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு பெரிய மாமரத்தில் ஏறி ஒளிந்து கொண்டார்! அதிகாரியும் மக்களும் பெரும் பாடுபட்டு ராஜாவைக் கண்டு பிடித்தனர்.

"மகாராஜா, எறும்பு கடிப்பதைப் போலத்தான் இருக்கும். கீழே இறங்கி வந்து போட்டுக் கொள்ளுங்கள்" என்று தயவாகக் கேட்டுக் கொண்டார் அதிகாரி.

"புலிக்கும், முதலைக்கும் அஞ்சாத வீராதி வீரர், இப்படிக் காலரா தடுப்பு ஊசிக்குப் பயப்படலாமா? எங்களுக்கு அவமானமாக இருக்கிறது. கீழே இறங்கி வாருங்கள்" என்று வேண்டிக் கொண்டார் மகாராணியார்.

இதற்குள் கலெக்டருக்குச் செய்தி எட்டி அவர் தானே கிளம்பி வந்து விட்டார். கிழே இறங்கி வந்து தடுப்பு ஊசி போட்டுக்கச் சொல்லி அவரே மகாராஜாவை வேண்டிக் கொண்டார்.

பயில்வான் ராஜா அசையவில்லை. கலெக்டருக்குக் கோபம் வந்தது.

"குடிமக்களுக்கு வழிகாட்ட வேண்டிய நீங்களே இப்படித் தடுப்பு ஊசிக்குப் பயந்து, மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டால் எப்படி? தடுப்பு ஊசியை எல்லோரும் போட்டுக் கொண்டால்தான் பாதுகாப்பு. ஒருவருக்கு விட்டுப் போனால் கூடப் பயனில்லை. கீழே இறங்கி வாருங்கள். வலிக்காமல் போடச் சொல்கிறேன்" என்று கோபத்தை அடக்கிக் கொண்டு வேண்டிக் கொண்டார் கலெக்டர்.

ராஜா அசையவில்லை. கலெக்டரின் பொறுமை போய்விட்டது.

"இந்த ராஜாவால் மற்றவர்களும் கெட்டுப் போகிறார்கள். இவரை மரத்தில் இருந்து இறங்க வைப்பவர்களுக்கு ஓர் எருமைமாடு பரிசு தருகிறேன்" என்று அறிவித்தார் கலெக்டர்.

"என் பங்குக்கு நானும் ஒரு பசுமாடு தருகிறேன்" என்றார் மகாராணியார்.

குழந்தையாகவோ, சிறுவனாகவோ இருந்தால் மரத்தில் ஏறி, குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு வந்து விடலாம். பார்த்தாலே பயப்படும் படி பயில்வான் தோற்றமுடைய ராஜாவை யாரால் கீழே கொண்டு வர முடியும்? எல்லோரும் திகைத்தனர். யாரும் முன் வரவில்லை!

கலெக்டருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. "இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் இந்த பயந்தாங்குள்ளி ராஜாவைக் கீழே வரும்படி செய்து, அவருக்குக் காலரா தடுப்பூசி போட வைப்பது அரச குடும்பத்தாரின் பொறுப்பு. இதை அவர்கள் செய்ய வில்லை என்றால், அரச குடும்பம் உட்பட இந்த புடலங்காய்ப் பட்டணத்து மக்கள் அனைவருக்கும் தண்டனை வரி விதிக்கப் போகிறேன்" என்று அறிவித்தார்.

'தண்டனை வரி என்பது ஒரு பொதுக் குற்றத்திற்காக, ஊர் மக்கள் அனைவருக்கும் விதிக்கப்படும் அபராத வரி.

"மகாராஜா, கலெக்டர் அறிவிப்பைக் கேட்டீங்களா? உங்களுடைய பிடிவாதத்திற்காக நம் பட்டணத்து மக்கள் தண்டனை வரி கட்டுவதா? இறங்கி வாருங்கள்" என்று கெஞ்சினார் ராணியார். ராஜா அசைய வில்லை.

''இத்தனை பேர் இருக்கிறீர்களே.... ராஜாவைக் கீழே இறங்க வைக்க ஒருவராலும் முடியவில்லை?'' என்று வேதனையுடன் கேட்டார் ராணி யார்.


''நான் முயன்று பார்க்கிறேன் மகாராணி'' என்று முன்னால் வந்தான் மூக்காண்டி. அவன் மாடு மேய்க்கும் சிறுவன். அவன் கையில் ஒரு துணிப் பை இருந்தது. அதை சுருக்கு முடி போட்டு வைத்திருந்தான். அந்தச் சுருக்கு முடியின் முனையோடு மூக்காண்டி ஒரு நீண்ட கயிறைக் கட்டினான். பையை எடுத்துக் கொண்டு, ஏறி, ராஜா இருந்த கிளைக்குக் கீழ்க் கிளையில் மாட்டி விட்டுக் கீழே இறங்கினான். சுருக்கு முடியோடு இணைக்கப்பட்ட கயிறு கீழே தொங்கியது. கீழே வந்த மூக்காண்டி, கயிறை மெல்லப் பிடித்து இழுத்தான். மேலே, பைதிறந்து கொண்டது!

அடுத்த வினாடி மேலே இருந்த ராஜா ''ஐயோ! வேண்டாம். பையை முழுக்கத் திறக்காதே! நான் வந்து விடுகிறேன். கீழே இறங்கி விடுகிறேன்!'' என்று அலறினார். 'கிடு கிடு'வென்று இறங்கினார். காத்திருந்தவர்கள் அவரை விடாது பிடித்துக் கொண்டனர். ராஜா வேண்டிக் கொண்டபடி, ராஜாவின் கண்களை கலெக்டர் கட்டிவிட்டார். பிறகு காலரா தடுப்பு ஊசி போடப் பட்டது. அப்படியும் ''ஐயோ அப்பா'' என்று ராஜா போட்ட அலறல் புடலங் காய்ப் பட்டணத்தை கிடுகிடுக்க வைத்தது!


''புத்திசாலிப் பையன்'' என்று மூக்காண்டியைப் பாராட்டிய கலெக்டர் ''எருமைப் பரிசு கண்டிப்பாக உனக்கு உண்டு'' என்றார். ''பசு பரிசும் உண்டு'' என்றார் ராணியார்.

''ஆமாம், அந்தப் பையில் என்ன இருந்தது? அப்படி அலறிக் கொண்டு கீழே வந்து விட்டாரே!'' என்று வியப்புடன் கேட்டார் கலெக்டர்.

மறுபடி மூடிவிட்ட பையை மூக்காண்டி திறந்து காட்டினான். அதில் ஒரு பெரிய கரப்பான் பூச்சி இருந்தது!



காங்கரு மாமாவின் கைகுட்டை பையிலிருந்து கீழே விழுந்தால் அவரால எடுக்க முடியாது. ஏன்னா அவருக்குதான் கை குட்டையாச்சே!



''எருமை மாமாவுக்கு என்ன கோபம்?''

''என்னருமை நண்பரேன்னு சொல்றப்ப வாய் தவறி என்னெருமை நண்பரேன்னு சொல்லிட்டேன். அதான்!''



''நமது அவைப் புலவர் முயலார் ரொம்ப புத்திசாலி. பாரேன் முதலையரசர் தன்னைப் புகழ்ந்து பாடச் சொன்னதும், அகர, 'முதல'ன்னு பாடிக் காட்டி பரிசு வாங்கிட்டாரே.''

பிருந்தாவனக் கவியரங்கம்



அருமைத் தம்பி

எங்கள் அருமை தம்பிதான்
எனக்கு இனிய கரும்புதான்
எங்கள் வீட்டு செல்வந்தான்
எனக்குப் பிடித்த வெல்லந்தான்!

பேரைச் சிதைச்சுச் சொல்லுவான்
பின்னால் வந்து குத்துவான்
தாவி வந்து கொஞ்சுவான்
தங்க கம்பி தம்பிதான்!

முதுகில் ஏறி அமருவான்
முட்டி போட்டுத் தவழுவான்
முன்னால் வந்து ஆடுவான்
முத்தம் தந்து கிள்ளுவான்!
- வே. பூங்குன்றன் (வயது 13),
வடமாதிமங்கலம்.

சட்டை

புத்தம் புதிய சட்டை - நான்
போட்டிருக்கும் சட்டை!
மெத்த நல்ல சட்டை - என்
மேனி போட்ட சட்டை!

பருத்தி இழையில் சட்டை - நான்
பார்த்தெ டுத்த சட்டை!
எரிக்கும் கோடை நாளில் - எவர்க்கும்
ஏற்ற பருத்தி சட்டை!

கட்டம் போட்ட சட்டை - கைத்
தறியாய் ஆன சட்டை!
சிந்தைக் கவரும் சட்டை - இச்
சிறுவன் போட்ட சட்டை!
- எஸ். அன்பு, கல்லாவி புதூர்.



மரம்

கோடையிலே நிழல் தரும்
கொளுத்தும் வெம்மை குறைத்திடும்
வீட்டில் அழகு தந்திடும்
விரும்பிப் பறவை தங்கிடும்

மண் அரிப்பைத் தடுத்திடும்
மழையைப் பெருக்க உதவிடும்
விண்ணின் தூய்மை காத்திடும்
வேண்டும் நன்மை செய்திடும்

மரமே உலகின் தாயாகும்
மறந்தால் பெரிய தீம்பாகும்!
மரத்தை வெட்டி வீழ்த்தாமல்
முயன்று காத்து வாழ்ந்திடுவோம்!
- மா. சுப்பிரமணியன், புதுப்பட்டி.



பிருந்தாவனக் கவியரங்கம்



கேட்டுக்கோ!

பாட்டுக்கு அழகு பண்ணாகும் கேட்டுக்கோ
பாலுக்கு அழகு சுவையாகும் கேட்டுக்கோ
வீட்டுக்கு அழகு பெண்ணாகும் கேட்டுக்கோ
வீதிக்கு அழகு விளக்காகும் கேட்டுக்கோ!

கண்ணுக்கு அழகு இமையாகும் கேட்டுக்கோ
கல்விக்கு அழகு படிப்பாகும் கேட்டுக்கோ
மண்ணுக்கு அழகு மரமாகும் கேட்டுக்கோ
மனிதர்க்கு அழகு அறிவாகும் கேட்டுக்கோ!

ஆற்றுக்கு அழகு கரையாகும் கேட்டுக்கோ
அறிவுக்கு அழகு பணிவாகும் கேட்டுக்கோ
நாற்றுக்கு அழகு வேராகும் கேட்டுக்கோ
நெஞ்சுக்கு அழகு நெறியாகும் கேட்டுக்கோ!

கடலுக்கு அழகு அலையாகும் கேட்டுக்கோ
கவிதைக்கு அழகு நடையாடும் கேட்டுக்கோ
நாட்டுக்கு அழகு நல்லறிஞர் கேட்டுக்கோ
நாவிற்கு அழகு நயமாகும் கேட்டுக்கோ

- கி. சந்திரசேகர் (வயது 14), சென்னை - 11.



உயர்வோம்!

ஒழுக்கம் உடையோர் உயர்ந்திடுவார்
உயர்ந்த பதவிகள் வகித்திடுவார்
ஒழுக்கம் இல்லார் வீழ்ந்திடுவார்
இழிந்த நிலைக்கு இறங்கிடுவார்

உழைக்கத் தயங்கார் உயர்ந்திடுவார்
உலகை உயர்த்திக் காட்டிடுவார்
உழைக்க விரும்பார் வீழ்ந்திடுவார்
உள்ளது எல்லாம் இழந்திடுவார்

உழைப்பு ஒழுக்கம் இரண்டினையும்
உயிராய் எண்ணி வாழ்ந்திடுவோம்
தழைத்து வளங்கள் கூடிவரும்
தரணியில் உயர்ந்து வாழ்ந்திடுவோம்!

- ஜி. தேவன் (வயது 12), சென்னை - 2.

நன்றி செய்வோம்!

நமக்கு உதவி செய்தோரை
நாளும் போற்றித் துதித்திடுவோம்
இமைக்கும் நேரந் தனிலேனும்
எண்ணி வாழ்த்திக் களித்திடுவோம்

நன்றி மறந்தவர் வாழ்ந்த தில்லை
நன்றி காத்தவர் தாழ்ந்த தில்லை
நன்றி உணர்வைப் பெற்றாலே
நமக்கு வீழ்ச்சி வருவதில்லை

நாயைப் பார்த்துக் கற்றிடுவோம்
நன்றி உணர்வை வளர்த்திடுவோம்
தாயுடன் தந்தையைப் பணிந்திடுவோம்
தூய மனத்துடன் நன்றிசெய்வோம்!

- கோபால் கிருஷ்ணன், செஞ்சி.

பிருந்தாவனக் கவியரங்கம்

பாருங்கள்!



கொஞ்சிப் பேசும் குழந்தைகளே
கொஞ்ச நேரம் நில்லுங்கள்!
நெஞ்சம் மகிழ்ச்சி கொண்டிடவே
நீங்கள் பாடிக் காட்டுங்கள்!

ஒற்றுமை அமைதி பணிவெல்லாம்
ஓங்குக என்றே பாடுங்கள்!
கல்வி ஒழுக்கம் பண்பெல்லாம்
குழைத்துப் பாட்டுப் பாடுங்கள்!
- ஜி. சபீர் அகமது, சோழபுரம் அஞ்சல்.

பட்டு உடல் பூனை!



குட்டிக் குட்டிப் பூனை
குறும்பு மிக்க பூனை
பட்டுக் காலால் நடந்து
பாலைத் திருடும் பூனை!

எலியைக் கண்டால் பதுங்கும்
எங்கள் வீட்டுப் பூனை
புலியைப் போலப் பாயும்
பாய்ந்து எலியைப் பிடிக்கும்!


நீரில் குளிக்க மறுக்கும்
நீண்ட வாலுப் பூனை!
பரணில் ஏறித் தூங்கும்
பட்டு உடல் பூனை!
- எம். திலீப்குமார் (வயது 12),
சென்னை - 2.

வா! வா! வா!

மழையே மழையே வா! வா! வா!
மண்ணில் பொலிவைத் தா! தா! தா!
செழித்துப் பயிர்கள் விளைந்திடவே
சீராய் மழையே வா! வா! வா!

வளமும் நலமும் சேர்ந்திட்வே
விரைந்து மழையே வா! வா! வா!
உழவர் ஏக்கம் போக்கிடவே
உயிர்களைக் காத்திட வா! வா! வா!

தகிக்கும் வெம்மை தணித்திடவே
தயவாய் மழையே வா! வா! வா!
பகைமை வறுமை பறந்திடவே
பாரோர் போற்றிட வா! வா! வா!
- என். கோபால் (வயது 13),
மேட்டுவலசு.




சிரிப்...



தினமும் போஸ்ட் மேன் அந்த வீட்டுக்கு வந்துட்டுப் போவார்டா!
அவ்வளவு பெரிய மனிதரா அவரு?
போஸ்ட்மேனோட வீடே அதுதான்டா!
வலங்கைமான் நூர்தீன்
நம்ம பையன் ஒழுங்கா சொன்னதைக் கேட்டுக்கிட்டு இருக்கிறதைப் பார்த்தா ரொம்ப சந்தேகமா இருக்கு கமலா...
?
அவனுக்கு 'ரிஸல்ட்' வந்துச்சோன்னு
சீர்காழி வி. ரேவதி
மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டால் என்னால படிக்க முடியுமா? ஆச்சரியமா இருக்குதே?
இதில் என்ன ஆச்சரியப் பட இருக்கு?
எனக்குப் படிக்கத் தெரியாது!
எஸ். வசந்தகுமார்
தண்ணில கல்லைப் போட்டா மூழ்குதே ஏன்?
அதற்குத்தான் நீச்சல் தெரியாதே!
எங்கண்ணே கிளம்பிட்டீங்க?
படம் எடுக்க லொகேஷன் பார்க்கத்தான்!
பி. பிரகாஷ்

எத்தனை கொக்குகள் உள்ளன? கூட வேறு பறவைகள் இருக்கின்றனவா?



விடை! 25 கொக்குகள், ஆந்தை, மீன்கொத்தி, வாத்து, காகம், கோழி.

மரம் தந்த வரம்!

எஸ்டோனியன் கதை



மரங்களை மனதார நேசிக்கும் ஓர் இளைஞன் விறகு வெட்டி வரக் காட்டுக்குப் போனான். காட்டிலே எத்தனையோ மரங்கள். இளைய வயது மரங்கள், முற்றிய மரங்கள், குட்டை மரங்கள், நெட்டை மரங்கள், ஒல்லியானவை, தடித்துப் பெருத்துப் பருத்த மரங்கள் என்று அவன் கண்ணிலே பட்டன. மரத்தின் மீது அமர்ந்து கறு கறுப்பாகத் தெரிந்த பறவைகளைப் பார்த்துப் பரவசப்பட்டான் அவன். அவற்றின் கூச்சல் அவனுக்கு இனிமை அளித்தது. அடர்ந்த மரங்களிடையே தெரிந்த ஒருவகையான நறுமணத்தை முகர்ந்து மகிழ்ந்தான். அவ்வப்போது வீசிய காற்றிலே மரக்கிளைகள் அசைய, அதனால் பரவிய உடலுக்கு இதமான வருடலை அவன் அனுபவித்தான்.

மரங்களை வெட்டவே மனம் வராத அவன், வேறு வழியின்றி வந்த வேலையைப் பார்ப்போம் என்று ஒரு மரத்தருகே சென்று கோடாலியை ஓங்கினான். அது ஓர் அத்தி மரம். அவன் காதிலே யாரோ பேசுவது கேட்டது. சற்றே தயங்கிக் கவனித்து ஆர்வத்துடன் உன்னிப்பாகக் காது கொடுத்துக் கேட்டான். ஆமாம் அந்த அத்திமரம் தான் பேசியது! ''தம்பி, நிறுத்து. என்னை வெட்டாதே. நான் இன்னும் வளர வேண்டும். என் இளம் கன்றுகள்

தமிழில் : தம்பி சீனிவாசன்

பெரிதாக வேண்டும். எங்கள் வம்சம் பெருக நான் எவ்வளவோ செய்ய வேண்டும். இப்போது என்னை வெட்டாதே. நான் இல்லையென்றால் மர வம்சத்துக்கே நஷ்டமாகும்'' என்றது குரல்.

அங்கிருந்து தயக்கத்துடன் நடந்த இளைஞன் அடுத்ததாக இருந்த அரச மரத்தை வெட்டப் போனான். இப்போதும் ஒரு குரல் கேட்டது. உற்றுக் கவனித்தால் குரல் இப்படிக் கேட்டது : ''நிறுத்து தம்பி. என்னை வெட்டாதே. என்னை நம்பி எத்தனை பறவைகள் இங்கே கூடு கட்டியிருக்கின்றன பார்! எத்தனை பேருக்கு நான் நிழல் தருகிறேன் கவனி! என்னைப் போல இன்னும் சில அரசமரங்கள் இங்கே வந்தும் என்னை வெட்டலாம். நானும் முதிர்ந்து விடுவேன். அப்போது வெட்டு,'' என்று அரச மரம் பேசியது.

இளைஞன் அங்கிருந்து நகர்ந்தான். ஒரு தேவதாரு மரத்தை வெட்டப் போனான். அது பேசியது. ''வெட்டாதே, தம்பி வெட்டாதே. தேவதாரு மரங்கள் அதிகம் இல்லை பார். எங்கள் இனம் அதிகம் ஆனபிறகு ஓரிரு மரத்தை வெட்டினாலும் பரவாயில்லை. முதலில் எங்கள் எண்ணிக்கையைப்




பெருக்க வேண்டும். அதற்குத் தடையாக இராதே'' என்றது குரல்.

இது சரி என்று தோன்றவும் இளைஞன் அங்கிருந்து நகர்ந்து ஒரு தேக்கு மரத்தை வெட்டக் குறிவைத்தான். மறுபடியும் மரம் பேசும் குரல் காதில் பட்டது: ''தம்பி, நிறுத்து. உனக்கும் உங்கள் ஊரில் உள்ளவர்களுக்கும் நல்ல மரத்தில் ஆன வீட்டுப் பொருள்கள் வேண்டும் என்றால் இப்போது என்னை விறகுக்காக வெட்டாதே. காலம் வரும் வரை பொறுமையாக இரு'' என்றது மரக் குரல்.

அடுத்து சந்தன மரத்தை வெட்டப் போனால், அந்த மரமும் தடுத்தது. ''தம்பி. நல்லவனே! சந்தன மரத்தை யாராவது விறகுக்கு வெட்டுவார்களா? எங்களை வளர விடு. நாங்கள் எங்கும் நல்ல மணம் வீசுவோம். எண்ணெய் தருவோம். நாங்கள் முழுவதும் வளர்ந்து பயன்தர வேண்டும். இப்போதே வெட்டித் தொந்தரவு தராதே'' என்றது சந்தன மரக் குரல்.

இவ்வாறே வேப்பமரமும் கூறியது, ''நாங்கள் இருப்பதால்தான் கெட்ட பூச்சிகளால் அழிவு நேராமல் பார்த்துக் கொள்ள முடிகிறது. எத்தனையோ நோய்களுக்கு நாங்கள் மருந்தாகிறோம். மனிதக் குழந்தைகளும் செடி கொடிகளும் ஆரோக்கியமாக



இருக்கும்படி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்களை விறகுக்காக வெட்டுவார்களா!'' என்று வேம்பு குரல் கொடுத்தது.

மெல்லிய மரமான சவுக்கு மரம், ''நான் தடிமனாகப் பெருக்கவேண்டும். காத்திரு'' என்றது.

தடிமனான ஆலமரம், ''நான் ஆயிரம் பேருக்கு நிழல் தருகிறேன். நான் எப்போது யாருக்கும் பயன் இல்லாது போகிறேனோ, அப்போது என்னை வெட்டு'' என்றது.

''எல்லாரது தாகத்தையும் தீர்க்கும் எங்களையா வெட்டுவது?'' என்றன தென்னையும் ஈச்சமரமும். பருத்தி தரும் இலவமரத்தை வெட்ட முடியவில்லை; பணம் தரும் மகிழ மரத்தை வெட்ட மனம் வரவில்லை. நல்ல சுவையான பழம் தரும் நாவல் மரத்தையும் ஆண்டு தோறும் காய்த்துத் தொங்கும் மாமரத்தையும் எப்படி வெட்டுவது!

அலைந்து அலைந்து, காடு முழுவதும் திரிந்து, களைத்துப் போய், ஒரு மரத்தையும் வெட்டாமல், காட்டின் எல்லையிலே வந்து சேர்ந்தான் இளைஞன். கோடாலியைத் தரையில் ஊன்றி அதன் மீது சாய்ந்தபடி சோர்ந்து கிடந்தான்.

''என்ன இது? ஆச்சரியமாக இருக்கிறது! மரங்கள் பேசுமா! ஒவ்வொன்றும் பேசியதைக் கேட்டேனே. அவை சொன்ன கருத்தெல்லாம் சரியென்று தோன்றுகிறதே. அதனால் தானே எதையும் வெட்டாமல் விட்டு விட்டேன். இப்போது வீட்டுக்கு வேண்டிய விறகுக்கு என்ன செய்வது?'' என்று சிந்தனை செய்து வருத்தப்பட்டான் இளைஞன்.

அப்போது அங்கே ஒரு குடுகுடு கிழவன் வெள்ளை தாடி தரையில் புரளப் புரள மெல்ல நடந்து அருகே வந்தான். ''என்ன தம்பி கவலையாக இருக்கிறாய்? இங்கே எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்குமே. யாருமே வருத்தமாக இருக்க மாட்டார்களே! உனக்கு என்ன கவலை?'' என்று கேட்டான் கிழவன்.

இளைஞன் தலை நிமிர்ந்தான். கிழவனுக்கு மரியாதை காட்ட வேண்டும் என்று தோன்றியது. எழுந்து நின்று தன் கதையைச் சொன்னான். விறகு வெட்ட எந்த மரமும் கிடைக்க வில்லை என்பதைத் தெரிவித்தான்.

''மரங்கள் உன்னோடு பேசின என்றா சொல்கிறாய்?''

''ஆம் ஐயா! அதிசயமாக இருக்கிறது!''

''அதிசயம் இல்லை தம்பி. மரமும் பேசும். எல்லாமும் பேசும். பிற உயிரினங்களை நீ மனமார நேசிக்கிறாய். அதனால்தான் மரத்தின் குரல் உன் காதில் ஒலித்தது. நான் யார் தெரியுமா! இந்த மரங்கள் எல்லாவற்றுக்கும் அப்பன். என் குழந்தைகளே இந்த மரங்கள். அவற்றை வெட்டாமல் விட்டு வைத்தாயே, உன்னை வாழ்த்துகிறேன். ஆனால் நீ துயரப்படாதே. தினசரி உன் வீட்டுக்குத் தேவையான விறகு கிடைக்க வழி செய்கிறேன். உனக்கு ஒரு வரம் தருகிறேன். இதோ இந்தக் கழியை வைத்துக்கொள். இது தங்கக் கழி. இதை வீசி நீ என்ன விரும்புகிறாயோ அதைப் பெறலாம். ஆனால் ஒன்று. பேராசைப் படாதே. எளிமையான திருப்தியான வாழ்வு வாழவே இந்த மந்திர சக்தி பயன்படும். நீ உழைத்துப் பாடுபடு. யாருக்கும் தீங்கு இழைக்காமல் பார்த்துக் கொள். உனக்கு அளவாகத் தேவையானது எல்லாம் கிடைக்கும். வாழ்க!'' என்று சொல்லி குடுகுடு கிழவன் மரங்களிடையே கரைந்து கலைந்து போய் விட்டான்.



''கடிகாரத்தில் பெரிய முள் எதுல இருக்கு? சிறிய முள் எதுல இருக்கு?''
''ரெண்டுமே கடிகாரத்துலதான்!''
- இர. ரங்கராஜன்



தங்கக் கழியுடன் வீடு திரும்பிய இளைஞன் அன்று தனக்கு வேண்டிய விறகு கிடைக்க ஒருமுறை கழியை வீசினான். அளவான விறகு கிடைத்தது. அவன் தங்கியிருக்க எளிமையான வீடு ஒன்றையும் எழுப்பித் தந்தது தங்கக் கழி. தோட்டம் போட்டு, மாடு கன்று வைத்து உழைத்து வசதியாக வாழ்ந்தான் இளைஞன். மரக்குலக் கிழவன் சொன்னது நினைவிருந்தது. எளிமையான திருப்தியான வாழ்வே இனிமையான சுகமான வாழ்க்கை என்று அனுபவத்தில் உணர்ந்தான் அவன். ஆகவே வயதான காலத்தில் தன் குழந்தைகளுக்கு இந்த உபதேசத்துடன் தங்கக் கழியை விட்டுச் சென்றான். அவன் குடும்பத்தாரும் அதன் அருமை தெரிந்து தலைமுறை தலைமுறையாக எளிமையான திருப்தியான, உழைப்பும் திறமையும் நிறைந்த வாழ்வு வாழ்ந்தார்கள்.


ஆனால், பின்னால் ஒரு தலைமுறையில் வந்த ஒருவன், தங்கக் கழி என்னதான் செய்யும் என்பதைச் சோதிக்க விரும்பினான். அசடான அந்த மனிதன் மரங்களை நேசிக்கத் தெரியாத முரடனாகவும் பேராசைக்காரனாகவும் இருந்தான்.

''குளிர் பொறுக்கவில்லை. இப்போது யாராவது முதுகுப்பக்கம் சூடு காட்டினால் நன்றாக இருக்கும். வானத்துச் சூரியனை என் முதுகுக்குப் பின் வந்து சூடுதரச் சொல்'' என்று கூறி தங்கக் கழியை வீசினான் அந்தப் பொல்லாதவன்!

இது இயற்கைக்கு விரோதமான வேண்டுகோள். எனவே, தங்கக் கழி செயலாற்றவில்லை. ஆனால், அவனுடைய வேண்டுகோள் சூரியனுக்குக் கோபத்தைக் கொடுத்தது. தனது மிக வெப்பமான கதிர்களை பூமிக்கு அனுப்பி அந்தப் பொல்லாத மனிதனின் முதுகிலே குத்தும்படி செய்தது! அந்த வெப்பம் தாங்காமலேயே தீய்ந்து போனான் அந்த மனிதன். அவன் மட்டுமா? அவன் வீடும் பொசுங்கியது. அவனது உடைமைகளும் கருகின. தங்கக் கழியும் அதில் எரிந்து சாம்பலானது!

மரங்களின் அப்பன் தந்த வரம், மரங்களை நேசிக்கத் தெரியாத ஒரு காட்டுமிராண்டி மனிதனின் பேராசையாலும் அசட்டுத் தனத்தாலும் முடிந்து மனித குலத்திற்கு மாபெரும் இழப்பாகியது.

WHICH MAGAZINE GIVES YOU STORIES, POEMS, A QUIZ, JOKES, PUZZLES AND MORE FOR JUST Rs. 3?



GOKULAM

of course!


The monthly magazine for children


96 PAGES OF FUN EVERY MONTH!

- "Attack!" — *an exciting sci-fi story*
- The Picnic — *join Shyamu the friendly ghost*, in a day of fun


DON'T MISS THE JULY '92 ISSUE

GOKULAM, GUINDY, MADRAS - 600 032.


மாவீரன் மேகநாதன்
கதை:
குமரன்
படம்:
இலங்கை. அரண்மனையில் ராவணனின் பரபரப்பு —
என்ன, குழந்தை பிறந்து விட்டதா?
இன்னும் இல்லை!
சற்று நேரம் சென்று ஒரு பேரொலி எழ...
ஆ! இது என்ன? இடியோசை கேட்கிறதே!
சில கணங்களில் —
மன்னவா! ஆண் குழந்தை!
நற்செய்திக்குப் பரிசு
உங்கள் மகனைப் பாருங்கள்!
அது சரி... அந்த இடியோசை?
இவன் செய்த கர்ஜனைதான்...!
பிறக்கும்போதே அழுவதற்குப் பதில் இடியோசை போல் கர்ஜித்த உனக்கு மேகநாதன் என்று பெயர் சூட்டுகிறேன்...




மேநாதன் தந்தை போலவே
பலசாலியாகவும்...
விடாதே! நண்டுப்பிடி போட்டுக் கீழே தள்ளு!
கல்வி – கலைகளில்
தேர்ந்தும்...
பக்திமானாகவும்
விளங்கினான் —
இந்த இளம் வயதிலேயே இத்தனை பக்தியா?
சிவபெருமானை நோக்கிக்
கடும் தவமிருந்தான் மேகநாதன்.
என்ன வரம் வேண்டுமோ கேள்!
மேலும் கீழும் எந்தத் திசையிலும் பறக்கும் தேர் வேண்டும்!
தந்தேன்... அப்புறம்?


யாருமறியாமல் மறைந்திருந்து யுத்தம் செய்யும் திறன் வேண்டும்...
மகா மாயாவியாக விளங்குவாய்!
வரங்களுடன் இலங்கை திரும்பினான் மேகநாதன்.
வா மகனே!
அற்புதமான தேருடன் வந்திருக்கிறேன் அப்பா!
மகனுடைய வரங்களால் மேலும் கர்வமடைந்த ராவணன்–
இந்திரனையும் வெல்வேன்...!
ராவணன் – இந்திரன் யுத்தம்...
அட, இவனை வெல்வது அத்தனை சுலபமில்லை போலிருக்கே!
அப்பா, கவலை வேண்டாம்!
மேகநாதன், இந்திரன் கண்களுக்குத் தெரியாமல் அவனை நெருங்கி...
இவனை மாயையால் பிணைப்பேன்!




இந்திரன் கட்டுண்டான்...
இந்திரன் என் வசம். இனி இந்திர லோகம் என் தந்தைக் குரியது!
இந்திரனிடமிருந்த வில்லையும் அம்புகள் அடங்கிய தூளியை யும் பறித்துக் கொண்டான் மேகநாதன்...
சிறையில் உனக்கு இவை தேவைப்படாது!
பிரும்மா தோன்றி...
மேகநாதா! இது முறையல்ல. என் வேண்டுகோளுக்கு இணங்கியாவது இந்திரனை விட்டுவிடு!
பதிலுக்கு என்ன தருவீர்?
இந்திரனுக்கு நான் அளித்திருந்த பிரும்மாஸ்திரத்தைப் பறித்துக் கொண்டாயே, போதாதா?
அது நான் வென்றது. நீங்கள் தந்தது அல்ல... இந்திரனை விடுவிக்க ஒரு நிபந்தனை...
என்ன?
பதினான்கு வருஷம் தூக்கமில்லாமல் இருக்கும் ஒருவனால்தான் எனக்கு மரணம் நேர வேண்டும்!
வரம் தந்தேன்!


பிரம்மாவிடம் வரம்பெற்ற மேகநாதன் இந்திரனை விடுவிக்க...
பிரம்ம தேவரே நன்றி!
ராவணன் மகிழ்ந்தான் –
மகனே! மேகநாதா! இந்திரனை வென்ற நீ, இனி இந்திரஜித் என அழைக்கப் படுவாய்!
பதினான்கு வருஷங்கள் உறங்காதவன் யார் உண்டு? உனக்கு மரணமே கிடையாது! சிரஞ்சீவி!
மேகநாதனின் கர்வம் அதிகரித்தது –
மரணத்தை வென்றேன்! இந்திரஜித் ஆனேன்! உலகில் என்னை வெல்ல யாருமில்லை!
நாட்கள் பல சென்றன. சீதையைத் தேடி அலைந்தார் ராமர் –
அனுமனே! இலங்கை சென்று சீதையைக் கண்டு வா!



அனுமார் கடலைக் கடந்து —
அசோக வனத்தில் சீதையைக் கண்டார் —
இந்தா, சூடாமணி. நீ என்னைக் கண்டதற்கு இது சான்று கூறும்.
அனுமார் அசோக வனத்தை அழித்தார் —
எதிர்த்துத் தடுக்க முற்பட்ட பல அரக்கரைக் கொன்றார். காவலர் இந்திரஜித்திடம் சென்று —
ஒரு குரங்கு படாத பாடு படுத்துகிறது. எங்களால் சமாளிக்க முடியவில்லை!
இதோ நானே வருகிறேன்!
அனுமாரும் இந்திரஜித்தும் போரிட்டனர் —
அட, இந்தக் குரங்கை அவ்வளவு எளிதாக அடக்க முடியாது போலிருக்கே!




பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகிக்க வேண்டியதுதான்.
பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட அனுமனைத் தந்தை முன் கொண்டு வந்து நிறுத்தினான் இந்திரஜித் –
அசோக வனத்தை அழித்து, அரக்கர் பலரைக் கொன்ற குரங்கு இதோ!
ராவணன் கர்வத்துடன்...
கேவலம் ஒரு குரங்குக்குப் பயப்படுவதா? மேகநாதா! பிரம்மாஸ்திர மந்திரத்தைத் திரும்பப் பெற்றுக் கொள். கட்டு விலகட்டும்!
இந்திரஜித் தந்தை சொற்படி செய்ய, விடுதலை பெற்ற அனுமார்–
உனக்கு நிகரான ஆசனம் பார்!
எப்படி?
அடேய்! இந்தக் குரங்கின் வாலைக் கொளுத்துங்கள்!


ஆமா, நிறைய எண்ணெய் விட்டு நல்லா கொளுத்துவாங்க. திரு திருன்னு எரியணும்!
வாலினால் தீயிட்டுக் கொளுத்துவேன்! இலங்கை அழியும்!
அனுமார் இராமனிடம் திரும்பி—
கண்டேன் சீதையை! இதோ சூடாமணி!
உனக்கு நிகர் நீதான்!
இராமர் இலங்கையை அடையக் கடல் மீது பாலம் அமைத்தார்—
நானும் உதவுகிறேன்.
யுத்தம் தொடங்கி நடக்க...
பெரும் சேனையுடன் வந்தான் இந்திரஜித்.
யாரடா அவன்! குரங்குச் சேனையுடன் இலங்கை மீது படையெடுக்கத் துணிந்தவன்?



இந்திரஜித்திடம் வானர சேனை தோற்றது. லக்ஷ்மணர் —
அடடா! வானர வீரர்கள் நிறையப்பேர் இறந்து விட்டார்களே!
ராமரிடம் கூற —
அவனை நானே எதிர்க்க அனுமதி கொடுங்கள்!
தம்பி, இந்திரஜித் மாபெரும் வீரன்! அனேக வரங்கள் பெற்றவன்! மகா மாயாவி!
லக்ஷ்மணருக்கும் இந்திரஜித்துக்கும் இடையில் கடும்போர் —
இவனை சுலபத்தில் ஜெயிக்க முடியாது போலிருக்கே!
நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்க வேண்டியதுதான் —
லக்ஷ்மணர் கட்டுண்டார் —
ஆ! இதென்ன மயக்கமாய் வருகிறதே!



லக்ஷ்மணர் போலவே வானர வீரர்கள் எல்லோரும் மூர்ச்சித்து விழ —
ஆ! ம்ம்ம்!
ராமர் மனம் வருந்தி... தியானித்தார் —
கருடா வா! உதவி புரிய வா!
கருடன் ராமரை வணங்கி —
உங்கள் ஆசியால் நாகாஸ்திரத்தின் சக்தியை முறியடிப்பேன்!
போர்க்களத்தின் மீதாகக் கருடன் பறக்க, நாக பாசங்கள் நொறுங்கிப்போயின. எல்லோரும் மூர்ச்சை தெளிந்து—
எங்கே இந்திரஜித்?
விட்டேனா பார்!
இந்திரஜித்துக்கு செய்தி எட்டியது —
மயக்கம் தெளிந்து விட்டார்களா? கேவலம் ஒரு பறவை காப்பாற்றி விட்டதா? ஹூம்!


மீண்டும் யுத்தம் புரிந்தான் இந்திரஜித் –
அண்ணா! என் கரங்களுக்கு வலிமை கொடு!
லக்ஷ்மணர் விட்ட பாணம் –
ஆ! என் கவசம் பிளந்தது! ஆச்சரியம்! என்னை வெல்லக் கூடியவனும் இருக்கிறானா?
ஒரு வேளை இவன்தான் என் எமனோ? பதினாலு வருஷங்களாக உறங்காதவனோ? உடனே தப்ப வேண்டும்!
மாயை புரிந்து ஆகாயத்தில் மறைந்தான் இந்திரஜித் –
ஹ ஹ ஹ ஹா!
எங்கே இந்திரஜித்? இதென்ன இடி முழக்கம்?
தலைநகர் திரும்பிய இந்திரஜித் பிரும்மாஸ்திரத்துக்குப் பூஜை செய்தான் –





ராவணனுடைய முதல்
மந்திரியை அழைத்து —
மகோதரா! நீ
மாயா வேஷம்
தாங்கி முன்னால்
போ! நான்
பின்னால்
வருகிறேன்!
மகோதரன் இந்திரனைப்
போல் உருவம் பெற்று வெள்ளை
யானை மீதேறி வர, லக்ஷ்மணர்—
இதென்ன?
இந்திரன்
ஐராவதம் ஏறி
வருகிறானே?
எதற்கு?
ஆ! இந்திரஜித்தின்
மாயா ஜாலங்களில்
ஒன்றுதான் இது!
ஏமாறக் கூடாது!
ஆனால் அந்தச் சில வினாடி
நேரத் தடுமாற்றம் இந்திரஜித்-
துக்குப் போதுமானதாக
இருந்தது —
பிரும்மாஸ்திரம்
பிரயோகம்
செய்கிறேன்.
மகோதரனுக்குப் பின் மறைந்திருந்து இந்திரஜித் எய்த
பிரும்மாஸ்திரம், லக்ஷ்மணரையும் வானரப் படைகளையும்
வீழ்த்தியது —
ஆ!
அண்ணா!
ஐயோ!


ஜாம்பவானின் யோசனை போல் அனுமார் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்தார் —
ஜெய் ஸ்ரீராம்!
மூலிகைகளின் காற்றுப்பட லக்ஷ்மணரும் வானர சேனையும் மூர்ச்சை தெளிந்தனர் —
இந்திரஜித்துக்கு செய்தி எட்டியது —
எல்லோரும் உயிருடன் எழுந்து விட்டார்கள்!
ஆ! எல்லாவற்றுக்கும் அந்தக் குரங்குதான் காரணம்... அவனுக்குப் பாடம் கற்பிப்பேன்!
ஒரு மாயா சீதையை சிருஷ்டித்தான் இந்திரஜித் —
ஹாஹ் ஹா ஹா! இவளைக் கொண்டு அனுமனை வெல்வேன்!


அனுமார் தவித்திருக்கையில் —
இவளுக்காகத்தானே இத்தனை பாடுபடுகிறாய்? இதோ பார்! ஒரே வீச்சு!
ஹா ஹா ஹா!
ஆ! ஐயோ! இனி நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்?
அனுமன் ராமரிடம் வந்து —
சீதா தேவியையும் காக்கத் தவறினேன்! எனக்குத் தண்டனை கொடுங்கள்!
இருவரின் துயரையும் தீர்த்தான் விபீஷணன் —
கவலை வேண்டாம். அது நிஜ சீதை அல்ல. இந்திரஜித்தின் மாயா ஜாலங்களில் ஒன்று இந்த நிகழ்ச்சி!
இலங்கையில் நிகும்பலை என்ற இடம் சென்றான் இந்திரஜித் —
அனுமனால் இனி தொல்லை இல்லை. இங்கு யாகம் செய்து ராமரை வெல்வதற்குப் பலம் பெறுவேன்!


யாகம் பற்றி உளவு அறிந்த வானர சேனை அங்கு சென்றது.
யாகத்தைக் கலை!
போர் போர்!
வெட்டு குத்து!
மேகநாதா! உன் யாகம் கலைந்தது, நியமம் குலைந்தது! ஹா ஹா ஹா!
என்ன அவமானம்!
யாகம் கலைந்தது பற்றி அறிந்த ராவணன் —
மேகநாதா! நானே யுத்த களம் செல்கிறேன்!
இந்திரஜித் தடுத்தான் —
தந்தையே வேண்டாம்! பழி வாங்கும் பொறுப்பு என்னுடையது!
இந்திரஜித்துக்கும் லக்ஷ்மணனுக்கும் இடையில் பெரும் யுத்தம்.
எப்பேர்ப்பட்ட வீரன்! இவனுடன் போர் புரிவதே பெருமை!


விபீஷணன் அறிவுரை-
லக்ஷ்மணா! சிவபெருமானிடம் பெற்ற தேரும் வில்லும் இந்திரஜித்தின் பலம். இரவில் அவனுக்கு மரணம் இல்லை!
லக்ஷ்மணர் இந்திரஜித்தின் தேரை இலக்கு வைத்து -
அழிந்தது தேர்!
இந்திரஜித் மாயையால் விண்ணில் மறைந்து யுத்தத்தைத் தொடர்ந்தான்.
ஹ ஹ ஹா!
இவன் வில் பயன்படாதவாறு முதலில் இவன் கரத்தைத் துண்டிப்பேன்!
வில்லும் தேரும் இழந்த இந்திரஜித்தைப் பிறைச் சந்திர வடிவம் கொண்ட அம்பினால் தாக்கினார் லக்ஷ்மணர்-
இது தர்ம யுத்தம் என்பது மெய்யானால் இந்த அம்பு மேகநாதனை வீழ்த்தட்டும்!
இந்திரஜித் தலை துண்டிக்கப்பட்டு விழுந்தான். அவனுக்கு வீர வணக்கம்-
அண்ணா! மாவீரன் மேகநாதன்!
தம்பி! உன் பதினாலு ஆண்டு கண்ணுறங்காத் தவம் பலித்தது.



வெற்றி கொள்


துணிவு கொண்டு முயற்சி செய்தால்
விதியை வெல்ல லாம் - திண்ணைத்
தூங்கி யாகிச் சோம்பி நின்றால்
என்ன செய்ய லாம்?
மதியுள் ளோர்கள் முயற்சி யாலே
விதியை வென்றுள் ளார் - காணும்
மனமுள் ளோர்கள் இன்றும் அதை
நேரில் காண லாம்!


கீழே கீழே பாய்வது தான்
நீரின் நிய தி - என்றும்
மேலே மேலே தாவு வதே
தீ யின் இயல்பு
கீழே பாயும் நீரோ இப்போ
மேலே தாவு து. எங்கும்
மேலே தாவும் ஜோதி தலை
கீழாய்த் தொங்கு து!

இயற்கை விதி இரும்பைக் கீழே
இழுப்பது தா னே? இப்போ
எங்கோ நிலவைக் கடந்தும் இரும்பு
ஏறிப் பாயு தே!
இப்ப டியே இயற்கை விதி
எண்ணில் லாத வை - நம்மோர்
இடை விடாத முயற்சி யினால்
மாறி யுள்ள தே!

முயற்சி யினால் விதியைக் கூட
வெற்றி கொள்ள லாம் - என
முச்சடக்கிப் படித்து விட்டுத்
தூங்கி வழிவ தா?
அயர்ச்சி யெல்லாம் தூக்கிச் சுருட்டி
எறிய வேண்டா மா? இன்றே
அனைத் துலகும் சிறக்கப் பணி -
புரிய வேண்டா மா?

- ரா. பொன்ராசன்.








எந்த மூக்கு எதற்கு?



விடை : 1 - 5, 4 - 3, 6 - 13, 8 - 9, 11 - 7, 12 - 16, 14 - 2, 15 - 10.

என்ன செய்கிறார்கள்? - போட்டி




இங்கே சிலர் செய்து கொண்டிருப்பது வழக்கமான காட்சி. உங்களுக்கு உதவ இவர்கள் செயலோடு தொடர்புடைய சில பொருள்கள் கீழே தரப்பட்டுள்ளன. உரியவர்களுக்குப் பக்கத்தில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை எழுதி, கூப்பனுடன், "ஆசிரியர், கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு.




என்ன செய்கிறார்கள்? - போட்டி

பெயர்..............................

வயது..............................

முகவரி..............................


....

....

பின்கோடு..............................



முடிவு தேதி : 15.7.92







ஜப்பானில் விக்னேஷ்...

சமீபத்தில் ஜப்பான் நாட்டில் புகோகா நகரில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிக்கு, இந்தியாவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட மதுரை விகாசா பள்ளி மாணவன் விக்னேஷ் ஜப்பான் சென்று சிறப்பாக பரதநாட்டியம் ஆடி ஜப்பான் மக்களின் பாராட்டு, வாழ்த்துகளைப் பெற்று வந்திருக்கிறான். விக்னேஷ் தனது இனிமையான ஜப்பான் அனுபவங்களை இங்கே கூறுகிறான்....

அடாது மழை பெய்தாலும்...!

கூல்கரல் புரோகிராமில் இந்தியாவிற்கு பத்து நிமிடம் என்று ஒதுக்கப்பட்டபோது அந்த பத்து நிமிடமும் என் பரத நாட்டிய நிகழ்ச்சிதான் நடந்தது. புகோகா நகரில் நடந்த நிகழ்ச்சியைக்காண ஏராளமான ஜப்பான் மக்கள் வந்திருந்தார்கள்.... நான் பரத நாட்டியம் ஆடத் தொடங்கிய அடுத்த நொடியே பெரும் மழை பிடித்துக் கொண்டது! மழையில் நனைந்து கொண்டே ஆடினேன். ஜப்பான் மக்கள் குடையைப் பிடித்துக் கொண்டு சின்னக் குழந்தை போல் கைதட்டி ஆரவாரம் செய்து என் நாட்டியத்தைப் பாராட்டியதை என்றுமே மறக்க முடியாது. ஜப்பான் மொழியில் பாராட்டு மடல்கள், பரிசுகள் தந்தார்கள். மீண்டும் ஜப்பான் வந்து மணிக்கணக்காக நாட்டியம் ஆட வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்கள்.

சோழி ஆட்டம்!


நாம் விளையாடும் சோழிகளை என்னுடன் எடுத்துச் சென்றிருந்தேன். அதை நான் தங்கியிருந்த ஜப்பான் நண்பர்கள் வீட்டில் காட்டினேன். அதிசியமாகப் பார்த்தார்கள். அதைக் கையில் வைத்துக் கொள்ளவே தெரியாமல் சோழிகளைக் கீழே போட்டார்கள். என்னிடம் சோழி விளையாட்டைக் கற்றுத்தரச் சொன்னார்கள். சிறிது நேரம் கற்றுத் தந்துவிட்டு இரவு நேரம் ஆகி விட்டதால் நான் தூங்கச் சென்று விட்டேன். காலையில் அந்தக் குடும்பத்தினர் இரவு முழுக்கத் தூங்காமல் சோழி ஆடிக் கொண்டிருந்ததை அறிந்து வியந்தேன். காலையில் அவர்களுடன் ஆடியபோது அவர்கள் என்னை ஜெயித்துக் காட்டினார்கள்! அவர்கள் எதிலும் முன்னேறிவிடும் ரகசியம் எனக்குத் தெரிந்தது. உங்களுக்கு இதன் மூலம் தெரிந்திருக்குமே!

அதிகாலையில் எழுந்திருக்கிறார்கள்!

ஜப்பான் மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள். சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள். ஒரு நாளில் இருபது மணிநேரமும் அயராத உழைப்புதான். நான்கு மணி நேரம் மட்டுமே தூங்குகிறார்கள். அம்மா, அப்பா, எழுப்பி விட வேண்டிய அவசியமே இல்லாமல் குழந்தைகளும், மாணவர்களும் அதிகாலையில் அவர்களாகவே எழுந்துவிடுகிறார்கள்.

பையனா! பெண்ணா?

ஜப்பான் தொலைக்காட்சிக்காக என்னைப் பேட்டி எடுத்த பெண்மணி மைக்கை மூடிக் கொண்டு 'நீ பையனா... பெண்ணா' என்று சந்தேகத்தோடு என்னைக் கேட்டதை நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது.





தன்னம்பிக்கை!

நான் தனியாக ஜப்பான் சென்றது மனத்தில் தன்னம்பிக்கையையும் துணிவையும் ஏற்படுத்தியது. பரதநாட்டியம் ஆடுவதற்கு நானே மேக்கப் போட்டுக் கொண்டதை பலர் வேடிக்கை பார்த்துப் பாராட்டினார்கள்.

பாராட்டினர்!

ஜப்பான் டீவியில் என் நாட்டியத்தை ஒளிபரப்பினார்கள். என் பேட்டியையும் காண்பித்தார்கள். ஜப்பான் பத்திரிகைகள் பல என் புகைப்படத்தை வெளியிட்டு வாழ்த்திப் பாராட்டியது.



★ "அன்னப் பறவை நீரிலிருந்து பாலைப் பிரித்தெடுப்பது போல், கடற் குதிரை, தன் நீண்ட வாயால் நீரை உறிஞ்சி அதில் உள்ள கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய உயிரினங்கள், செடிகள் ஆகிய வற்றை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதி நீரை வெளியே துப்பி விடும் சக்தி வாய்ந்தது."

- அ. முஸ்தபா, தக்கோலம்.

நேரில் குங்பூ!

'**நி**ஞ்ஜா கிராமம்' என்ற அழகான இடத்திற்குப் போய் மகிழ்ந்தேன். அங்கே குங்பூ சண்டை எல்லாம் கற்றுக் கொடுக் கறாங்க. பார்க்க திரில்லிங்கா இருந்தது. இந்தியாவிலே சினிமாவில் பார்த்த குங்பூ சண்டையை நேரிலே பார்த்து பிரமித்துப் போனேன். குழந்தைகள் சிறுவர்கள் விளை யாடவும் தனி இடங்கள் இருந்தன.

அலறி விட்டான்!

மரத்திலே ஒரு ஆள் இரத்தம் சொட்டச் சொட்டத் தொங்கியதைப் பார்த்து, பயத்தில் பெரிதாக அலறிவிட் டேன். பிறகுதான் அது பொம்மை என் பதும் வேடிக்கைக்காக அப்படிச் செய்திருக் கிறார்கள் என்பதும் தெரிந்தது. பயந்து கத்தியதை நினைத்து வெட்கப்பட்டேன்.

என் பெயர்தான் நாய்க்கும்!

நான் தங்கியிருந்த வீட்டின் ஜப்பான் நண்பர்கள் என்னை 'விக்கி' என்று அழைத் தார்கள். சில சமயம் அவர்கள் என்னைக் கூப்பிட்ட போது அவர்கள் வீட்டு முரட்டு நாய் என்னையும் முந்திக் கொண்டு ஓடி வந்து பிரம்மாண்டமாக நிற்கும். அந்த நாய் பெயரும் 'விக்கி'தான் என்று தெரிந் ததும் சிரித்தேன்.

அசத்தைய ஊறுபத்தி!

புத்தர் கோவிலில் ஊதுபத்தி ஏற்றி வைத்திருந்தார்கள். அது எரிந்து முடிந்ததும் சாம்பல் கீழே இங்கு விழுவது போல் விழாமல் புத்தர் சிலை போல் சாம்பல் நிற் பதை பார்த்து வியந்தேன். அதற்கு ஏற்றபடி விஷேசமாகத் தயாரித்து இருக்கிறார்கள்.

வருடம் முழுக்க பட்டாஸ்!

ஜப்பானில் பெரிய பெரிய பட்டாஸ் கடைகள் நிரந்தரமாக இருக்கின்றன. வித விதமான பட்டாஸ்களை வாங்கி வெடிச்க சந்தோஷப்பட்டேன். இந்தியாவிலே தீபா வளி சமயத்திலே மட்டும்தானே பட்டாஸ் கிடைக்குது. அங்க வருஷம் முழுவதும் கிடைக்கறதைப் பார்த்ததும் இதுக்காகவே ஜப்பான்லேயே இருந்திடலாமான்னு கூட நினைச்சேன்.

ஜப்பான் கற்றேன்!

ஜப்பான் சொற்கள் சிலவற்றைக் கற்றுக் கொண்டேன். அவர்கள் என்னிடம் தமிழ்ச் சொற்கள் பலவற்றைக் கற்றுக் கொண்டார்கள்.

மறக்க முடியாத நாடு!

ஜப்பானில் பல இடங்களை நான் நடந்தே சுற்றிப் பார்த்தேன். அறிமுகம் இல் லாத பலரும் என்னிடம் பாசத்துடன் பேசி விட்டுச் சென்றார்கள். அழகான சுறுசுறுப் பான விஞ்ஞான முன்னேற்றத்தை கண் எதிரே அங்கே கண்டு மலைத்தேன். ஜப் பான் பயணம் என்னால் மறக்கமுடியாது.

பூச்சி கடற்கரை!

ஜப்பான் கடற்கரை மட்டும் எனக்குப் பிடிக்கலை. காரணம் பீச் தண்ணீயிலே பெரிய பூச்சிகள் வருது.... அறுவறுப்பா இருந்ததாலே ஒதுங்கிட்டேன்.

பேட்டி, படங்கள் :
விஜயா கண்ணன்



நூறு ரூபாய் இரகசியம்!

முன்கதை :

உருவம் குள்ளம் என்றாலும், தன்னம்பிக்கையும் கலங்காத உள்ளமும் கொண்ட சிறுவன் பரதன்., புது மாணவனாக அந்தப் பள்ளிக்கு வருகிறான். தனது உன்னதமான பண்புகளால், தன்னைச் சீண்டி கேலி செய்ய முயலும் நாகன் என்ற நாகேந்திரனை மட்டம் தட்டுகிறான்; ஆசிரியரின் அன்பைப் பெறுகிறான்; ஞானசம்பந்தம் என்ற நல்ல நண்பனின் நட்பைப் பெறுகிறான்; ஹீரோ ஆகிறான்!

இதைத் தாங்காத பணக்காரன் நாகன், பரதனை மட்டம் தட்ட விழைகிறான். பள்ளி மைதானத்தில் பரதனும் ஞானசம்பந்தனும் இருக்கும் போது, தனது நண்பன் முரடன் அந்தோணிசாமியை ஏவி விடுகிறான். பரதனை வேண்டுமென்றே வம்புக்கு இழுத்து, அவனைத் தாக்க வருகிறான் அந்தோணிசாமி.

என்ன ஆகுமோ, பரதன் என்ன செய்யப் போகிறானோ என்று எல்லோரும் ஒன்றும் செய்யத் தோன்றாது பார்க்கிறார்கள். மேலே படியுங்கள் –

2. தும்பிக்கை

அந்தோணி சாமி, தன்னை நோக்கி வேகமாக வருவதைப் பரதன் பார்த்தான். அந்தோணிக்குப் பின்னே சிறிது தூரத்தில் ஏதோ ஒரு வேடிக்கையை ரசிக்கும் முகபாவத்துடன் நாகேந்திரன் நிற்பதையும் பார்த்தான்.

''இந்த அந்தோணி வெறும் பொம்மை. இவனை முடுக்கி விட்டிருப்பவன் நாகன். அதனால் பயந்து ஓடுவதோ, சண்டை வேண்டாம் என்று சமாதானம் பேசுவதோ கூடாது. அந்தோணியின் முகத்தில் அசடு வழியும் படி செய்தால் நாகன் முகத்தில் அசடு அருவி கொட்டும்! ஆம்! அப்படித்தான் செய்ய வேண்டும்.''

குட்டி பீமனைத் தாக்க, குள்ளக் கத்திரிக்காய் போன்ற பரதன் முடிவு செய்தான் என்பது உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா? உங்களைப் போலவே அந்தப் பீமன் அந்தோணியும் வியப்படைந்தான்! நாகனும் வியப்படைந்தான்!

பரதன் யோசித்து முடிக்க பத்து விநாடி போதுமானதாக இருந்தது. பதினோராம் நொடி, பரதன் திரும்பி ஓடினான். சுமார் முப்பது மீட்டர் தூரம் ஓடினான். ஓடியவன் சட்டென்று நின்று அந்தோணியைப் பார்க்கும் வண்ணம் திரும்பி நின்றான்.

பரதன் ஓடியதைப் பார்த்து, அதுவே தனக்கு ஒரு வெற்றி என்று மகிழ்ந்த அந்தோணி, அவன் திடீரென்று நின்று, தன் பக்கம் திரும்பியதும், திகைத்தான். 'பயந்து ஓடுகிற

டாக்டர். பூவண்ணன்



வன் அப்படியே ஓடிப் போகாமல் ஏன் என்னை எதிர்கொள்வது போல் திரும்புகிறான்?' அந்தோணி யோசித்து முடிப்பதற்குள், பரதன் அவனை நோக்கி ஓடி வரத் தொடங்கினான். அதைக் கண்ட போதுதான் அந்தோணி ஆச்சர்யம் அடைந்தான். நாகனும் அதே நிலை பெற்றான்.

முப்பது மீட்டர் தூரத்திலிருந்து பரதன் ஓடி வருவதைக் கண்ட அந்தோணிக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றியது. குள்ளனும் நெட்டையனும் சண்டை போடும் சிரிப்புப் படம் ஒன்றை அவன் பார்த்திருந்தான். அதில் குள்ளன் தன்னைத் தாக்க வரும் நெட்டையனின் இரு கால்களுக்கு இடையே நுழைந்து, நுழைந்து ஓடி விடுவான். நெட்டையனுக்குக் கோபம் வரும். படம் பார்ப்பவர்க்குச் சிரிப்பு வரும்.

பரதன் அப்படிச் செய்வானோ?

அந்தோணி தன் கால்களைப் பார்த்தான். அவை போதுமான இடைவெளி விட்டு அகன்று இருப்பதை உணர்ந்தான். அக்கம் பக்கத்தில் பார்வையைச் செலுத்தினான். விளையாட்டு மைதானத்தில் இருந்த மாணவர்கள் தன்னையும் பரதனையும் கவனிப்பதைக் கண்டான். 'ஓ, இந்தக் குள்ளன் நம் கால்களிடையே நுழைந்து ஓடினால் சுற்றிலும் நிற்கும் மாணவர்கள் சிரிப்பார்கள்! கைகொட்டிச் சிரிப்பார்கள்! அதற்கு இடம்கொடுக்கக் கூடாது.'

அந்தோணி சட்டென்று இரு கால்களையும் ஒன்றை ஒன்று தொடும்படி இணைத்துக் கொண்டான். தன் அருகே பரதன் வந்தால், ஒரு குட்டி நாயைத் தூக்குவது போலத் தூக்கி வீசியெறிய வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். அதற்கேற்ப, கொஞ்சம் குனிந்து, கால்களை உட்கார முயலும் நிலையில் வைத்துக் கைகளை முன்னே நீட்டிக் காத்திருந்தான். திண்ணைப் பள்ளிக்கூடத்தில், 'நாற்காலி போடு' என்று ஆசிரியர் தண்டனை கொடுத்தால், மாணவன் நாற்காலி போல கொஞ்சம் உடலைக் குறுக்கி, கால் முட்டியை முன்னுக்குத் தள்ளி பாதி உட்கார்ந்த நிலையில் நிற்பானே, அந்த நிலையில் நின்றிருந்தான் அந்தோணி.


பரதன் ஓடி வந்தான். முதலில் 'ஸ்லோமோஷன்' காட்சி போல ஓடி வந்த பரதன், கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகரித்து, 'ஹை ஜம்ப்' தாண்ட ஓடி வருபவனைப் போல ஓடி வந்தான். அந்தோணியை நெருங்கியதும், அதே 'ஹை ஜம்ப்' வீரனைப் போலக் கால்களை நிலத்தில் ஊன்றி எம்பினான். பரதனின் உருவம் ஒரு பந்து போல மேலெழும்ப, முன்னே துருத்தி வளைந்து நின்ற அந்தோணியின் முழங்காலில் அவன் தன் ஒரு காலை ஊன்றி, இன்னும் மேலெழும்பி மறு காலை அவன் தோளில் ஊன்றிக் கொண்டான். மறு விநாடி பரதன் அவன் தோளில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய இரு கால்களும், அந்தோணியின் முதுகில் தொங்கின.

பரதன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஓர் உடற்பயிற்சி ஆசிரியர் இருந்தார். பெயர், வெள்ளியங்கிரி. அவர்தான் பரதனுக்கு வழிகாட்டும் குரு; துணை நிற்கும் தோழன்; அன்பு

* "நாம் கோழிப் பந்தயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், நெருப்புக் கோழிப் பந்தயம் என்று ஒன்று இருக்கிறது.

ரேக்ளா போன்ற சிறு வண்டியில் நெருப்புக் கோழியைப் பூட்டி விரட்டுவார்கள். இந்தப் பந்தயங்கள் தென் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் இன்றும் நடைபெறுகின்றன."

— அ. முஸ்தபா, தக்கோலம்.



நெருப்புக் கோழிப் பந்தயம்!

காட்டும் அன்னை. வெள்ளியங்கிரி தான், ''பரதா, உருவத்தைக் கண்டு கலங்காதே. உள்ளந்தான் முக்கியம். உள்ளத்தை உயரமாக்கு. உள்ளத்தை வலிமையாக்கு. உள்ளத்தைக் கூர்மை யாக்கு. எந்தச் சூழ்நிலையிலும் பயப் படாதே! எதையும் வெல்வோம் என்று நம்பு! யானைக்குத் தும்பிக்கை போல மனிதனுக்கு நம்பிக்கை வலிமை தரும்! அச்சம் தவிர்! ஆண்மை தவறேல்'' என்று அவர் கூறியிருந்தார். ஒரு முறையா? பத்து முறையா? நூறு முறையா? இல்லை! இல்லை!

லட்சார்ச்சனை என்று சொல்லும் அளவு இந்த 'நம்பிக்கையே தும் பிக்கை' மந்திரத்தை ஒரு நாளைக்குப் பலமுறை ஒரு வேளைக்குப் பலமுறை கூறியிருக்கிறார்.

அது மட்டுமா?

குள்ளமான உருவத்துக்கு எந்தெந்த வகையில் ஆபத்து வரலாம் என்று யோசித்து, அந்தந்த ஆபத்துக்களை வெற்றிகொள்ளும் வழிகளைக் கற்றுத் தந்துள்ளார். அவற்றுள் ஒன்று, ஓடு வது! சராசரி மனிதன் ஓடும் வேகம் பரதனின் ஓட்டத்துக்கு உண்டு. அந்த அளவு பயிற்சி கொடுத்திருந்தார், வெள்ளியங்கிரி.

அந்த ஓட்டத்தைத்தான் இப்போது பயன்படுத்தி, பரதன் ஓடி வந்தான்.

ஒரு பள்ளம், சேறு நிறைந்த இடம், அகலமான சாக்கடை வழியில் குறுக்



* ''விகோ மெட்டி'' என்ற மாணவன், பொழுதுபோகாத தால் நூலகம் சென்றான். ரொம்பப் பழைய புத்தகம் ஒன்றை எடுத்தான். அது ''ஹீரோ'' என்ற தத்துவ ஞானி எழுதிய நூல். மேலே படிந்திருந்த தூசியைத் தட்டி விட்டுப் புத்தகத்தைப் பிரித்தான். கீழே பழுப்பு நிறத்தில் ஒரு கடிதம் விழுந்தது. அதை எடுத்துப் படித்தான். ஓர் உயில் அது. அந்தப் புத்தகத்தை எழுதிய ''ஹீரோ'' தம் சொத்தான 50,000 பவுனை அப் புத்த கத்தை யார் முதலில் பிரித்துப் படிக்கிறார்களோ, அவர்களுக்கே தர வேண்டும் என்று எழுதி வைத்திருந்தார்! புத்தகப் பிரதி அந்த நூலகத்துக்கு வந்து 170 ஆண்டுகள் ஆகியும் எவரும் அதைத் தொடவே இல்லை. ''விகோ மெட்டி என்ற அந்தச் சிறுவனுக்குத்தான் அடித்தது அந்த அதிர்ஷ்டம்.''

- அ. முஸ்தபா, தக்கோலம்.



கிட்டால் அதைத் தாண்டுவதற்காக வெள்ளியங்கிரி நீளத்தாண்டல் - உயரத் தாண்டல் பயிற்சி கொடுத்திருந்தார். அதைப் பயன்படுத்தித்தான் அவன் அந்தோணியின் முழங்காலை மிதித்து, தோளில் குதித்து தன் கால்களை அவன் கழுத்தைச் சுற்றிய மாலையாக்கியிருந்தான்.

இவ்வளவும் சில நொடிகளில் நடந்து விட்டன. அந்தோணிசாமி திகைத்துப் போனான்.

'இவன் திகைப்பிலிருந்து விடுபடுவதற்குள் ஏதாவது செய்ய வேண்டும்' என்று நினைத்த பரதனின் செவியில் குருநாதர் வெள்ளியங்கிரியின் உபதேசம் ஒலித்தது.

''உன் உருவம் சிறியது. அதனால் நீ பயன்படுத்த விரும்பும் ஒரே உறுப்பில், உன் உடல்பலம் முழுதும் வரவழைப்பது போல் ஒரு முயற்சியுடன் செயல்படு. கையால் தாக்குகிறாயா? இரண்டு காலின் பலம், இரண்டு முழங்கையின் பலம், இரண்டு கைகளின் பலம் - எல்லாம் திரண்டு உன் ஒரு கையில் இருப்பதாக உணர்ந்து, அந்த வேகத்தில் பயன்படுத்து. குத்தினால் குத்தும் இடம் இந்த உணர்ச்சிமயமான குத்தில் உடைந்து பொடியாகிப் போகும்.''

பரதன் இப்போது கால் தொடைகளைப் பயன்படுத்த விரும்பினான். ''தலையின் பலம், தோளின் பலம், கையின் பலம், காலின் பலம் எல்லாம் தொடைகளில் குடியேறி விட்டது! என் தொடைகள் இரும்புத் தொடைகள்! எஃகுத் தொடைகள்! இதோ அவற்றை இறுக்குகிறேன்.''

அந்தோணியின் தோளில் உட்கார்ந்து கழுத்தின் இருபுறமும் கால்களைத் தொங்க விட்டிருந்த பரதன், அந்தத் தொடைகளை இறுக்கினான்.

தொடைகள் அந்தோணியின் கழுத்தை இறுக்கின.


''ஐயோ... ஐயையோ... விடு.. என்னை விட்டுடு... ப்..ளீ...ஸ்''

உயிர் போவதைப் போன்ற ஒரு துன்பத்தைப் பொறுக்க முடியாமல் கதறிய அந்தோணியின் அலறல் பள்ளிக் கட்டிடங்களில் மோதி எதிரொலித்தது.

பரதன் சட்டென்று தொடைகளை அகற்றினான். கைகளை அந்தோணியின் தலையில் ஊன்றி எம்பினான். மறு நொடி, அந்தோணியின் இரு தோளிலும் இரு கால்களைப் பதித்து நின்றான். அதற்கடுத்த நொடி அங்கிருந்து ஒரு பந்து போலத் துள்ளித் தரையில் குதித்து, நிலைதடுமாறாமல் நின்றான்.

மைதானத்திலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்த மாணவர்கள், ஏதோ ஒலிம்பிக் பந்தயத்தில் ஜிம்னாஸ்டிக் பார்த்த உணர்வோடு பிரமித்து நின்றார்கள்.

அந்தோணி சாமி, தன் இரு கைகளாலும் கழுத்தை நீவி விட்டபடி, இன்னும் கழுத்தின் வலி முகத்தில் தெரிய, பரதனை வியப்போடு, அதிக வியப் போடு, இமலாய வியப்போடு பார்த் தான்.



"உனக்கு தாதாஜீ, நேதாஜீ, காந்திஜீ, இவர்களையெல்லாம் தெரியுமா?"
"எனக்குத் தெரிந்ததெல்லாம் எல். கே. ஜீ. யு. கே. ஜீ.-தான்.
- இர. ரங்கராஜன்

''அந்தோணி, என்னை என்னமோ செய்யப் போவதாகச் சொன்னாயே, செய்கிறாயா?''

பரதன் கேட்டதும், அந்தோணி சடக்கென்று திரும்பி ஓடினான்; வேகமாக ஓடினான். அப்போதும் அவன் கைகள் கழுத்தை நீவியபடியே இருந்தன.

மாணவர்கள் அந்தக் காட்சியை ரசித்துச் சிரித்தனர்.

ஞானசம்பந்தம், பரதன் அருகே வந்தான்.

''சபாஷ் பரதா! கோலியத்தை டேவிட் வென்றான் என்று முன்பு படித்தேன். இன்று பார்த்தேன்'' என்று பாராட்டினான் ஞானசம்பந்தம்.

சுற்றிலும் நின்ற மற்ற மாணவர்களும் ஓடி வந்து பரதனைப் பாராட்டினர்.

நாகன் மட்டும் திறந்த வாய் மூடாமல் ஆச்சர்யத்தில் மூழ்கிச் சிலையாக நின்றான்.

மறுநாளே பரதனின் வீரச் செயல் பள்ளி முழுதும் பரவியது.

ஆசிரியர் குப்புசாமி நடந்ததை அறிந்து, பரதனை அழைத்துப் பாராட்டினார். 'பாதகம் செய்பவரைக் கண்டால், நாம் பயங்கொள்ளலாகாது பாப்பா' என்னும் பாரதி பாட்டுக்கு நீயே எடுத்துக்காட்டு. உன் துணிவு வளரட்டும்! அறிவின் துணையும் இருக்கட்டும்' என்று கூறினார்.

பரதனுக்குக் கிடைத்த பாராட்டைக் கண்டு கோபம் அடைந்தவன், கொதித்தவன் நாகேந்திரன். ''பொறு குள்ளா, பொறு! உன் துணிவைத் தூள் தூளாக்குகிறேன்'' என்று கறுவிக் கொண்டான்.

இப்போது பரதன் எல்லார்க்கும் நண்பன். ஞானசம்பந்தத்துக்கோ, நெருங்கிய நண்பன்; ஆருயிர் நண்பன்.

இருவரும் பள்ளிக்குள் ஒன்றாக இருப்பார்கள். ஒன்றாக உலாவுவார்கள். ஒன்றாக விளையாடுவார்கள். ஆனால், சாப்பிடும் போது மட்டும் ஒன்றாக இருக்க மாட்டார்கள்.

பரதன் தடாகம் சாலையிலிருந்து வருபவன். அதனால் மதிய உணவை ஒரு அலுமினிய தூக்கில் கொண்டு வருவான். ஞானசம்பந்தத்தின் வீடு பள்ளிக்கூடத்திற்கு வெகு அருகில். எஸ். ஆர். பி. நகரில் இருந்தது. அதனால் மதிய இடைவேளையில் சைக்களில் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு வருவான்.

ஒரு நாள் காலை.

பள்ளி மணி அடிப்பதற்கு இருபது நிமிடம் இருந்தது.


ஞானசம்பந்தம் வகுப்புக்குள் நுழைந்தான். டெஸ்கில் பையை வைத்து விட்டுக் கையை எடுத்த போது, ஒரு தூக்கு கையோடு உருண்டு கீழே விழ இருந்தது. அதை விழாமல் மறு கையால் பிடித்தான்.

அந்தத் தூக்கு பரதனுடையது.

அதன் மூடி பாதி திறந்த நிலையில் இருந்தது. சரியாக மூடுவதற்காக, அந்த மூடியைத் திறந்த ஞானசம்பந்தம் 'ஆ...' என்று அலறினான்.

அன்று பகல் மணியடித்ததும், மாணவர்கள் உணவுக்காகக் கலைந்து சென்றார்கள். ஞானசம்பந்தம் வீட்டுக்குப் போய் விட்டான். பரதன் தன் அலுமினிய தூக்குடன் விளையாட்டு மைதானத்துக்குச் சென்றான். யாருமில்லாத ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். தனது தூக்கின் மூடியைத் திறந்து உள்ளே பார்த்தான். உடனே, 'ஆ...' என்று அலறி விட்டான்!

(வளரும்)





★ அமெரிக்காவில் கலிபோர்னியாவில் 'அம்சைட்' என்னுமிடத்தில், பேசும் அதிசயக் கொரில்லா குரங்கு உள்ளது. இதன் பெயர் கோக்கோ. ஊமையர்களும் காதுகேளாதோரும் ப ய ன் ப டு த் து ம் அமெரிக்க சைகை மொழியை இக்குரங்கிற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். 1600 சொற்களைக் கற்றுக் கொண்டு விட்ட கோக்கோ சைகை மொழி தெரிந்த ஆட்களுடன் பேசுகிறது!

- ஜி. இந்திரா, திருச்சி.



★ அமெரிக்காவில் உள்ள நவீன பால் பண்ணைகளில் உள்ள பசுக்களுக்கு, ஷவர் பாத் மூலம் இளவெந்நீரால் குளிப்பாட்டப் படுகிறது. அவை எப்போதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறைகளில் வைக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து இயந்திரங்கள் மூலம் பால் கறக்கப்படுகிறது. ஒரு மணி நேரத்தில் எண்பது பசுக்களிடமிருந்து பால் கறக்கப்படுகிறது. அங்கு வைக்கப்பட்டிருக்கும் கம்ப்யூட்டர் சாதனம் ஒவ்வொரு பசுவிற்கும் எவ்வப்போது ஆகாரம் தேவை, ஓய்வு தேவை போன்றவற்றைக் கணித்துக் கூறுகிறது!

- ந. நவமணி, நல்லாலம்.



★ சமீபத்தில் ஒருநாள் எங்கள் வகுப்பறையில் கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். அப்போது இரண்டு நாய்க் குட்டிகள் வகுப்பறைக்குள் நுழைந்து விட்டன. மாணவர்களிடையே சலசலப்பு உண்டானது. உடனே ஆசிரியர், ''நோ நாய்ஸ் ப்ளீஸ்...!'' என்றார். ஆசிரியரின் சிலேடையைக் கேட்டு வகுப்பே கொல்லென்று சிரித்து விட்டது!

- மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.



ஓட்டலில் சாப்பிட ரேஷன் கார்டு!

★ வடகொரியா நாட்டில் உள்ள சிற்றுண்டி சாலைகளில், அந் நாட்டு மக்கள் சாப்பிடப் போனாலும் அவர்கள் தங்களின் ரேஷன் கார்டுகளை ஹோட்டல் நிர்வாகி களிடம் காண்பிக்க வேண்டும். அதில் குறிப் பிட்டுள்ள அளவுப்படிதான் அவர்களுக்கு சிற்றுண்டி அளிப்பார்கள்!

- என். ஆர். சுப்ரமணியன், திருச்சி.



கருப்பு மலர் தெரியுமா?

★ 'கருப்பர்களின் தலைவர்', 'கருப்புச் சூரியன்', 'ஆப்பிரிக்காவின் காந்தி', 'சிறைப் பறவை' கருப்பு மலர் என்று அழைக்கப்படுபவர் யார் தெரியுமா? - நெல்சன் மண்டேலா!

- டி. ரவி, பரசலூர்.



கால அட்டவணை

★ இரயிலில் பயணம் செய்ய வேண்டு மானால் இரயில்வே கால அட்டவணை யைப் பார்த்து நேரத்தை அறிந்து பயணம் செய்கிறோம். இந்த இரயில்வே கால அட்டவணையைக் கண்டுபிடித்து வெளி யிட்டவர் ஜார்ஜ் பிரட்ஷா என்ற ஆங்கி லேயர்.


- கோட்டை. அப்துல்சலாம், ஆயப்பாடி.



ஓநாய் வளர்த்த குழந்தைகள்!

★ "கலாச்சாரப் பெருமைமிக்க ரோம் நகரத்தை நிக்கோலஸ், ரோமுலெஸ் என்ற இருவர்தான் உருவாக்கினார்கள். அந்த இருவரும் அரச குடும்பத்துக்கு ஆகாத வர்கள் என்று குழந்தைகளாக இருக்கும் போது காட்டில் வீசியெறியப்பட்டவர்கள். அந்த இரு பச்சிளங் குழந்தைகள் மேல் இரக்கப்பட்ட ஓர் ஓநாய், அந்தக் குழந்தை களுக்குப் பாலூட்டி வளர்த்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அதன் நினைவுச் சின்னமாக இன்றும் ரோம் நகரத்தில் ஓநாய் மடியில் குழந்தைகள் பால் குடிப்பதைப் போன்ற அற்புதச் சிலையை வைத்திருக்கிறார்கள்.

- அ. முஸ்தபா, தக்கோலம்.



தங்க விலங்கு

★ கி. பி. 272ல் ரோமானியர்களுக்கும் பல்மைரா நாட்டு அரசி செப்டீமியா

ஜனோபியாவுக்கும் கடுமையான போர் மூண்டது. அதில் பல்மெரா நாட்டு அரசி தோல்வியடைந்தார்.

பல்மெரா அரசியைக் கைது செய்து தலைநகரான ரோமுக்கு அழைத்துச் சென்றனர். எப்படித் தெரியுமா? இரும்புச் சங்கிலியால் விலங்கிடாமல் அரச மரியாதையோடு தங்கத்தால் விலங்கு செய்து கைகளில் பூட்டி அழைத்துச் சென்றனர்!

- நல்லாலம், சிவா.



இரு கை இரு மொழி

★ பெரும்பாலோர் வலது கையில் எழுதுவார்கள். இடது கையில் எழுதுபவரும் உண்டு. ஏக காலத்தில் இரு கைகளாலும் வெவ்வேறு மொழிகளில் எழுத முடியுமா?

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் கார்பீல்ட் ஒரு கையினால் கிரேக்க மொழியிலும், மற்றொரு கையினால் லத்தீன் மொழியிலும் ஏக காலத்தில் எழுதக் கூடியவராக இருந்தார்!

- சிவா, நல்லாலம்.



டிக்பாய் தெரியுமா?

★ அசாம் மாநிலத்தில் ஏற்படுத்தப் பட்ட முதல் எண்ணெய்க் கிணறு 'டிக்பாய்' என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், அதற்கு அப் பெயர் எப்படி வந்தது தெரியுமா?

இந்த எண்ணைக் கிணறு ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் அசாமில் தோண்டப்பட்டது.

இன்று உள்ளது போல அந்தக் காலத்தில் நவீன கருவிகள் கிடையாது. உடல் வலிமையுள்ள சிறுவர்களும், இளைஞர்களும் நூற்றுக்கணக்கில் வேலைக்கு அமர்த்தப்பட்டு, மண்வெட்டி, கடப்பாரை போன்ற சாதாரணக் கருவிகளை வைத்துக் கொண்டே எண்ணெய்க் கிணறைத் தோண்டச் செய்தார்கள்.

இளைஞர்களும், சிறுவர்களும் தோண்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது பொறுப்பு அதிகாரிகளான ஆங்கிலேயர்கள் அவர்களை உற்சாகமூட்டும் வகையில் ''பையன்களே தோண்டுங்கள்.... பையன்களே தோண்டுங்கள்'' (Dig Boy... Dig Boy) என்று ஊக்கக் குரல் கொடுத்தார்கள்.

இவ்வாறு வாய்மொழியாக இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் கொடுத்த ஊக்கமும் முதல் எண்ணெய்க் கிணறு தோண்டப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக இருந்ததால் ''தோண்டுங்கள் பையன்களே'' (Dig Boy) என்ற சொல்லையே அக் கிணற்றின் பெயராக்கி விட்டார்கள்!

- நா. ஷேக் உசேன், செஞ்சி.



சொன்னால் விஷத்தையும் குடிப்பார்!

★ ''விஷக் கோப்பையைக் கொடுத்து, 'குடி.' என்று நான் சொன்னால் உடனே தயங்காது குடிப்பவர் ஒருவர் உண்டு'' என்று காந்திஜியால் பெருமையோடு குறிப்பிடப்பட்டவர் யார் தெரியுமா? சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதி அமரர் டாக்டர் பாபு ராஜேந்திர பிரசாத் தான்!

- நா. ராஜேஷ், ஈரோடு.



***புன்னகைப் பூக்கள்* – கோ. ஜெயச்சந்திரன் – பக். 64 – ரூ. 7.50 – சாயி பவானி பதிப்பகம், மனை எண் 39, கதவு எண் 29, கமலா தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை – 600 044.**

குழந்தைகளுக்காகப் பாடல்கள் எழுதுவோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் காலம் இது. ஆனாலும் கூட பெரும்பாலோரது பாடல்கள் அச்சில் உறங்கி மறைந்து விடுகின்றன. காரணம் அவைகளில் குழந்தைகளைக் கவரும் சந்தமோ, கற்பனை வளமோ இருப்பதில்லை. இந்தக் குறையை நீக்கி எழுதி வரும் விரல் விட்டு எண்ணிக்கூடிய கவிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர் கவிஞர் கோ. ஜெயச்சந்திரன். கரும்பைப் பாடுகிறார் கேளுங்கள் :

தழைத்தே வளரும் கரும்பு
- பிழிந்தால்
சக்கை யாகும் கரும்பு!
தோகை யுள்ள கரும்பு - அடர்ந்த
தோட்டம் வளரும் கரும்பு - பக். 14

குழந்தைகள் கற்க வேண்டியவை குறித்த பாடலில் :

தினந்தினம் குளிக்கத் தவறாதே!
திருடிப் பொருளைக் கவராதே!
கனவிலும் பகைவனை
வெறுக்காதே!
கண்ட இடத்தில் கிறுக்காதே! - பக் 31

இவை தவிர இந்தத் தொகுப்பில் குழந்தைகளுக்குப் பிடித்தமான பொருள்களில் பல பாடல்கள் இருக்கின்றன. பொருத்தமான படங்களும் இருந்திருந்தால் தேனில் தோய்த்த பலாச்சுளைதான். அருமையான தொகுப்பு.

***மாதர் குல திலகங்கள்* – சாந்தாமூர்த்தி பக். 216 – ரூ 24/- வானதி பதிப்பகம் – தீனதயாளு தெரு, சென்னை – 600 017**

இராமயணப் பெண்களான அகலிகை, அனுசூயா, சபரி, ஸ்வயம்பிரபா, தாரை, மண்டோதரி, திரிஜடை, ஸரமை, கௌசல்யை, சுமித்ரை, கைகேயி, சீதை, மகாபாரதப் பெண்களான காந்தாரி, குந்தி, திரௌபதி, புராணப் பெண்களான லோபமுத்திரை, ஜரத்காரு, பதிவிரதை, சுகன்யா, சருந்தலை, சாவித்திரி, தமயந்தி ஆகிய இரு பத்திரண்டு பெண் குலத் திலகங்களை குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் வினுவின் ஓவியங்களோடு அறிமுகம் செய்து வைக்கிறார் ஆசிரியை. பாராட்டத்தக்க முயற்சி. நல்ல தயாரிப்பு.


***அறிவியல் சாதனையாளர்கள்* – கே. என். ராமச்சந்திரன் – பக். 196, ரூ. 20/- வானதி பதிப்பகம், தீனதயாளன் தெரு, தி. நகர், சென்னை – 600 017**


தமிழ்நாட்டில் அறிவியல் இலக்கியங்களை வளர்த்த பெருமைக்குரிய படைப்பாளர்களில் ஆசிரியர் கே. என். ராமச்சந்திரன் அவர்கள் பெரும்பங்கு வகிப்பவர். இந்த நூலில் ஆசிரியர், அறிவியல் சாதனையாளர்கள் 35 பேர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். தமிழில் அதிகம் அறிமுகமாகாத சலீம் அலியும் இதில் இடம் பெற்றுள்ளார். நல்ல பயனுள்ள தொகுப்பு நூல்.

***சுதந்திரம் எங்களது பிறப்புரிமை* – அ. குணசேகரன் – பக். 88 – விலை ரூ 11/- அமிர்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளைத் தெரு, வ. உ. சி. நகர், வேலூர் – 632 001.**


சிறுவர்கள் அதிகம் அறிந்திராத வேலூர் புரட்சி, ஜாலியன்வாலாபாக் படுகொலை, பகத்சிங்கின் வீர எழுச்சி, பஞ்சாப் படுகொலைக்குக் காரணமான வெள்ளை அதிகாரிகளைப் பழிக்குப் பழி வாங்கி தூக்குக் கயிறில் உயிர்நீத்த உத்தம் சிங், நீலகண்ட பிரும்மச்சாரி, வாஞ்சி நாதன் போன்ற புரட்சித் தியாகிகள் பலரை இந்த நூல் அழகாகக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துகிறது. நல்ல உயர்ந்த இலட்சியம் கொண்ட முயற்சி பாராட்டத் தக்கது.

இப் பகுதியில் அறிவியல் பொது நூல்களும், குழந்தைகளுக்கான நூல்களும் மட்டுமே இடம்பெறும். கட்டணம் கிடையாது. இரண்டு பிரதிகளை ஆசிரியர். கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 32 என்ற முகவரிக்கு அனுப்பவும். இதிலுள்ள புத்தகங்களை வாங்க விரும்புவோர், நேராக பதிப்பாளர்களுக்கே எழுதலாம். முழு முகவரி தரப்பட்டுள்ளது.


அமைப்பு : ரே
கதை: எஸ்.ரவி,
சித்திரம்: ரஜினி.
தாகத்தால் தவித்த நரி ஒன்று நதிக்குச் சென்றது-
அப்போது- அங்கே புலி நிற்பதைக் கண்டது-
அருகில் சென்ற நரி- புலி ஏதோ சொல்வதை அறிந்து மறைவில் நின்று கவனித்தது-
ஒன்பது.. ஒன்பது.
1



திடீரென்று புலி அங்கு வந்த ஒரு மானின் மீது பாய்ந்து அதைத் தின்றது-
பிறகு புலி மீண்டும் கரையில் அமர்ந்து....
பத்து.. பத்து...
புலியின் செயலைப் புரிந்து கொண்ட நரி அதனிடமிருந்து தப்பிக்க தந்திரம் செய்தது-


புலிக்கு எதிரே அஞ்சாமல் தண்ணீரில் இறங்கி தாகத்தை தீர்த்துக் கொண்டது.
பிறகு புலியைப் பார்த்து...
?
பதினைந்து..
பதினைந்து..
இதைக் கேட்ட புலி பயந்து ஓட்டம் பிடித்தது.
நல்ல வேளை தப்பிச்சேன்!

முள்ளம் பன்றி எப்படித் தாக்கும்?



பாம்பு சீறிக் கொண்டு படமெடுத்து நின்றது. எதிரே வழியை மறித்துக் கொண்டு சிறுத்தை!

''எதுக்கு வழியை மறிக்கிறே? எனக்குத் தலை போகிற அவசரம். குறுக்கே நிற்காதே.''

''இதோ பார்... நீ எங்கே; எதற்காக வந்திருக்கேன்னு தெரியும். முள்ளம் பன்றி வளைக்குத் தானே? அதன் மாமிசம் எனக்கும் ரொம்பப் பிடிக்கும். சின்னக் குட்டியா இருக்கும் போது எங்கம்மா ஒருமுறை கொண்டு வந்து கொடுத்திருக்கு. அப் புறம் அதை ருசி பார்க்கவே வாய்ப்பு இல்லை. கிடைக்கவும் இல்லை. இப்பத்தான் ரெண்டு நாள் முன்னால் இந்தக் கருவேல மரத்தடிப் புதரில் ஒரு முள்ளம் பன்றியைப் பார்த்தேன். குட்டி போடப் போகுது போல இருக்கு. பெரியதை விட குட்டிகளைப் பிடித்துத் தின்பது சுலபமாச்சேன்னுதான் வந்தேன். நீயும் அதுக்குத்தான் வந்திருக்கே இல்லையா?'' என்று கேட்டது சிறுத்தை.

''உனக்கே தெரிஞ்சிருக்கு. இருவருமே சமாதானமா போயிடுவோம். பெரியதை நம்மால் நெருங்கக் கூட முடியாது. குட்டிகளைக் கூட, அவை பிறந்த அரை மணிக்குள் நாம் பிடித்தால்தான் தின்ன முடியும். நேரமாக ஆக அவற்றின் முட்கள் கடினமாகி விடும். என்னைத் தடுக்காதே. நான் புதருக்குள் போகிறேன். குட்டி போட்டதும் உனக்கு ஒன்றை இழுத்துக் கொண்டு வந்து தருகிறேன். இது உறுதி'' என்றது பாம்பு.

சிறுத்தை ஒதுங்கி வழி விட்டது. பாம்பு சரசரவென்று புதருக்குள் புகுந்தது.

எலும்புத் துண்டு ஒன்றைக் கொரித்துக் கொண்டிருந்த பெண் முள்ளம் பன்றி, பாம்பைக் கண்டதும் பயந்து ஓட

ரேவதி

வில்லை. முட்களில்லாத தன் தலைப் பகுதியை உள்ளே வைத்துக் கொண்டது. உடல் முட்களைச் சிலிர்த்துக் கொண்டது. சுருண்டு ஓர் உருண்டையான பந்து போல் தன்னை ஆக்கிக் கொண்டது. இத்தனையும் கண்ணிமைக்கும் நேரத்திற்குள்!

பாம்பு அதை விடவில்லை. படமெடுத்துக் கொத்தியது. துருத்தியிருந்த முட்களில் பட்டு பாம்பின் தலையில் காயம் ஏற்பட்டு, இரத்தம் கூடக் கசிந்தது. முள்ளம்பன்றி முள் உருண்டையாகக் கிடந்தது! பாம்பு, ஆத்திரமும் வலியும் தாங்காது அதை உருட்டிப் பார்த்துச் சோர்ந்தது. அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு முள்ளம் பன்றி விரைத்து நின்ற முட்களைத் தாழ்த்திக் கொண்டு வளையில் பாய்ந்து ஓடியது.

வளைக்கு வெளியே காத்திருந்த சிறுத்தையைக் கண்டதும் நொடியில் பந் தாக மீண்டும் உடலைச் சுருட்டிக் கொண்டது. தலைப் பகுதி உள்ளே போய் விட்டது! சடசடவென்று முட்கள் உயர்ந்து குத்திட்டு நின்றன. பின்னாலேயே உருண்டு கொண்டு போனது. திடீரென்று ஒரு எகிறல்! முள்ளம் பன்றி தன் முள் பந்து உருவத்தால் சிறுத்தை யின் முகத்தில் வந்து மோதியது! சிறுத் தையின் இரு கண்கள், நெற்றி, மூக்கு, முகம் எல்லாவற்றிலும் முட்கள் போய்க் குத்தின! இரண்டொரு முட்கள் முகத்திலேயே குத்திட்டு நிற்க, முள்ளம் பன்றி, தன் முள் பந்து வடிவத்துடன்



கீழே விழுந்தது. மறுபடி இரண்டடி முன்னால் ஓடி, பின்பக்கமாக எகிறித் தாக்கியது! சிறுத்தை வலிதாங்காது உறுமியபடி ஓடி விட்டது!


காயத்தின் வலி தாங்காது தவித்த சிறுத்தையை வேட்டையாட வந்த ஒரு சர்க்கஸ்காரர் உயிருடன் பிடித்தார். கூண்டில் அடைத்துக் கொண்டு போனார். கூண்டில் சிறைப்பட்டிருந்த சிறுத்தையைக் காண வந்த அவரது பெண், ''அப்பா! சிறுத்தையின் முகத்தில் நிறைய காயம் இருக்கிறதே! முள் மாதிரி இரண்டொரு இடத்தில் நீட்டிக் கொண்டிருக்கிறதே!'' என்று அதிசயித்தாள்.

வேட்டைக்காரர் வந்து பார்த்தார். சிறுத்தையைக் கூர்ந்து கவனித்தார். ''இதெல்லாம் முள்ளம் பன்றியின் தாக்குதலால் ஏற்பட்ட காயங்கள்! முகத்தில் குத்தி நீட்டிக் கொண்டிருப்பவை கூட முள்ளம் பன்றியின் முட்கள்தான். நல்ல காலம், இந்தச் சிறுத்தை நம்மிடம் பிடிபட்டது. இதன் காயங்களுக்கு மருந்து போட்டு, ஊசி போட்டு குண மாக்கி விடலாம். இது மட்டும் காட்டிலேயே இருந்திருந்தால் இந்தக் காயங்களே ஆறாப் புண்களாகி, புரையோடி, இது பரிதாபமான முடிவைச் சந்திக்க நேர்ந்திருக்கும்'' என்றார் வேட்டைக் காரர்.

பாம்பையும் சிறுத்தையையும் தாக்கித் தப்பித்துக் கொண்ட பெண் முள்ளம் பன்றி ஆற்றை நீந்திக் கடந்தது. கடலைக் கொல்லையில் புகுந்து, வேரைத் தோண்டி, கடலையை வெளியே எடுத்து, வயிறு முட்டத் தின்றது.

அது தன் வளைக்குத் திரும்பும் வழியில் அதற்கு மிகவும் பிடித்தமான உப்பு வாசனை திடீரென்று வீசியது. அங்குமிங்கும் அலைந்து தேடிப் பார்த்தது. கடைசியில் கண்டுபிடித்தது. திறந்திருந்த இரும்பு வலைப் பெட்டி ஒன்றில் ஒரு பெரிய மண் பானையில் உப்பு வைக்கப்பட்டிருந்தது. முள்ளம் பன்றி அடக்க முடியாத ஆசையுடன் பானைக்குள் தலையை விட்டது. அவ்வளவு தான்! வலைக் கதவு மூடிக் கொண்டது!

''பாம்புக்கும், சிறுத்தைக்கும் அஞ்சாது எதிர்த்து, காயப்படுத்தித் தப்பினோம். இப்படி அசட்டுத்தனமாக, உப்புக்கு ஆசைப்பட்டு, பொறியில் சிக்கிக் கொண்டோமே! இதற்குள்ளேயே குட்டி போடும்படி இருந்தால், ஆபத்து ஆச்சே! குட்டி போட்டு அரை மணி ஆகி விட்





டால், குட்டிகள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு விடும். அதுவரை ஆபத்து இல்லாமல் தாக்குப்பிடிக்க வேண்டுமே'' என்று கலங்கியது முள்ளம் பன்றி.

வலைப் பெட்டியை வைத்தவர் சர்க்கஸ்காரர்தான். வலைக் கதவு மூடிக் கொண்ட சத்தத்தைக் கேட்டதும் அவர், கையில் டார்ச் லைட்டுடன் ஓடி வந்தார். டார்ச் லைட்டின் ஒளி வெள்ளத்தில் சிறிதும் கண்கூசாது பார்த்த அதைக் கண்டு சர்க்கஸ்காரருக்கு வியப்புத் தாங்க வில்லை! வலைப் பெட்டியை அப் படியே எடுத்துக் காருக்குள் கொண்டு வந்து வைத்தார். கார் கிளம்பியது.

போகும் வழியில் வலைப் பெட்டிக்குள் முள்ளம் பன்றி நான்கு குட்டி களைப் போட்டது. கண்களை விழித்து தாயைப் பார்த்த போது அவற்றின் உடம்பை மூடியிருந்த அடர்ந்த மென் மையான உரோமப் போர்வை அரை மணியில் கடினமாகி விட்டது! ''இனிமே பயமில்லை. எப்படியும் தற் காப்பு செய்து கொண்டு என் குட்டிகள் எதிர்க்கும். இதுவரை பாம்பிடமிருந்தும், சிறுத்தை யிடமிருந்தும் தப்பி இங்கே வந்து குட்டி போட்டேனே'' என்று பெரு மையுடனும், நிம்மதி யுடனும் அவை களுக்குப் பாலூட்டியது தாய்.

அறிவியல் உண்மைகள்

* பிறந்தவுடன் முள்ளம் பன்றிக் குட்டிகளின் உடலில் உள்ள உரோமங்கள் மென்மையாகவே இருக்கும். பிறந்த அரை மணி நேரத்தில் அவை கடினமாகி முட்களாகி விடும்!

* உடலில் உள்ள முட்கள், கடினமாக மாறும் உரோம முடிகளே! இவற்றை எளிதில் எடுத்து விடலாம். எதிரிகளைத் தாக்கும் போது இவை எதிரிகளின் முகத்திலும் உடலிலும் குத்திக் கொண்டு தங்கியோ, உதிர்ந்தோ விடும். முட்கள் 'ஸ்ட்ரா' போல் குழல் ஓடியவை. கூரான ஒரு முனையுடன் வழு வழுப்பாக அழகாக இருக்கும்.

* முள்ளம் பன்றி தாவர உண்ணி. ஆனால் தன் உடலில் உள்ள முட்களின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் கால்ஷியம் சத்துக்காக இவை எலும்புகளைக் கொறித்துப் பொடியாக்கி உண்ணும்.

* முள்ளம் பன்றியினால் ஏற்படும் முள் காயங்கள் சிறுத்தை, ஓநாய், பாம்பு போன்ற வைகளைப் பெரிதும் பாதித்து, அதுவே அவைகளின் மரணத்திற்குக் காரணமாகி விடு கின்றன!


* முள்ளம் பன்றிக்கு உப்பு மிகவும் பிடித்தமானது. இதை வைத்தே இவைகளைப் பிடிப்பார்கள்.

* டார்ச் விளக்கின் ஒளியைக் கண் கூசாது பார்க்கும் திறமை இதற்கு உண்டு!

* முள்ளம் பன்றியின் சுவையான மாமி சத்திற்காக பாம்பும், சிறுத்தையும் போட்டி போடும். குறிப்பாகத் தாயாகப் போகும் முள்ளம் பன்றியே இவற்றின் இலக்கு. காத்திருந்து குட்டி போட்டதும் தாக்கும்.

* கொரிக்கும் (RODENT) பாலூட்டிகளில் இதுவே பெரியது.

சார், தபால்!



★ நூறு ரூபாய் இரகசியம் எடுத்த எடுப்பிலேயே அசரவைத்து அடுத்த இதழுக்காக ஏங்க வைத்து விட்டது!
தக்கோலம், அ.முஸ்தபா.

★ புதுமையான செய்திகளை அழகு ஓவியங்களாக அறிமுகப்படுத்தும் ஆழி சாருக்கு சாக்லேட் மாலை போட வேண்டும்! தலையங்கம் அருமையிலும் அருமை!
மொரப்பூர், அ. நவ்சாத்.

★ போட்டிகள் வைப்பதில் கோகுலம் சாதனை படைக்கிறது. எத்தனை வகையான போட்டிகள்! கோகுலம் கோகுலம்தான்!
அரக்கோணம், எம்.பலராம்.

★ சரியான தீர்ப்பு ஆவலைத் தூண்டிய கதை!
கரடிப்பட்டி, ஆர். ஜே. மதியழகன்.

★ மத்தியப் பிரதேச மனுநீதிச் சோழன் மெய் சிலிர்க்க வைத்தது!
வடபாதிமங்கலம், வே.பூங்குன்றன்.

எதை ஏற்பது?

★ நரியைப் பற்றிய அறிவியல் தகவல்கள் திகைக்க வைத்தன!
மதுகை, த. சரவணன்.

★ மனதை அரித்த பல சந்தேகங்களை டாக்டர். கு. கணேசன் தீர்த்து வைத்துள்ள விதம் அருமை!
மதுக்கூர், என். ரமேஷ்.

★ தாமஸ் ஆல்வா எடிசன் படக்கதை படிப்பதற்கு மட்டுமல்ல பாதுகாக்கவும் தூண்டியது. சித்திரங்கள் மனதை ஈர்த்தன.
விசலூர், ஜி. ஜி. கிருஷ்ணன்.

★ காற்றாடி கட்டுரை காற்றாடிப் பிரியர்களுக்கு பாயாசம் போல் இருந்தது. பயனுள்ளதாகவும் இருந்தது!
தக்கோலம், பிரசாத்.

★ ஒலிபரப்பைத் தந்தவர் கட்டுரை சுவையாக இருந்தது!
சேலம், எம். கே. வேங்கவேல்.

★ மதவெறியர்களுக்கு நல்ல பாடம் ஆண்டவனின் குழந்தைகள்!
மாத்தூர், ரெ. இராமதேசிகன்.

★ பிருந்தாவனக் கதையரங்கில் இத்தனை கதைகளா! சூப்பர் கோகுலம்!
தருமபுரி, எம். சோமசுந்தரம்.

★ லேபிள்கள் அமர்க்களமாக இருந்தன!
சேலம், ரவி பாலாஜி.

★ ஜூன் இதழின் எல்லாப் பகுதிகளும் படு ஜோர்! அட்டைப்படம் அசத்துகிறது!
குமராட்சி, எம். பிரபு.

★ ராஜாவானால் படக்கதை உயிரினங்களிடம் அன்பு காட்டிப் பழக்க வேண்டியதை வலியுறுத்தியது. நல்ல பயனுள்ள வித்தியசமான கற்பனை.
செஞ்சி, தா. ஷகிலா.

★ 'நரி நீந்திக் குளிக்கும்' என்று ரேவதி எழுதியிருக்கிறார். இக் கருத்து ஒட்டகமும் நரியும் கதைக்கு ஏற்ப இல்லையே! எதை நாங்கள் ஏற்பது?
நெய்வேலி - 1, இரா. விஜயலட்சுமி.

(ரேவதி தந்திருப்பது அறிவியல். 'ஒட்டகமும் நரியும்' கற்பனைக் கதை அவ்வளவே. - ஆசிரியர்.)

★ கொ. மா. கோதண்டத்தின் கதை அழகுக்கு அழகு சேர்க்கிறது. எங்கே சார் பிருந்தாவனக் கவியரங்கம்?
முத்துராமலிங்கபுரம், கோகுலம் சிறுவர் சங்கம்.

★ "கேரம் ஒலிம்பிக்கில் இடம் பெறுமா?" பயனுள்ள கட்டுரை. படித்ததில் இருந்து நாங்கள் ஒழுங்குமுறையோடு கேரம் ஆடுகிறோம்.
பல்லாவரம், ஜி. பாலாஜி.

★ திறமைதான் அதிர்ஷ்டத்தின் அடிப்படை என்பதை முதல் மாணவி கதை உணர்த்தியது.
கீழ்வேளூர், கோ. தியாகராஜன்.

கடிதம் எழுதுவோர் தங்கள் முழு முகவரியையும் தரவேண்டும். - ஆர்.



நீங்கள் கம்ப்யூட்டர் துறையில் நிபுணராக விரும்பினால்
எல்லாவிஷயங்களுமே கனகச்சிதமாக இருக்க வேண்டும்.

கம்ப்யூட்டர் துறையில் நிபுணராக வேண்டும் என்பதையே
மாபெரும் இலட்சியமாகக் கொண்டவன் இவன்.
தனது டிசைன்களை அளப்பது, வரைவது, நிர்மா
ணிப்பது, உருவாக்குவது என அனைத்தையுமே செய்பவன்.
செய்யும் அனைத்து வேலைகளையுமே வெற்றிகரமாக
முடிக்க நினைப்பவன்

ஆகையால் இவன் தேர்ந்தெடுப்பது, மிகச் சிறந்த ஜியாமெட்ரி செட்.
கோரஸ் சக்ஸஸ் : ப்ரொட்ராக்டர், டிவைடர், காம்பஸ், ஸ்கேல்—
அனைத்துமே ஆண்டுக் கணக்கில் தொல்லையின்றி நுட்பமான செயல்
திறனை அளிக்கவென்றே கச்சிதமாக உருவாக்கப்பட்டவை.
நீடித்து உழைக்கும் சிவப்பு-வெளுப்பு மெட்டல் பாக்ஸில் வருகின்றன.
எந்தத் துறையிலும் சிறப்பாக செயலாற்ற உங்களுக்குத் தேவை உன்னதமானவை.
வெற்றிக்கு அடிகோலுபவை.




கோரஸ் சக்ஸஸ் ஜியாமெட்ரி செட்
வெற்றிக்கு கருவியாக திகழ்பவை

கோரஸ் (இந்தியா) லிட். பம்பாய்-400 018 . இந்தியாவெங்கும் கிளைகள் உள்ளன.

AKA/4697

பிருந்தாவனக் கதையரங்கம்



கழுகு கூட...!

விளையாடி விட்டுக் களைப்புடன் உள்ளே வந்தான் சுந்தரம். அம்மா ரெடியாக பொரித்த பூரியை டப்பாவில் மூடி, கிண்ணத்தில் மசால் வைத்து, அதையும் ஒரு சின்னத் தட்டுப் போட்டு மூடி வைத்திருந்தாள்.

சுந்தரம் டப்பாவை அருகில் இழுத்து வைத்துக் கொண்டு திறந்தான்.



தட்டைத் தள்ளிவிட்டு, மசாலா கிண்ணத்தை நகர்த்திக் கொண்டான். சாப்பிடத் தொடங்கினான்.

அவன் தின்பதைப் பார்த்துக் கொண்டே வந்த அம்மா, ''ஏன்டா இப்படிக் கால் கை கூடக் கழுவாது பன்னிக் குட்டி மாதிரி சாப்பிடறே! சாப்பிடுமுன் கை கால் கழுவ வேண்டும்னு பாடத்துல படிச்சது மார்க் வாங்கி முதல் ரேங்க் எடுக்க மட்டும்தானா? எத்தனை தடவை சொன்னாலும் நீ மாறவே மாட்டேங்கறியே!'' என்று அலுத்துக் கொண்டாள். சுந்தரம் அம்மா அலுத்துக் கொண்டதை இலட்சியம் செய்யவே இல்லை.

அன்று இரவு அப்பா வீடு திரும்ப நேரமாகி விட்டது. சாதம் போடும் போது அம்மா சுந்தரத்தைப் பற்றிய தன் கவலையை வெளியிட்டாள். ஏதோ யோசித்த அப்பா, ''கவலைப்படாதே. சுந்தரத்தைக் கூடிய விரைவில் நான் மாற்றிக் காட்டறேன்'' என்று தேற்றினார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை. பகல் பதினோரு மணி. திருக்கழுக்குன்றம் மலையில், கழுகுகள் வந்து பொங்கல் சாப்பிடும் இடத்தில், கூட்டத்தினருடன் சுந்தரமும் கழுகு தரிசனத்திற்

GET OFF TO A FLYING START *with*



LION
PREMIER® HB PENCILS

Supersmooth for effortless writing. Micronized lead for unbreakable points. Grace the desks of executives and others with style.




LION
PINKY® PENCILS

Perfect classmates. Pretty & Practical. Colourful designs, strongly bonded lead for unbreakable points, give it an edge over the competition







LION *Gee-flo®* BALLPENS

035 carbine 050 carborite

Tungsten carbide tips.
Made with Swiss technology
Unbeatable points. Sharp. Smooth. Non-smudging. Race across the page. Choice of red, black and blue refills. Mini-marvels at a marvellous price.



LION PENCILS LTD.
95, Parijat Marine Drive, Bombay 400 002.

BENSON & HEDGES WORLD CUP 1992

OFFICIAL LICENSEE OF THE WORLD CUP

National-766

காகக் காத்திருந்தான். அவன் பெற்றோரும் வந்திருந்தனர்.

கழுகுகள் வட்டமிட்டன. ஒரே பரபரப்பு. பண்டாரம் இரண்டு கிண்ணங்கள் வைத்தார். ஒன்றில் நீரை வார்த்தார். இன்னொன்றில் பொங்கலை இட்டார். இரண்டு கழுகுகளும் இறங்கின. கிண்ணத்து நீரில் அலகை விட்டு அலம்பிக் கொண்டன. பொங்கலைச் சாப்பிட்டன. பறந்து போயின!

''பார்த்தியா சுந்தரம்? கழுகுகள் கூட சாப்பிடுமுன் அலகை சுத்தம் செய்து கொள்ளுகின்றன. ஆனால் நீயோ....'' என்றார் அப்பா.

''இனிமே கை கால் கழுவாது சாப்பிட மாட்டேன். இது உறுதிப்பா'' என்றான் சுந்தரம்.

– சிவா. வடுகநாதன்,
வளையப்பட்டி

செருப்பு!

அருண் சாப்பிட்டு விட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டிருந்த போது, ராஜா சாப்பிட வந்தான்.

''அம்மா, ஒரு சந்தோஷ செய்தி. என்னுடைய கதை ஒன்றுக்கு மாம்பழம் பத்திரிகையில் முதல் பரிசு நூறு ரூபாய் கிடைத்திருக்கு. பள்ளி மூலமா கதையை அனுப்பியிருந்தேன். இப்பத்தான் ஆசிரியர் சொன்னார்'' என்றான் ராஜா.



''ரொம்ப சந்தோஷண்டா ராஜா. பரிசுப் பணம் வந்ததும் உங்க அண்ணனுக்கு செருப்பு வாங்கிக் கொடுடா. வெய்யில்ல காலுக்கு செருப்பு இல்லாம அவன் திண்டாடறான். அவனுடைய செருப்பை யாரோ திருடிக்கிட்டுப் போயிட்டதுல இருந்து அவன் படற பாட்டைப் பார்த்தா பாவமா இருக்கு'' என்றாள் அம்மா.

ராஜா ஏதோ பதில் கூற வாய் திறப்பதற்குள் அருணின் குரல் கேட்டது.

''எனக்கு செருப்பு வாங்கிக்க எவன் தயவும் தேவையில்லை. யாரும் எனக்கு எதுவும் வாங்க வேண்டாம்,'' என்று பொதுவாகச் சீறிய அருண், ''ஏம்மா, எனக்கு செருப்பு இல்லே. அதனால செருப்பு வாங்கிக் கொடுன்னு உங்கிட்ட கேட்டேனா?'' என்று ஆக்ரோத்துடன் கேட்டான்.

அம்மா நடுங்கிப் போய் விட்டாள். அண்ணன் அப்படிக் கடுமையாகப் பேசுவதைப் பார்த்தறியாத ராஜாவும் திகைத்துப் போனான். நமக்குப் பரிசு கிடைத்தது பற்றி அண்ணனுக்குப் பொறாமை என்று அவன் முடிவு கட்டினான். அதற்குப் பிறகு அவனுக்கு சாப்பாடு இறங்கவில்லை. ஒப்பேற்றி விட்டு கை கழுவ எழுந்து போனான்.

ராஜாவின் தலைமறைந்ததும் 'விடுவிடு'வென்று உள்ளே வந்த அருண், ''என்னம்மமா இது! நம்ம கஷ்டம் என்றைக்கும்தான் இருக்கு. தம்பிக்கு இது பள்ளி இறுதி ஆண்டு. ஒரு தடவை கூட நாம அவனை பள்ளிச் சுற்றுலாவுக்கு அனுப்பினதில்லே. அவனும் நிலைமை தெரிஞ்சு கேட்டதில்லே. அடுத்த வாரம் பள்ளியிலே குற்றாலம் போறாங்களாம். நூறு ரூபாய் ஆகும். எப்படியாவது உன் தம்பியை இந்த ஆண்டாவது அனுப்புன்னு அவங்க வகுப்பு ஆசிரியர் நேற்று பார்த்தப்போ என்னிடம் சொன்னார். முதலாளியிடம் அட்வான்ஸ்

குட்டப்பாளையம் சாமிநாதன் கல்வி அறகட்டளை. (REGD.)

ஆனூர் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி

(ஹாஸ்டல் வசதி உண்டு)

Recognised by the Govt. of Tamil Nadu.

முத்தூர் P.O. பெரியார் மாவட்டம் - 638 105.

போன் 236 (STD Code 042094)

எல்.கே.ஜி. முதல் 8 - ஆம் வகுப்பு வரை.

- ஆங்கிலம் போதனாமொழி தவிர இந்தி, சமஸ்கிருதம், தமிழ், தியானம், ஓவியம், சங்கீதம், நடனம் கற்றுத்தரப்படும்.
- இறையுணர்வு, நாட்டுப்பற்று, ஒழுக்கம், கட்டுப்பாடு - நமது கலாச்சாரம் - பண்பாடு இவைகளுக்கு முக்கியத்துவம்.
- ஆடியோ - வீடியோ பாட முறை - கம்ப்யூட்டர் பயிற்சி உண்டு.
- பஸ் - வேன் - ஆயா - ஹாஸ்டல் வசதி. 4 - ம் வகுப்பு முதல் ஹாஸ்டலில் சேர்க்கப்படுவர்.
- சமசீரான சைவ உணவு - இயற்கை எழில் சூழ்ந்த (Pollution Free Land) 50 ஏக். பூமி பரப்பளவு - பால் பண்ணையில் இருந்து சுத்தமான பசும்பால்.
- விளையாட்டுகள் - ஊக்குவிக்கப்படும்.
- ஸ்வாமி விவேகானந்தர் - பாண்டி - அன்னை, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் வழிமுறைகளில் மாணவனை எங்களது தாளாளரின் கல்வி குருவான மேதகு. திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் வழியில் "பூர்ண புருஷன்" ஆக்குவதே எங்கள் நோக்கமாகும்.

FOR PROSPECTUS AND APPLICATION SEND Rs. 50/-

Anoor Vidyalaya

Matriculation School

MUTHUR (P.O.) 638 105 PERIYAR DIST

PHONE : 236, 321.

நீங்களும் ஓவியராகலாம்...

தபாலில் பயிற்சி



- பயிற்சி பெறுகின்ற பல மாணவர்கள் பாராட்டும் 'தி கிராபிக்' உங்கள் குழந்தைகளுக்கு உள்ள ஓவியத் திறமையினை மேலும் வலுப்படுத்த சிறப்புப் பயிற்சி அளிக்கிறது.
- தனிப்பட்டதோர் முறையிலே, தனது கவனத்தை ஒவ்வொரு மாணவருக்கும் அளிக்கவும், மாறி வரும் காலங்களுக் கேற்றவாறு வளர்ச்சி யடைந்துள்ள ஓவியக் கலையின் தற்கால நுணுக்கங்களையும் நீங்கள் பெற புரட்சிகரமான பாடங்கள் — வரைபடங்கள்.

விவரங்களுக்கு ரூ 2/- தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும்.

THE GRAPHIC

96/8 South West Boag Rd.
T Nagar Madras 17 Ph 444463.

12 Months Postal Course in COMMERCIAL ART is also available. Prospectus Rs. 10/- by M.O.

Artland Ad India

கேட்டேன். இல்லைன்னுட்டார். நான் வருத்தமா இருந்தப்ப இந்தப் பரிசு சமாச்சாரம் வந்திருக்கு. இந்தப் பணத்தை வைத்துக் கொண்டாவது அவன் சுற்றுலா போயிட்டு வரட்டும்னு நான் எண்ணியிருந்தேன். நீ என்னடான்னா எனக்கு செருப்பு அது இதுன்னு ஆரம்பிக்கிறே! சும்மா இரு. எனக்கு செருப்பு இப்ப அவசரம் இல்லே'' என்றான் தணிந்த குரலில்.

வெளியே இருந்து கேட்டுக் கொண்டிருந்த ராஜா உள்ளே ஓடி வந்தான். ''அண்ணா, என்னை மன்னிச்சுடு. நீ முதலில் பேசியதைக் கேட்டதும் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன்,'' என்று அருணைக் கட்டிக் கொண்டு விம்மினான்.

– நா. தாமோதரன், கள்ளக்குறிச்சி

தங்க விதை!

பரமன் பரம ஏழை. ஆனால் உண்மையானவன். யாரையும் தன்னுடைய ஏழ்மை நிலைக்காகத் திட்டவோ, நொந்து கொள்ளவோ மாட்டான். ஒருமுறை கடவுள் அவனுடைய நிலைக்கு இரங்கி, அவனுக்கு உதவ அவன் முன் தோன்றினார். பரமன் வணங்கினான்.



''பரமு, உனக்கு உதவ விரும்புகிறேன்'' என்று கூறி ஒரு தங்க அவரை விதையைத் தந்தார் கடவுள்.

''இதை ஒரே ஒருமுறை மண்ணில் விதை. உன் கஷ்டமெல்லாம் தீரும். ஆனால் பேராசைப்பட்டால் எல்லாம் போகும்'' என்று எச்சரித்து மறைந்தார் கடவுள்.

பரமன் அந்தத் தங்க விதையை பூமியில் நட்டுத் தண்ணீர் விட்டுப் பாதுகாத்தான். அழகான அவரைக் கொடி முளைத்தது. சரியாக ஒன்பது தங்கக் காய்கள் காய்த்தன! அவற்றையும் நட்டால் அதிக தங்கக் காய்கள் காய்க்குமே என்று பேராசைப்பட்ட பரமன், கடவுளின் எச்சரிக்கையை அலட்சியம் செய்து விட்டு, அவற்றை மறுபடி நட்டான். மழை கொட்டு கொட்டென்று கொட்டி காய்கள் அழுகி நீரில் கலந்தன. பேராசைக்குத் தண்டனை கிடைத்தது!

– வி. மகேந்திரன், திருவாரூர்.

இங்க் அடித்தான் பாலு!

பாலு என்று சொன்னால் யாருக்கும் குழப்பமாக இருக்கும். 'இங்க் அடித்தான் பாலு' என்று கூறினால்தான் எல்லோருக்கும் தெரியும். பெரிய பணக்காரர் வீட்டுப் பையன். அவன் 'இங்க்' அடித்துப் பாழாக்காத மாணவரின் சட்டையோ, ஆசிரியர்களின் கோட்டோ வேட்டியோ அந்தப் பள்ளியில் கிடையவே கிடையாது! எத்தனை முயன்றும் யாராலும் அவனை மாற்றவே முடியவில்லை.

அன்று தமிழாசிரியர் புதிய சட்டை போட்டுக் கொண்டு வந்திருந்தார். பாலுவின் பழக்கப்பட்ட கை சும்மா இருக்குமா? ஆசிரியர் திரும்பி போர்டில் எழுத ஆரம்பித்ததும், இதற்காகவே காத்துக் கிடந்தவன், எழுந்து நின்றான். பேனாவைத் திறந்து கையில் வைத்துக் கொண்டு கையை ஓங்கினான். ஆனாலும் சரியான கோணம்

கிடைக்கவில்லை. உயர்ந்திருந்த டெஸ்க் மேல் ஏறப் போனான்.

''வேண்டாம் பாலு. மேலே மின் விசிறி இருக்கு. அதில் கைபட் டால் விரல் போய் விடும். அப்புறம் யார் மேலும் 'இங்க்' அடிக்க முடியாது. இதோ நானே எழுதி முடித்து விட்டு உன் அருகே வரேன். நீ உட்கார்ந் திருக்கும் இடத்தில் இருந்தபடியே அடிக்கலாம்,'' என்று 'சட்'டென்று திரும்பிப் பார்த்துக் கூறிய ஆசிரியர் மெதுவாக அவனிடம் வந்தார்.

''இன்றைக்குக் காலையில் புதுச் சட்டையைப் போட்டுக் கொண்ட போதே உன் நினைப்புத்தான் வந்தது. உனக்குப் பயந்து புதுச் சட்டை போட் டுக் கொள்ளாது இருக்க முடியுமா? இல்லே, நீதான் 'இங்க்' அடிக்காமல் விடப் போறியா? இங்கே வந்ததும் பார்த்த பிறகுதான், நம்ம வகுப்பில் புதிதாக மின்சார விசிறி போட்டிருப் பது நினைவுக்கு வந்தது. ஏற்கெனவே நீ உயரம். இன்னும் 'டெஸ்க்' மேலே ஏறி நின்னு கையை ஓங்கினால் உன் விரல்கள் என்னவாகும்? அதனால்தான் பதைபதைப்போடு ஓரக் கண்ணால் கவனித்தபடி இருந்தேன்,'' என்று கூறிய ஆசிரியர் அவன் முன்னால் முதுகைக் காட்டியபடி நின்றார்.

''சீக்கிரம் இங்க் அடிப்பா. நான் போய் பாடம் நடத்தணும் இல்லே?''

''சார்'' என்று குரல் தழுதழுக்க எழுந்தான் பாலு.

''இனிமே நான் யார் சட்டையிலும் இங்க் அடிக்க மாட்டேன் சார். இது உறுதி'' என்று ஆசிரியரது கால்களைக் கட்டிக் கொண்டு அழுதான்.

யாராலும் திருத்த முடியாத பாலு வைத் தமிழாசிரியர் திருத்தி விட்டார்!

– ந. திருமூர்த்தி, கோவை – 6.

நன்றிக்குப் பரிசு!

பூபதி பெரிய பணக்காரர். மனைவி, குழந்தை குட்டி யாரும் இல்லை. உதவி என்று கேட்டு வந்தவர் களுக்கு இல்லை என்று கூறாது அள்ளிக் கொடுத்து பரம ஏழையானார். இறக் கும் நேரம் வந்த போது மிகவும் வறு மையால் வாடினார். ஊர்த் தலைவரை அழைத்து. ''நான் இறந்ததும் நான் படுத்திருக்கும் இந்தக் கட்டிலை யும், எனது புகைப்படத்தையும் விற்று ஏழை களுக்குச் சோறு போடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

பூபதி இறந்தார். ஊர்த் தலைவர் அவரது கட்டிலையும் புகைப்படத்தை யும் ஏலம் போட்டார். அவரால் உதவி பெற்று உயர்ந்தவர்கள் பலர் இருந்தும் யாரும் அவரது புகைப்படத்தை ஏலம் கேட்க முன்வரவில்லை. கட்டில் மட் டும் ஏலம் போனது. கடைசியில் ஒரு பிச்சைக்காரன் தன்னிடம் இருந்த மூன்று ரூபாயைக் கொடுத்து புகைப் படத்தை வாங்கிக் கொண்டு போனான்! அவன் பசித்திருந்த போது அவர் ஒரு முறை உணவளித்தாராம்! அந்த நல்ல மனிதரின் புகைப்படம் தன்னிடம் இருக்கட்டும் என்று மார்புடன் அணைத்துக் கொண்டு சென்றான் அவன்! போட்டோவின் பக்கம் ஏதோ நெருடியது. பிச்சைக்காரன் போட்டோ வின் சட்டத்தைப் பிரித்துப் பார்த்தான். உள்ளே ஒரு கடித உறை! ''எனது புகைப்படத்தை விலைகொடுத்து வாங் கியிருக்கும் நன்றி மறவாத மனிதனே, உனக்கு என் வணக்கம். உனது நன்றி உணர்வைப் பாராட்டுகிறேன். அதற்கு நான் தரும் பரிசாக இதில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பத்தாயிரம் ரூபா யையும் எடுத்துக் கொள்'' என்று எழுதி, பூபதி கையெழுத்திட்டிருந்தார்!

– ஈ. விஜயகுமாரி,
செட்டிபாளையம்.



நீராவி, டீசல், பெட்ரோல் வண்டிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு வரை போக்குவரத்துக்கு உதவியாக இருந்தவை மாடுகளும், குதிரைகளுமே. குறிப்பாக வேகத்திற்கும், நெடுந்தொலைவுப் பயணங்களுக்கும் குதிரைகளே பயன்படுத்தப்பட்டன.

இன்று நாம் காணும் குதிரையின் வம்சம், எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூனை அளவில் இருந்தது என்பது வியப்பளிக்கக்கூடிய உண்மை. அப்பொழுது அதற்கு முன்கால்களில் நான்கு விரல்களும் (TOE) பின்கால்களில் மூன்று விரல்களும் இருந்தனவாம். இதன் பெயர் எஹிபஸ் (EOHIPPUS) அல்லது முன்னோடிக் குதிரை (DAWN HORSE). இதன் புதை படிவங்கள் லையோமிங்கிலும், நியூமெக்சிகோவிலும் கிடைத்துள்ளன.

குதிரை புராணம்



குதிரை நமது புராணங்களிலும் வேதங்களிலும் அசுவம் என்ற பெயரில் குறிக்கப்படுகிறது. அதர்வணவேதத்தில் 'அசுவ பாஷை' என்று ஓர் தனிக் குறிப்பு மொழியும் சொல்லப் படுகிறது. இது குதிரைகளைப் பழக்குவோர் தங்களுக்குள் பேசிக்கொண்ட சங்கேத மொழியாக இருக்கலாம். புராண கால அரசர்களும், வேத கால அரசர்களும் அசுவ மேத யாகம் செய்த சிறப்பைப் பல காவியங்கள் புகழ்கின்றன. மகாபாரதப் போர் முடிந்த பிறகு தருமரும், இலங்கைப் போர் முடிந்த பிறகு இராமரும், வரலாற்று அரசர்களான சந்திர குப்த மௌரியர் போன்றவர்களும் இந்த யாகத்தைச் செய்திருக்கி

றார்கள். சந்திரகுப்தர் இதன் நினைவாக ஒரு புதிய நாணயத்தைக் கூட வெளியிட்டிருக்கிறார்.

எனவே குதிரைகள் நம் நாட்டுக்குப் புதிய விலங்குகள் இல்லை. அதன் பயனை நமது முன்னோர்கள் நன்கு அறிந்து பயன்படுத்தி வந்திருக்கின்றனர். சாதாரண மக்களை விட பிரபுக்களும் மன்னர்களுமே குதிரை களை அதிக அளவில் பயன்படுத்தியிருக்கிறார்கள். குதிரைப் படை வைத்துக் கொள்ளாத மன்னர்களே கிடையாது. பட்டத்து யானைக்கு உரிய சிறப்பைக் குதிரைகள் பெற்றன. அவை மன்னர்களுக்கு ஒரு நெடுக்கமான தோழனைப் போல் இருந்து வந்துள்ளன.

அலெக்சாண்டரின் புகழ்மிக்க குதிரையின் பெயர் கிர்ம்பெர்க். இதைக் கொண்டு பல வெற்றிகளைக் குவித்த அலெக்சாண்டர் இந்தியாவிலிருந்து கிரீக்குத் திரும்பிப் போகும் போது இதை இழக்க நேரிட்டது. அது மறைந்த இடத்தில் ஒரு அற்புதமான பளிங்குக் கல் சிலையையும் ஒரு நகரத்தையும் அவர் உருவாக்கினார்.

அக்பரை எதிர்த்துப் போரிட்ட ராண பிரதாப்பின் அருமைக் குதிரையின் பெயர் 'சடக்'. ஷாஜஹானின் அன்புக் குதிரையின் பெயர் 'பீம்பு'. இது இறந்த தும் துக்கம் தாளாது பல நாள் பைத்தியம் பிடித்தவர் போல் இருந்தாராம் ஷாஜஹான்! ஜான்சி ராணியின் மானத்தைக் காத்த அன்புக் குதிரையின் பெயர் 'பஸ்மதி'.

அலெக்சாண்டர் வரும் வரை நம் மன்னர்கள் யானைப் படையைத்தான் வலிமைமிக்கது என்று எண்ணி வந்தனர். ஆனால் தேர்ந்த தனது சிறு குதிரைப் படையைக் கொண்டு அலெக்சாண்டர் அவர்களை வென்றதும், குதிரைப் படையின் சக்தியையும் வசதியையும் மன்னர்கள் அறிந்து அதற்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர்.

இந்திய நாட்டுக் குதிரைகள் எல்லாமே மட்டக் குதிரைகள்தான். இவை பொதி சுமக்கவும், வீட்டுப் பணிகளைச் செய்யவும், போக்குவரத்துக்குமே அதிக மாகப் பயன்பட்டன. அதனால் உயர்ந்த வகைக் குதிரைகளை அரேபி



யாவில் இருந்து அவர்கள் வரவழைத்துக் கொண்டனர். இவற்றை இந்திய மண்ணில் தக்கபடி பராமரித்து, பயிற்சியளித்துக் கவனிக்க இதில் திறமைமிக்கவர்கள் இல்லாத காரணத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரேபியக் குதிரைகள் அடிக்கடி இறந்தன. இந்திய மன்னர்கள் தங்கள் வருவாயில் பெரும் பகுதியைத் தங்கள் குதிரைப் படைக்கே செலவு செய்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.


தமிழ்நாட்டில் பெருமளவுக்கு யவன தேசத்தில் இருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றைக் கவனித்துப் பராமரிக்க யவன நாட்டு வீரர்களும் வரவழைக்கப்பட்டனர். இந்திய நாட்டைப் பொறுத்த வரை குதிரைகள் போருக்கு உதவும் ஒரு விலங்காக மட்டுமே மதிக்கப்பட்டு வந்துள்ளன.

மேல்நாடுகளில் குதிரைகள் வீட்டு செல்லப் பிராணிகளாக மதிக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் மக்களும் பிரான்ஸ், ஸ்வீஸ் நாட்டு மக்களும், குதிரைகளைக் குழந்தைகள் போல் நேசித்து வளர்க்கின்றனர். குதிரைகளைக் கவனிக்கத் தனி மருத்துவர்களும், மருத்துவமனைகளும் உள்ளன.

அறிவியல் அடிப்படையில் குதிரைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கிறார்கள். ஒன்று சுமையைத் தூக்கிச் செல்லப் பயன்படும் மட்டக் குதிரைகள். மற்றொன்று வேகமாக ஓடும் பந்தயக் குதிரைகள்.

“எழுத முடியாத ‘மை’ எது?”
“கோது‘மை’ தான்!”

– கவிட் ரவி



மட்டக் குதிரைகள் பொதி சுமப்பதுடன், நிலம் உழுவதற்கும் பயன்படுகின்றன. இவற்றிற்கு உறுதியான கால்களும், தடிமனான இரும்பு உடலும் இருக்கும்! தக்க பயற்சி பெற்றால் பந்தயக் குதிரைவகை போருக்கும் பயன்படும். இவற்றின் உடல் நீண்டு குறுகியதாக இருக்கும். இவை மணிக்கு ஐம்பது கி. மீ. ஓடும்.

குதிரை, ஒலி வரும் திசையை நோக்கிக் காதுகளைத் திருப்பிப் பார்க்கும். புதிய பொருள்களைக் கண்டால் குதிரைகள் மிரளும். இதனால்தான் குதிரைகளுக்கு கண்களில் மறைப்புப் பட்டை கட்டுகிறார்கள். குதிரை தாவரப் பயிர்கள் எல்லாவற்றையும் மேயும். இது அசைபோடாத விலங்கு. உணவை (புற்களை) வேருடன் இழுத்துக் கடித்து நன்றாக மென்று தின்னும். குதிரையின் வால் ஒரு சிறப்பு அம்சம். இதற்கு மட்டுமே வால் முழுவதும் அடர்ந்த நீண்ட அழகான மயிர் உண்டு.

சில இனங்களில் ஆண் குதிரைக்கும் பெண் குதிரைக்கும் பற்களின் எண்ணிக்கையில் வேறுபாடு உண்டு. குதிரையின் கனைப்பில் 186 வித்தியாசங்கள் உள்ளனவாம்! அதனால் கண்டிப்பாக குதிரை மொழி இருக்கிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


குதிரையின் இறைச்சி புரதச்சத்து மிக்கது. தரமான நாய் உணவு இதிலிருந்து தயாரிக்கப்படுகிறது. குதிரையின் தோலால் கையுறை, பந்து செய்கிறார்கள். குதிரையின் வால் மயிர் சில விளையாட்டுக் கருவிகளையும், மேநாட்டு இசைக் கருவிகள் சிலவற்றைச் செய்யவும் பயன்படுகின்றது. குதிரை நீரில் நன்கு நீந்தும். பழக்கினால் நன்கு ஆடும். வித்தை செய்யும். 30 முதல் 40 ஆண்டுகள் வரை சராசரி வாழும்.

அட்டையில் வெள்ளைக் குதிரை பீம்பாவில் சவாரி செய்பவர்கள் பவித்ரா, ஸ்ரீராம்.

வண்ணப்படம் : யோகா



புத்தகங்களுக்கு டா டா!



''அடுத்த நூற்றாண்டில் மனித வாழ்வில் நிறைய மாற்றங்கள் நிகழும். இன்றுள்ள விமரிசையான சடங்குகள் உட்பட எல்லாமே பழங்கதைகளைப் போல் ஆகி விடும். குறிப்பாகக் கல்வித் துறையில் மிகப் பெரும் மாறுதல்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் நாளைய மாற்றங்களுக்கான அறிகுறிகள் இன்றே காணப்படுகின்றனவே!'' என்கிறார்கள் அறிவியல் வல்லுநர்கள்!

அப்படியென்ன பெரிய்...ய மாற்றங்கள் ஏற்பட்டு விடும் என்பதை அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது அல்லவா?

இப்போதிருக்கும் புதிய கல்வி முறையில் L.K.G.படிக்கும் குழந்தை கூட கிலோக் கணக்கில் புத்தகங்களைச் சுமந்து செல்ல வேண்டி உள்ளது அல்லவா? இத் துன்பம் முதலில் ஒழிக்கப்படும்! பாடப் புத்தகங்களுக்குப் பதிலாக கம்ப்யூட்டர் டிஸ்க்குகள் பயன்படுத்தப்படும். அப்படியென்றால் என்னவென்கிறீர்களா? நாம் பயன்படுத்தும் டேப் ரெக்கார்டரில், ஒரே ஆடியோ கேஸட்டில் பல படங்களின் பாடல்களை ஒலிப்பதிவு செய்து கேட்கிறோமல்லவா? அதே போன்று பல பாடங்களின் தொகுப்பை ஒரே டிஸ்க்கில் பதிவு செய்து கொள்ள முடியும். அதை வீட்டிலுள்ள கம்ப்யூட்டரிலோ அல்லது பள்ளியிலுள்ள வகுப்பறை கம்ப்யூட்டரிலோ போட்டு இயக்கினால் பாட வரிகள் கம்ப்யூட்டர் திரையில் தோன்றும். ஆசிரியர் வாயால் விளக்கி போர்டில் எழுதிக் காட்டும் இரண்டு பணிகளையும் கம்ப்யூட்டர் திரைப்பாடம் செய்து விடும்! அதனைப் பார்த்துப் படிக்க வேண்டியது தான் பாக்கி.

இந்த முன்னேற்ற முறையானது வளர்ந்து விட்ட பணக்கார தொழில் நுட்ப நாடுகளான ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஜெர்மனியில் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு விட்டன. இதே முறை மற்ற நூல்களுக்கும் பொருந்தும். அதாவது கதை, கட்டுரை மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தங்க



ளது படைப்புகளை நூல் வடிவில் வெளியிடுவதை நிறுத்திக் கொண்டு ''டிஸ்க்'' வடிவில் வெளியிடுவார்கள். ஒரே 'டிஸ்க்'கில் ஆயிரம் பக்கங்களைக் கொண்ட புத்தகத்தின் பக்கங்கள் கூடப் பதிவு செய்யக்கூடிய வசதி அப்போது வந்து விடும்!

அப்புறம் என்ன... நூல் நிலையங்களில் அடுக்கடுக்குகளாக இடம் பிடித்துக் கொண்டிருக்கும் புத்தகங்களுக்குப் பதிலாக கம்ப்யூட்டர் டிஸ்க்குகள்தான் ஆக்கிரமித்துக் கொள்ளும்! இந்த வசதி எல்லாத் தரப்பு மக்களுக்கும் போய்ச் சேரும் வகையில் கம்ப்யூட்டர் மற்றும் டிஸ்க்குகள் மலிவான விலையில் சாதாரண மக்களும் வாங்கும் விதத்தில் எங்கும் கிடைக்கும் நிலை உண்டாகும்!


– அப்துல்.

இது 'என்ன வருடம்' என்று கேட்டால் சட்டென்று 'லீப் வருடம்' என்று கூறி விடுவீர்கள். இதே கேள்வியை விளையாட்டுப் பிரியர்களிடம் கேளுங்கள் இது 'ஒலிம்பிக் வருடம்' என்றே பதில் வரும். நான்கு வருடங்களுக்கு ஒருமுறை 'லீப்' வருடம் வருவது போல, ஒவ்வொரு லீப் வருடத்திலும் நடத்தப்படுகிறது ஒலிம்பிக் போட்டிகள். இந்த ஆண்டு ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 9 வரை ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் 25-ஆவது 'சம்மர்' ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அது என்ன சம்மர் ஒலிம்பிக் போட்டிகள்?

ஒலிம்பிக் போட்டிகள் இரண்டு வகைப்படும். 'விண்டர்' ஒலிம்பிக்ஸ் போட்டிகள், பனிக்கட்டியில் விளையாடப்படும் ஸ்கேட்டிங், ஸ்கியிங் போன்றவைகளைக் கொண்டு நடத்தப்படுகின்றன. 'சம்மர்' போட்டிகளில் இதர பல விளையாட்டுகள் இடம் பெறும். இவ்விரண்டு போட்டிகளும், இதுவரை ஒரே வருடத்தில் நடத்தப்பட்டு வந்தன. இந்த வருடம் பிப்ரவரியில் ஃபிரான்சின் ஆல்பர்ட்வில்லி (ஃபிரெஞ்சு ஆல்ப்ஸ்-இல் உள்ளது) என்ற இடத்தில் 16-ஆவது 'விண்டர்' போட்டிகள் நடத்தப்பட்டன. ஆனால், இனி இவ்விரண்டு போட்டிகளும் வெவ்வேறு வருடங்களில் நடைபெறும். 17-ஆவது விண்டர் போட்டிகள் 1994-ல் நார்வே நாட்டின் லில்லிஹாமர் நகரிலும் 26-ஆவது சம்மர் போட்டிகள் 1996-ல் யூ. எஸ். ஏ. வின் அட்லாண்டா நகரிலும் நடைபெறும். அதற்குப் பிறகு ஒவ்வொன்றும் எப்பொழுதும் போலவே நான்கு வருட இடைவெளியில் நடத்தப்படும்.

'சம்மர்' ஒலிம்பிக் போட்டிகள் முதன் முதலில் கி. மு. 776-ல் கிரேக்கர்களால் தங்கள் தெய்வம் ஜீயூஸ்யைக் கொண்டாட 'மௌண்ட்' ஒலிம்பஸில் (ஒலிம்பிக்ஸ் காரணம்) நடத்தப்பட்டன.

கி. பி. 394 வரை நாலு வருடங்களுக்கு ஒருமுறை நடந்து பிறகு கைவிடப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் மீண்டும் கி. பி. 1896 ஆம் ஆண்டு தொடங்கி முதலில் கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடத்தப்பட்டன. இதற்குக் காரணமாக இருந்தவர் ஃபிரான்ஸ் நாட்டின் பிரபு பேரன்



பிரெரி, டி கூபர்டின் என்பவர். இவரே நவீன ஒலிம்பிக் போட்டிகளின் தந்தை எனப்படுகிறார்.

ஒலிம்பிக் போட்டிகளுக்கே உரித்தான சில அம்சங்கள் :

1. ஒலிம்பிக் சின்னம் - இதில் ஐந்து வட்டங்கள் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு இருக்கும். இவை, ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களைக் குறிக்கும் வளையங்களின் ஐந்து நிறங்கள் (நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு) உலக மக்கள் எக்கண்டத்தில் இருப்பினும், எந் நிறத்தவராயிருந்தாலும், அனைவரும் ஒன்றுபட்டவரே என்பதை உணர்த்தும்.

2. ஒலிம்பிக் கொடி - வெள்ளைப் பின்னணியில் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட வட்டங்களால் ஆனது.

3. ஒலிம்பிக் ஜோதி - 1936-ல்தான் முறையாக மறுபடி ஏற்றப்பட்டது. கிரேக்கத்தில் உள்ள ஒலிம்பியாவில் ஏற்றப்பட்ட முதல் ஜோதியே இன்றும் தொடர்வதாக நம்பி ஒவ்வொரு போட்டியின் தொடக்கத்திலும, தொடர் ஓட்டமாகக் கொண்டு வரப்பட்டு இது ஏற்றப்படுகிறது. போட்டி முடிந்ததும் ஜோதி அடுத்த ஒலிம்பிக் போட்டி நடக்கும் இடத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

4. ஒலிம்பிக் சத்தியப் பிரமாணம் - ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாட்டைச் சேர்ந்த ஒரு வீரர், போட்டிகள் முறையாகத் துவக்கி வைக்கப்பட்டதும், கலந்து கொள்ளும் மற்ற



* லாஸ் ஏஞ்சல்ஸ் - ஒலிம்பிக் ஜோதி



* மாஸ்கோ ஒலிம்பிக் ஸ்டேடியம்

ஒலிம்பிக்ஸ் - 92 ஒரு முன்னோட்டம்

நீ. சூர்ய பிரகாஷ்



✱ நெல்லிகிம் - ஒலிம்பிக் : சேம்பியன் - 1976

அனைத்து வீரர்களின் சார்பாக ''போட்டிகளின் விதிமுறைகளுக்கு ஏற்றவாறு, அவற்றை மதித்தும், மிகச்சிறந்த விளையாட்டுணர்வோடும், விளையாட்டின் புகழுக்காகவும், எங்கள் அணிகளின் மதிப்பிற்காகவும் விளையாடுவோம்'' என்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்..


5. ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டிக்கும் ஒவ்வொரு லோகோவும் மஸ்கட்டும் உருவாக்கப்படும்.

6. பழைய ஒலிம்பிக் போட்டிகளில், வெற்றி பெற்றவர்களுக்கு ஆலிவ் இலைகளால் ஆன கிரீடம் தரப்பட்டது. இப்போதெல்லாம் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் தரப் படுகின்றன. முதல் ஆறு இடங்களைப் பெறும் வீரர்களுக்குச் சான்றிதழ்களும் உண்டு.

பார்சிலோனா ஒலிம்பிக்ஸ், இதுவரை நடந்துள்ள எல்லாப் போட்டிகளையும் விடப் பல வகையிலும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ இருக்கிறது. அவற்றுள் முக்கியமான சிறப்பு எந்த நாடும் இப் போட்டிகளைப் புறக்கணிக்கவில்லை என்பது. தென் ஆப்பிரிக்கா கூட 'இன்டர் நேஷனல் ஒலிம்பிக் கமிட்டி' யில் சேர்க்கப்பட்டுள்ளது. வரலாறு காணாத அளவில் போட்டியாளர்களும் அதிகாரிகளுமாகச் சுமார் 20,000 பேர்களும், சுமார் 10,000 பத்திரிகை நிருபர்களும் இப் போட்டிகளில் பங்குகொள்ள அல்லது காண வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. கலந்து கொள்ள வரும் அனைவரும் தங்க, எல்லா வசதிகளுடன் ஒலிம்பிக் 'கிராமம்' மிகப் பிரம்மாண்டமாக 88- ஹெக்டேர் பரப்பளவில் உருவாகி வருகிறது.

ஸ்பெயின் நாட்டவர் பலர் இப்





போட்டிகளை நடத்தத் தாராளமாக நிதியுதவி செய்துள்ளார்கள். ஆனால், எல்லோரையும் வியக்கச் செய்வது டீ.வி. 'ஸ்பான்ஸர்ஷிப்' உரிமைதான். இதன் மூலம் 610 மில்லியன் டாலர்கள் வருவாய் கிடைக்கப் போகிறதாம். சென்ற ஒலிம்பிக்ஸை விட இம்முறை கிடைக்க இருக்கும் மொத்த வருவாய் இரண்டு மடங்கு. இது ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் உயர வழி வகுக்கும்.

இதுவரை நடந்துள்ள 24 போட்டிகளில் 12 முறை பதக்கங்கள் வரிசையில் முதல் இடத்தில் வந்துள்ள அமெரிக்கா, இம் முறை அப்படி வருவது சந்தேகம்தான். ஏனெனில் இரண்டு ஜெர்மனியும் இணைந்திருப்பது இப்பொழுது, அதற்குக் கடும் சவாலாக இருக்கும். சோவியத் ரஷ்யாவில் சமீபத்தில் நடந்துள்ள அரசியல் மாற்றங்கள் காரணமாக அமெரிக்காவுக்கு ரஷ்யாவின் சவால் முன்பு போல இராது. 'பால்டிக்' குடியரசுகள் மூன்றும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்துள்ளதும் மற்றவை 'காமன்வெல்த் ஆஃப் இன்டிபென்டன்ட் ஸ்டேட்ஸ்' (CIS) என்று அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் அமெரிக்காவிற்குப் 'பிளஸ்' பாயின்டாக இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, அது ஒலிம்பிக் போட்டிகளில் ஹாக்கியைத் தவிர வேறு எந்த விளையாட்டிலும் ஒரு பதக்கம் கூடப் பெற்றதில்லை. இதை1960 நீங்கலாக, 1928 லிருந்து 1964 வரை தொடர்ந்து பெற்றது. மறுபடி 1980ல் பெற்றது.

இந்தியா பார்சிலோனாவிற்கு 12 போட்டிகளில் பங்குபெற சுமார் 50 வீரர்கள் கொண்ட அணியை அனுப்ப உள்ளது. வில் - அம்புப் போட்டியில் பங்குபெற உள்ள லிம்பா ராம் மட்டும் ஏதாவது ஒரு பதக்கமாவது வாங்குவார் என்று எதிர்பார்க்கலாம். மற்ற போட்டிகளில் நம் வீரர்கள் முழு முனைப்புடன் ஆடலாம்; ஆனால் பதக்கம் கிடைப்பது பகல் கனவுதான்!

எவை என்ன செய்யும்?
- கோடை விடுமுறைப் போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர் தெரியுமா? 3684. இது உண்மையாகவே ஒரு சாதனைதான். கலந்து கொண்டவர்களின் ஆர்வத்தைப் பார்த்த போது மலைப்பாக இருந்தது. இது போதாது என்று முடிவு தேதியைத் தள்ளிப் போடும்படி ஏகப்பட்ட கடிதங்கள் வேறு! பலரும் சரியாகவே எழுதியிருந்ததால் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

சரியான விடை :

குரங்கு - தாவும்
மீன் - நீந்தும்
குதிரை - கனைக்கும்
சேவல் - கூவும்
மயில் - ஆடும்
குயில் - பாடும்
சலங்கை - ஒலிக்கும்
கிளி - பேசும்
கழுதை - உதைக்கும்
பாம்பு - சீறும்
ஒட்டகம் - சுமக்கும்
செருப்பு - கடிக்கும்
மாடு -முட்டும்
கம்பளிப்பூச்சி - அரிக்கும்
நரி - ஊளையிடும்
விளக்கெண்ணெய் - வழுக்கும்
தேன் - சொட்டும்
கண் - சிமிட்டும்
தவளை - தத்தும்
பட்டாசு - வெடிக்கும்
குருவி - கொத்தும்
முள்ளம்பன்றி - சிலிர்க்கும்
ஸ்கேல் - அளக்கும்
சங்கு - ஊதும்

ரூ. பத்து பரிசு பெறுவோர் :

1. ஜெ. சியாமளா, திருநாவலூர்
2. என். சண்முகம், தியாகதுர்க்கம்
3. எஸ். ஆர். சுதர்சன், கோட்டார்
4. எஸ். பிரசன்னா, சென்னை - 45
5. கு. இசையமுது, நிட்டக்குடி
6. வி. காயத்ரி, ஆண்டிமடம்
7. ஆர். சிவப்ரியா, சென்னை - 4
8. சித்தார்த்தி, கீழ்ப்புனல்வாசல்
9. கே. ஆதிரை, குரும்பல்
10. எம். நிலவர்நிசா, புத்தூர் அஞ்சல்
11. எம். ஆபிரகாம், மேலூர்.
12. எஸ். பிச்சையா, கடையம் அஞ்சல்
13. அ. பாத்திமா பர்வீன், நீடூர்
14. இ. திருவீசர், தேவகோட்டை
15. ந. பழனிச்சாமி, சென்னை - 28.

பரிசு பெற்றவர்களுக்கும், போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்லாயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். நன்றி!.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 3[illegible]/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-

துடிப்பூட்டும் சக்தி இதோ!





டர்போ!
சத்தான பால் கொண்டு
தயாரிக்கப்பட்ட
புத்துணர்வூட்டும்
சாக்கலேட் பார்.


சக்தியளிக்கும் சாக்கலேட்!

Campco

இந்தியாவின் மிகப்பெரிய, மிக நவீன ஆலை அளிப்பது
காம்ப்கோ லிமிடெட், மங்களூர்

R K SWAMY/BBDO CL 10101

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka



உல்லாசம் பெறுவீர், வியப்பூட்டும் துணிகர விளையாட்டுகளில்

இலவசப் பரிசுகள் - மேகி கிளப் உறுப்பினர்களுக்கு!

வஞ்சகமான எதிரிகளை
சாதுரியமாக முறியடியுங்கள்.
மேகி ரெய்டர்ஸ் ஆஃப்
தி ரெட் ஸ்டார்
விளையாட்டில்!





ஹல்லோ! மேகி கிளப்பில் சேருங்கள்: மேகியின் துணிகர உலகிற்குள் செல்லுங்கள். ஐந்து மேகி நூடுல்ஸ் காலி பேக்குகளிலிருந்து அதன் முன்பக்கத்தில் உள்ள இந்த முத்திரையை வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள் - உங்களுக்குப் பிடித்த இலவசப் பரிசைப் பெற, ஆறு முதல் எட்டு வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து குதூகலமளிக்கும் பரிசு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மறவாதீர்! உங்களுக்கு விருப்பமானப் பரிசைக் குறிப்பிட்டு எழுதும்போது, உங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி ஆகியவற்றையும் எழுதுங்கள். ஏற்கனவே நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால், உறுப்பினர் எண்ணையும் எழுதுங்கள். இதுவரை உறுப்பினராக ஆகவில்லை என்றால் இப்போது வருகிறது வாய்ப்பு! மேலே உள்ள விவரங்களை எழுதும்போது, உறுப்பினராக விரும்புவதையும் தெரிவியுங்கள். இலவசப் பரிசுடன், இலவச மேகி கிளப் உறுப்பினர் அட்டையையும் உங்களுக்கு அனுப்புவோம்.

இலவசம்! மேகி "வோர்ல்ட் ஆஃப் அனிமல்ஸ்" புதிர்! ஒவ்வொரு 2 இலவசப் பரிசுகளுக்கும் உங்களுக்கு ஒரு மேகி "வோர்ல்ட் ஆஃப் அனிமல்ஸ்" புதிர் இலவசமாகக் கிடைக்கும்.

எங்கள் முகவரி :

MAGGI CLUB
P.O. Box 5788 New Delhi-110 055



மேலும் ஒரு சலுகை: இதுவரை மேகி போட்ட ஹவுஸைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்

HTA 777